# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-14
Issue-4

ஏப்ரல்-2021 (ஷாபான்-1442)


விலை ரூ. 20/-




## 22 வருடங்களுக்குப் பிறகு அப்பாவிகள் என்று விடுதலை செய்யப்பட்ட 127 முஸ்லிம்கள்



## தேர்தல் ஆணையத்தின் அப்பட்டமான அநீதிகள்




## ரமழான் மாதத்தின் முக்கியத்துவம்



தொடரும் தாஃவா - வளரும் இஸ்லாம்

## 41-ஆம் ஆண்டில் தாஃவா

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

“

மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்;

(அல்குர்ஆன் 4 : 1)

”


22 வருடங்களுக்குப் பிறகு அப்பாவிகள் என்று விடுதலை செய்யப்பட்ட 127 முஸ்லிம்கள் - 4
தீவிரவாத வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் செய்த முயற்சி - 6
இந்த வருடத்தில் தலித் சமூகத்தினர் மீது நடந்த தாக்குதல்கள் - 10
ரமழான் முபாரக் -13
தேர்தல் ஆணையத்தின் அப்பட்டமான அநீதிகள் - 14
மேற்கு வங்கத்தில் தேர்தல் ஆணையத்தில் பாசிச போக்கு! - 17
உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் - 19
ரமழான் மாதத்தின் சிறப்புகள் - 20
தலித்கள் மீதான் தாக்குதல் அதிகரிப்பு - 22
பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் – 23
இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) - 26
கவிஞர் வாலியின் இஸ்லாமிய உறவு - 30
41–ஆம் ஆண்டில் தாஃவா - 33
தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிரான நாள் - 46
எது முதலில் நூல் வெளியீட்டு விழா – 48
சிலுவைப்போர்கள் 2.0 - 51
தலையங்கம் - 54
இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்? - 56
மருத்துவம் - 61
மகளிர் மன்றம் - 63



ஏப்ரல்–2021

# வைகறை வெளிச்சம்

ஷாபான்–1442

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,

தனி இதழ் : ரூ. 20 /–
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /–
வெளி நாடு : ரூ. 3000 /–
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**கொள்கை வழியில் :**
செய்தி மடல், விடியல் வெள்ளி, ஆகியவற்றின் தொடர்ச்சி

http:/www.facebook.com/vaigarivelicham

விளம்பரங்களுக்கு 81481 29887

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

# 22 வருடங்களுக்குப் பிறகு அப்பாவிகள் என்று விடுதலை செய்யப்பட்ட 127 முஸ்லிம்கள்

2001ல் சிமி இயக்கம் தடை செய்யப் பட்டு இரண்டு மாதத்திற்கு பிறகு குஜராத் மாநிலத்தில் *127* தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்ட கூடியிருக்கும் போது கைது என்ற முதற்பக்க செய்திதாள்களுடன் *127* பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் கைது செய்யப்படும் போது அவர்களிடம் இருந்து தீவிரவாதத்தை பரப்பும் புத்தகங்கள், நோட்டீஸ்கள் பெறப்பட்டதாக காவல்துறை எப்போதும் போல ஊடகங்களுக்கு தெரிவித்தன. இதை காட்சிப்படுத்தி எப்போதும் போல முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக பெரும் பிரச்சாரத்தை ஊடகங்கள் மேற்கொண்டன.

மார்ச்-*6, 2021* அன்று சூரத் நீதிமன்றம் *2001*-ல் கைது செய்து UAPA பிரிவின் குற்றம் சாட்டப்பட்ட *127* பேரையும் அப்பாவிகள், அவர்கள் குற்றம் செய்தார்கள் என்பதற்கான எந்த ஆதாரங்களும் இல்லையென்று கூறி வழக் கிலிருந்து விடுதலை செய்தனர்.

அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டதுபோல், தடை செய்யப்பட்ட சிமி இயக்கத்தவர்கள் ஒன்று திரண்டு சிமி அமைப்பை வலுப்படுத்த கூடினார்கள் என்பதற்கு போதுமான ஆதாரம் இல்லை. கைது செய்யப்படும் போது அவர்கள் தப்புவதற்கான முயற்சிகளும் செய்யவில்லை. அவர்கள் கல்வியாளர்களை கொண்டு "சிறுபான்மையினருக்கான சட்ட உரிமைகள்" என்ற ஒரு கல்வி வழிகாட்டி நிகழ்ச்சியை எந்த ஆயுதங்களும் இல்லாமல் நடத்தினார்கள் என்று தெரிய வருகிறது என சூரத் தலைமை உயர் நீதிமன்ற நீதிபதி அமித்குமார் தேவ் கூறி விடுதலை செய்தார்.

கைது செய்யப்பட்ட *127* பேரில் தீர்ப்பு வருவதற்கு முன்னரே ஏழு பேர் தீவிரவாத முத்திரையுடனே இறந்து விட்டார்கள். ஐந்து பேர் இதே போல் தங்கள் மீது புனையப்பட்ட வெவ்வேறு குற்றங்களுக்காக சிறையில் இருக் கிறார்கள். நான்கு பேர் உடல் நலிவுற்று படுக்கை யில் ஓய்வு எடுக்கிறார்கள்.

இவர்கள் அனைவருமே 10 மாதத்தில் இருந்து ஒரு வருடம் வரை சிறை தண்டனை அனுபவித்த பிறகு பிணை கிடைத்து வெளியில் வந்தவர்கள். *2002*ல் காவல்துறை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த போதே இவர்கள் மேல் போதுமான ஆதாரம் இல்லையென்ற அடிப்படையில் தான் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டது.



இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட ஒருவரான 85 வயதுடைய மௌலானா ஆத்தூர் வாஸ்தி சக்கர நாற்காலியுடன் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார், அவர் சொல்லும் போது, "நாங்கள் கைது செய்யப் பட்ட போது எங்களை ஒருவர் கூட காது கொடுத்து கேட்கவில்லை. எங்களுடன் அனை வருமே பேச தயங்குவார்கள். இந்த 22 வருடங்கள் இந்த நாட்டின் தேசதுரோகியாகவே பாவிக்கப்பட்டு நடத்தப்பட்டேன். நான் மரணிக்கும் முன்பாகவே இந்த பழி நீங்கியது ஒன்று தான் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது." என்றார்.

இதில் பாதிக்கப்பட்ட மற்றொருவரான சித்திக் சொல்லும் போது, "நாங்கள் வெளியேறும் போது எங்களுக்கு தேசத்துரோகி என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. நாங்கள் சிறையில் இருந்து வெளிவந்த பின் நாங்கள் ஏதோ பெரும் பாவம் செய்தது போல எங்கள் சொந்தங்களும், பக்கத்து வீட்டுக்காரர்கள் கூட விலகிச் செல்ல ஆரம்பித் தார்கள். இந்த தேசத்துரோக முத்திரை என் வாழ்க்கையை மட்டும் பாழாக்கவில்லை. எங்கள் வியாபாரத்தையும் நசுக்கியது. அனைவரும் பொருளாதார ரீதியாக எங்களுக்கு உதவி செய்ய கூட தயங்கினார்கள்." என்றார்.

இதுபோல் இந்தியாவில் முஸ்லிம்கள் பல அண்டுகளுக்கு பிறகு விடுவிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான வழக்குகள் இருக்கிறது. அதனை நாம் ஒவ்வொரு மாத வைகறை வெளிச்சத்திலும் தொடர்ச்சியாக பதிவு செய்திருக்கிறோம்.

முஸ்லிம்கள் ஒரு வழக்கில் கைது செய்யப் பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டால் கூட சமூ கத்தில் அவர்களின் வாழ்க்கை மிக கடிமானதாக இருக்கிறது, இந்த வழக்கில் விடுவிக்கப்பட்ட 127 பேரும் எந்த குற்றமும் செய்யாமல் 22 வருடங்கள் மனதளவிலும், சமூகத்தின் புறக் கணிப்புகளுக்கும் உள்ளாகி பல்வேறு துன்பங் களுக்கு உள்ளாக வேண்டியிருந்தது, இவர்கள் கைது செய்யப்படும் போது அதனை செய்தி யாக்க ஆர்வம் காட்டிய ஊடகங்கள் அவர்களின் விடுதலையையும் 22 வருட கொடுமையை பதிவு செய்யவும் ஆர்வம் காட்டவில்லை.

(source – Indian Express 07.03.2021)

அபூ சித்திக்

# இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் மீதான தடை

நாட்டில் இந்துத்துவ பாசிஸ்ட்டுகள் பலநூறு குண்டு வெடிப்புகளை நடத்தினார்கள் பழியை இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்த்தின் மீது போட்டார்கள்.

பொய்யையும் புனைந்துரைகளையும் சொல்லி இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தை 2000 ஆம் ஆண்டு தடை செய்தார்கள்.

இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம் 1974–75 நெருக்கடிநிலை உரிமைப் பறிப்புகளுக்கு எதிராக தொடங்கப் பெற்றது என்று குறிப்பிடத்தக்கது.

கடந்த 21 ஆண்டுகளில் இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் மேல் புனையப்பட்ட வழக்குகள் அனைத்தும் பொய் என நிரூபிக்கப்பட்டது. அனைத்தையும் அவ்வப்போது 'வைகறை வெளிச்சத்தில்' விபரமாகத் தந்துள்ளோம்.

ஆனாலும், அதன் மீதான தடை தொடருகின்றது. அந்த இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் மீது விதித்தத் தடைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. அது உச்ச நீதிமன்றத்தில் 21 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. அதனை விசாரணைக்குக் கொண்டுவர தொடரப்பட்ட அத்தனை மனுக்களையும் வாங்கி வைத்துக் கொண்டு மௌனம் காக்கின்றது. இப்போதைய உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியையும் வீழ்ச்சியையும் கடந்து உச்ச நீதிமன்றம் நிமிர்ந்தால் ஒருவேளை நீதி கிடைக்கலாம். இன்ஷா அல்லாஹ்.

- MGM

# தீவிரவாத வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் செய்த முயற்சி

அப்துல் வாஹித் சேக் (43) ஒன்பது வருட சிறைவாசத்தை அனுபவித்த பின் 2015 செப்டம்பர் 12 அன்று விடுதலையானார்.

செய்யாத குற்றத்திற்காக 9 ஆண்டு சிறையில் கழித்த அவர் வெளியே வரும்பொழுது இனிமேல் நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற முடிவில் தெளிவாக இருந்தார்.

சிறையிலிருந்த இறுதி நாளன்று தன்னோடு இருந்த சக கைதிகளிடம் ஒரு உறுதிமொழியை தந்தார். உங்களின் கதைகளை இவ்வுலகத்திற்கு எடுத்துக் கூறுவேன். அதன்மூலம் நீங்கள் யாவரும் அப்பாவிகள் என்பதையும் உங்கள் மீது வழக்குகள் திணிக்கப் பட்டுள்ளன என்பதையும் மக்கள் புரிந்து கொள்வார்கள்.

சிறையில் இருந்து வெளியே வருபவர்கள் தங்களுடன் நேரத்தையும், இடத்தையும், சிறை வாழ்க்கையின் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டவர்களிடம் இது போன்ற வாக்குறுதி களை கொடுப்பது ஒன்றும் புதிதான அரிதான செயல் அல்ல. வழக்கமாக நடப்பதுதான். ஆனால் அப்துல் வாஹித் வாக்குறுதி கொடுத்துவிட்டு சும்மா இருந்துவிடவில்லை. கடந்த ஆறு ஆண்டு காலத்தில் தன்னுடன் இருந்த சக கைதிகளை பற்றியும் இந்தியா முழுவதும் பொய்யாக ஜோடிக்கப்பட்ட தீவிரவாத வழக்குகளில் சிறைவாசத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான மற்ற முஸ்லிம் கைதிகளின் கதைகளைப் பற்றியும் அவர்கள் அப்பாவிகள் என்பதையும் பற்றிய விழிப்புணர்வை மக்களி டத்தில் ஏற்படுத்தினார்.

7/11 என்று அறியப்படும் மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட 13 பேரில் விடுதலையான ஒரே நபர் அப்துல் வாஹித். இந்த குண்டுவெடிப்பில் 188 பேர் இறந் தனர். 800 க்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். மகாராஷ்டிர தீவிரவாத எதிர்ப்பு படை இவர்களை Maharashtra control of organised crime (MCOCA) என்ற சட்டத்தின் கீழ் கைது செய்தது. மும்பை தடா சிறப்பு நீதிமன்றம் 5 பேருக்கு மரண தண்டனையும் 7 பேருக்கு ஆயுள் தண்டனையும் வழங்கியது.

தண்டனை கிடைக்கப்பெற்ற 12 பேரும் தன்னை விடவும் அப்பாவிகள் என்கிறார் அப்துல் வாஹித். அவர்கள் எந்த தவறையும் செய்ய வில்லை. குண்டுகளை வைத்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார் என்பதே அப்துல் வாஹிதின் மீது காவல்துறை கூறிய குற்றச்சாட்டு. நான் நிரபராதி என்றால் அவர்கள் எப்படி அதே வழக்கில் குற்றவாளிகளாக இருக்க முடியும்? உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியாமல் இவ்வழக்கில் அவர்கள் பலிகடா ஆக்கப்பட்டுள்ளனர் என்பதே வாஹிதின் கருத்து.

## சகோதரனுக்கு செய்யும் உதவியும் அப்பாவி சிறைக் கைதிகளும்

என்னைப் போல் அவர்களும் அப்பாவிகள். எனவே சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு மற்றவர் களை போல தங்கள் குடும்பங்களுடன் இணைந்து வாழ்வதற்கு தகுதியானவர்கள் அவர்கள் என நான் நம்புகிறேன். என்னை பொருத்தவரை அவர் களுக்காக போராடுவது என்பது ஜகாத் என்னும் தான தருமங்களை வழங்குவதை போன்றது. அதன்மூலம் நான் ஈடேற்றம் அடையலாம்.

(ஜகாத்- சமுதாயத்திற்கு செய்ய வேண்டிய கடமை. அதனை கொடுப்பதன் மூலம் ஒருவர் தன்னை பரிசுத்தப்படுத்தி மறுமை வாழ்க்கையில் வெற்றி அடையலாம்)

அதனாலேயே அவர்களைப் பற்றிய விழிப்பு ணர்வை ஏற்படுத்த வேண்டும். அவருடைய வழக்கில் உதவி செய்ய வேண்டுமென முடிவு செய்தேன். ஒருநாள் அவர்களுக்கு விடிவு காலம் பிறக்கும் என்கிறார் வாஹித்.

மும்பையில் அரசு உதவி பெறும் ஒரு பள்ளிக் கூடத்தில் அறிவியல் பாடத்தை தற்போது பயிற்றுவித்து கொண்டிருக்கிறார் வாஹித். சிறையிலிருந்து வெளிவந்த பின் இரண்டு புத்த கங்களை எழுதியுள்ளார். இரண்டுமே தீவிரவாத வழக்குகள் சம்பந்தப்பட்டவை. உருதுவில் எழுதப்பட்ட அவரின் முதல் புத்தகத்தின் பெயர் "அப்பாவி சிறைக்கைதிகள்". இப்புத்தகம் ஹிந்தி யில் மொழியாக்கம் செய்யப்பட்டு 2017 ஆம் வருடம் ஒரே நேரத்தில் இரு மொழிகளிலும் வெளியிடப்பட்டது. அவரின் இரண்டாவது புத்தகம் இஷ்ரத் ஜஹான் என்கவுண்டர் சம்பந்தப் பட்டது. விரைவில் வெளிவர இருக்கின்றது.

பல இடங்களுக்கு பயணம் செய்கிறார். புத்தக வெளியீடுகளிலும் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்கிறார். தேசிய மற்றும் சர்வதேச ஊடக நிறுவனங்களுக்கு பேட்டி கொடுக்கிறார். இப்படி புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்கிறார். தன்னுடைய சக கைதிகளின் மீது திணிக்கப்பட்ட கைதுகளின் விவரங்கள், அவர்கள் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் உண்மை தன்மை இவை மட்டுமின்றி தன்னுடைய புத்தகத்தில் அக்ஷர்தம் கோவில் தாக்குதல் (குஜராத் 2002), அவுரங்காபாத் ஆயுத குவியல் வழக்கு (மகாராஷ்ட்ரா 2006), மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கு (மகாராஷ்டிரா 2006) மற்றும் முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப் பட்டு விடுவிக்கப்பட்ட இதுபோன்ற வழக்கு களின் விவரங்களை பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார்.

வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட நபர் தன்னுடன் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அப்பாவிகள், அநீதியான முறையில் அவர்கள் சிறையில் வாடுகின்றனர் என்று பேசிடும் போதும், பிரச்சாரம் செய்திடும் போதும் அது மக்களிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என நம்புகின்றார் வாஹித். ஏனெனில் அவர் தன்னு டைய அனுபவங்களை எடுத்துக் கூறுவதால் மக்கள் அதனை எளிதில் மறுத்துவிட முடியாது.

என்னைப் போன்று எத்தனை பேருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதைப் பற்றிய எந்த ஒரு விழிப்புணர்வும் மக்களிடத்தில் இல்லை என்பதை மாணவர்கள், பொதுமக்கள் இவர்களி டம் உரையாடிய பின் உணர்ந்து கொண்டேன். இந்த அநீதிகளை பற்றி புரிய வைத்திடும் எந்த ஒரு செயல் முறையும் இங்கே இல்லை. உண்மை என்னவெனில் இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் பார்த்துக் கொள்வதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன.

ஏனெனில் இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டால் நடவடிக்கை எடுக்க சொல்லி அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுப்பார்கள் அல்லது அரசின் மீது பொறுப்பு சாட்டுவார்கள் என்பதற் காக மக்கள் எதையும் தெரிந்து கொள்ளாமல் இருப்பதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன என்கிறார் வாஹித்.

## முஹம்மது அமீர் கான்

டெல்லியை சேர்ந்த அமீர்கான் (40) பல தீவிரவாத வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு 14 வருடங்கள் சிறையில் கழித்தவர். வாஹிதின் கருத்தையே இவரும் ஆமோதிக்கிறார்.

"தீவிரவாத முத்திரை: அப்பாவி என நிரூபிக்க நான் மேற்கொண்ட 14 வருட போராட்டம்" என்ற புத்தகத்தை அமீர் எழுதியுள்ளார். 2012-இல் விடுதலையான பின்பு சமூக செயற்பாட் டாளராகவும் சட்ட ஆலோசகராகவும் தனது பயணத்தை தொடர்கிறார். பல மொழிகளில் இவரின் புத்தகம் மொழியாக்கம் செய்யப்பட் டுள்ளது. தவறான குற்றச்சாட்டுகளின் அடிப் படையில் சிறைத்தண்டனை, அதனால் என்னென்ன பாதிப்புகள் தனி மனித வாழ்க்கை யிலும் குடும்பத்திலும் சமூகத்திலும் ஏற்படு கின்றன என்பதைப் பற்றிய விழிப்புணர்வை நாட்டின் பல பகுதிகளுக்கு பயணம் செய்து ஏற்படுத்தியுள்ளார்.

தீவிரவாத குற்றம் சாட்டப்பட்ட வழக்கை நடத்திட எல்லோரும் முன் வந்திடாத நிலையில் எனக்கு ஒரு நல்ல வழக்கறிஞர் கிடைத்தது நான் செய்த அதிர்ஷ்டம். அதைப் போன்றே விடுதலையான பின்பும், சமூகத்தில் இருந்தும் ஊடகத் துறையில் இருந்தும் எனக்கு கிடைத்த ஆதரவினால் என்னுடைய வாழ்க்கையை மீண் டும் கட்டியெழுப்ப முடிந்தது. ஆனால் வழக்கி லிருந்து விடுவிக்கப்பட்ட மற்ற எல்லோருக்கும் இதைப் போன்ற ஆதரவு கிடைப்பதில்லை. அவர்கள் அதற்கு உரித்தானவர்களாக இருந்தும்




கூட. எனவே அவர்களுக்காக பேசிடுவதும் உதவுவதும் என்னைப் போன்றவர்களுக்கு முக்கியமான அவசியமான ஒன்று. இதில் சிரமங் களும் ஆபத்துக்களும் இருப்பினும் கூட.

அனுபவத்தை பகிர்ந்து கொள்ள கோரி பல தேசிய சட்டக்கல்லூரிகளில் இருந்து தொடர்ந்து அழைப்புகள் அமீருக்கு வந்துகொண் டே இருக் கின்றன. எந்த குற்றமும் செய்யாமல் சிறையில் வாடி கொண்டிருப்பவர்களை பற்றி எடுத்துரைப் பதற்கு வரும் இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்கிறார். என்னுடைய அனுபவத்தை பற்றி பேசுவது என்பது என்னைப் பற்றி மட்டும் கூறுவதல்ல. என்னுடைய உரையின் மூலம் குற்றவியல் நீதி அமைப்பில் இருக்கும் தவறு களை சுட்டிக்காட்டுகிறேன். எதனால் அவை உடனடியாக மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறுகிறேன் என்கிறார் அமீர்.

ஹரியானா சோனிபட் நகரில் அமைந்துள்ள ஜிண்டால் சட்டக்கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிகிறார் அனுராக் பாஸ்கர். நம்முடைய குற்றவியல் நீதி அமைப்பில் சில ஓட்டைகள் உள்ளன. முஸ்லிம்கள், ஆதிவாசிகள், பழங் குடிகள், இன்னும் மற்ற இதர ஒடுக்கப்பட்ட சமூகத்திற்கு எதிராக நிர்வாக ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் பாகுபாடுகள் நிலவு கின்றன என்பதை ஆராய்ச்சிகள் கூறுகின்றன. எனினும் அதைப்பற்றிய விவாதங்கள் சட்டக் கல்லூரிகளில் நடப்பது அரிது. எனவே தங்களு டைய அடையாளத்தின் காரணமாக குறிவைக் கப்பட்டு பாதிப்புக்கு உள்ளானவர்களின் கதைகள் வெளி உலகத்திற்கு தெரிய வேண்டு மென எண்ணினேன். அவர்களின் சொந்த அனுப வங்களும் கருத்துக்களும் நீதி அமைப்பை சீரமைக்கக்கூடிய விவாதங்களுக்கு உதவும் என்று நம்புகிறார் அனுராக். ஒருமுறை அமீர் கானை உரையாற்ற அழைத்துள்ளார் அனுராக். அமீர்கானின் சொந்த அனுபவங்கள் என்னு டைய வகுப்பில் பயிலும் சட்டக்கல்லூரி மாண வர்களின் மனங்களை உணர்வுரீதியாக தட்டி எழுப்பி உள்ளன. வகுப்பிற்குப் பின், பலர் என்னிடம் வந்து குற்றவியல் நீதித்துறை யால் ஏற்படும் பாதிப்புகளை உணர முடிந்தது என்று கூறினர். இதுவரை கலந்து கொண்ட வகுப்புகளில் இதுவே மிகச்சிறந்த வகுப்பு என்று சில மாணவர்கள் என்னிடம் கூறினர் என்கிறார் அனுராக்.

அமீர்கானை மறுபடியும் அழைத்து தன்னு டைய மாணவர்களிடம் கலந்துரையாட செய்யும் திட்டமும் அனுராக்கிடம் உள்ளது.

அப்துல் வாஹிதாக இருக்கட்டும் அல்லது அமீர் கானாக இருக்கட்டும். அநீதியான முறை யில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்று தந்திட வேண்டி சமூக செயற்பாட்டாளர் களாகவும் பிரச்சாரகர்களாகவும் மாறி பணி யாற்றுவது என்பது சுலபமான விஷயம் அல்ல. தங்களுடைய பாதுகாப்பையும் எதிர்காலத்தை யும் மட்டும் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை மாறாக குற்றம்சாட்டப்பட்டவர்கள் உடைய குடும்பங்கள் உறவினர்கள் இவர்கள் அனைவரை யும் பற்றி கவலை கொண்டே களத்தில் பணி யாற்றுகிறார்கள். மறுபடியும் பொய்யான வழக்குகளில் அவர்கள் கைது செய்யப்படுவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. அதுபோன்ற ஒரு சூழ்நிலை உருவாகி விடுமோ என்று பயப்படு கிறார்கள் அவர்களின் குடும்ப உறவினர்கள். இது கற்பனையான பயம் என்று சொல்லிவிட முடியாது என்கிறார் வாஹித். ஏனெனில் எந்நேர மும் அவர்கள் கண்காணிக்கப்பட்டு கொண்டே இருப்பதாகவே உணர்கிறார்கள்.

நீதிமன்றத்தால் கௌரவமாக விடுவிக்கப் பட்ட பின்பும் அவர்கள் தீவிரவாதிகள் என்று சித்தரிக்க தங்களாலான எல்லா முயற்சிகளையும் எடுக்கின்றன மாநில உளவுத்துறைகள்.

உதாரணமாக, ஜூலை 2019 இல், சிமி

அமைப்பை தடை செய்யும் ஆணையில், அப்துல் வாஹிதின் பெயரும் இடம் பெற்றிருந்தது. பெயரை அதிலிருந்து நீக்க அவர் டெல்லி உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளார். சில மாதங்களுக்கு முன்பு கூட அவருக்கு சம்பந்தமில்லாத வழக்குகளில் அவரை போலீசார் விசாரணை செய்துள்ளனர்.

## பிலால் காக்ஜி

வழக்கறிஞராக சூரத்தில் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார் பிலால் (38). தீவிரவாதம் தொடர்புடைய வழக்குகளில் 2008ஆம் வருடம் நான்கு மாதங்கள் சிறையில் கழித்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் காவல் துறையின் அத்துமீறல்கள் இவற்றை பற்றி நான் மனு அளித்து வருகிறேன். நான் இதனை நிறுத்தாவிட்டால், என்கவுண்டரில் சுட்டுக் கொன்று விடுவதாக என்னை காவல்துறையினர் மிரட்டுகின்றனர் என்கிறார் பிலால். 6 பொய் வழக்குகள் அவர் மீது போடப்பட்டுள்ளன. இதில் 2 வழக்குகளிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சூரத் காவல்துறை பிலாலின் பெயரை பொய்யாக இணைத்ததற்காக ஒரு லட்சம் ரூபாய் இழப்பீடு தொகையை ஏன் இன்னும் அரசு கொடுக்கவில்லை என்று கேட்டு, கடந்த வருடம் குஜராத் தலைமைச் செயலாளருக்கு அறிக்கை அனுப்பியது தேசிய மனித உரிமை ஆணையம். இந்த ஆணையை எதிர்த்து அரசும் முயற்சி செய்துள்ளது. எனக்கு இழப்பீடு கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்பதைப் பற்றியோ அல்லது மீண்டும் என்னை வழக்கில் இணைத்து விடுவார்கள் என்பதை பற்றியோ எனக்கு கவலை இல்லை. நான் அநீதிக்கு எதிராக தொடர்ந்து போராடுவேன். சட்டம் படித்த என்னை போன்றோர்களே மிரட்டப்படுகிறார்கள் என்றால் சாதாரண குடிமக்களின் நிலைமை மிகவும் மோசமானதாகவே இருந்திடும் என்று குறிப்பிடுகிறார் பிலால்.

தீவிரவாதிகள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்களை பற்றி கூறப்பட்ட கதைகள் கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தொடங்கியுள்ளதை உணர முடிவதாக கூறுகிறார் முஹம்மது அமீர்.

அவரை கடத்தி, சித்திரவதை செய்து, தீவிரவாத முத்திரை குத்தி, 18 வழக்குகளில் இணைத்த போது அவர் ஒரு அப்பாவி என்று பேசிட பலரும் முன் வரவில்லை. ஆனால் இன்று, வழக்குகளை எடுப்பதற்கும் அவர்களுக்காக குரல் கொடுப்பதற்கும் முன் வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. விரைவிலோ அல்லது சில காலம் கழித்தோ தீவிரவாத வழக்குகளில் பொய்யாக குற்றம்சாட்டப்பட்டவர்களும் என்னுடன் இருந்த சக கைதிகளும் விடுதலை அடைவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என நம்புகிறார் அப்துல் வாகித் ஷேக். ஆனால் அது நடக்க வேண்டுமென்றால் இந்த முயற்சியை நாம் தொடர்ந்து உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் வாஹித்.

## தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்டின் முயற்சி

**கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தீவிரவாத வழக்குகள் பற்றிய விழிப்புணர்வையும் அதில் முஸ்லிம்கள் வேண்டுமென்றே சிக்க வைக்கப்படுகிறார்கள் என்பதையும் தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் செய்துள்ளது தாருல் இஸ்லாம் பவுண்டேசன் டிரஸ்ட். பல இடங்களில் காவல்துறையின் எதிர்ப்பை சமாளித்து கூட்டங்களை நடத்தி உள்ளது. உண்மையை மறைக்க போட்ட பல தடைகளை கடந்து வந்துள்ளது. உண்மையில் தீவிரவாத செயல்களை செய்தது யார்? முஸ்லிம்கள் ஏன் பலிகடா ஆக்கப்படுகிறார்கள் என்ற தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் இன் பிரச்சார பயணம் தொடர்கின்றது.**

– அபூஹாசின்

தகவல்கள் : FRONTLINE



# இந்த வருடத்தில் தலித் சமூகத்தினர் மீது நடந்த தாக்குதல்கள்

தற்போது கர்ணன் என்ற திரைப்படம் வெளியாகியிருக்கிறது. இது ஒடுக்கப்படும் தலித் அரசியலை பேசுகிறது. ஆனால் அதற்கு விமர்சனமளிக்கும் பலர் தலித்கள் மீது கொடுமைகள் நிகழ்த்தப்பட்டது அந்த காலம். தற்போதெல்லாம் அந்த சூழல் இல்லையென்று ஒரு வாதத்தை முன் வைக்கிறார்கள்.

நாம் வைகறை வெளிச்சம் வழியாக தலித் மக்கள் மீது நிகழ்த்தப்படும் அநீதிகளை தொடர்ச்சியாக ஆவணப்படுத்தி வருகிறோம். அதில் இந்த 2021 தொடங்கி தற்போது வரை (ஏப்ரல் 10,2021) நடைபெற்றுள்ள அநீதிகளை தருகிறோம்.

### ஜனவரி-01

மஹேஸ்வரி மற்றும் ஆதம் என்ற இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள். ஆதம் தலித் சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் BC சமூகத்தை சேர்ந்த மஹேஸ்வரி குடும்பத்தினர் திருமணத்தை எதிர்த்தனர்.

இறுதியில் காவல்துறையில் பாதுகாப்பு கேட்டிருந்தனர். அதன் பிறகும் மஹேஸ்வரியின் குடும்பத்தினர் ஆதம்மை கொலை செய்ததாக மஹேஸ்வரி கூறுகிறார்.

### ஜனவரி-21

ஆந்திராவின் கோதாவரி மாவட்டத்தில் 18 வயதுடைய இரண்டு தலித் இளைஞர்கள் பொய்யான குற்றச்சாட்டின் பெயரில் திருட்டில் ஈடுபட்டதாக கூறி 12 மணி நேரத்திற்கு மேலாக உயர் சாதி மக்களால் கொடூரமாக தாக்கப்பட்டார்கள்.

### ஜனவரி-28

தமிழகத்தின் கோவையில் உள்ள துடியலூரை சேர்ந்த தலித் பெண் ஒருவர் குடும்பத்துடன் அப்பகுதியில் உள்ள கோவிலுக்குள் நுழைய முற்பட்ட போது அங்கே உள்ள கடையினரால் நிறுத்தப்பட்ட இங்கே தலித்களுக்கு நுழைய அனுமதியில்லை. வெளியிலிருந்து சாமி கும்பிடுங்கள் என்றிருக்கிறார். இதை தொடர்ந்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்து பிரச்சனை முடிவுக்கு வந்திருக்கிறது.

### ஜனவரி-30

தமிழகத்தின் மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டியில் மூன்றாம் ஆண்டு பட்டப்படிப்பு படித்து வரும் தலித் மாணவரான பாரதிதாசன் முடி வெட்டுவதற்காக சலூன் கடைக்கு சென்றுள்ளார்.

அங்கிருந்த ஒருவர் நீ என்ன சாதி என்று கேட்டிருக்கிறார். அதன் பிறகு சாதிப்பெயரை கூறி அந்த இளைஞனை தாக்கியிருக்கிறார்கள்.

### பிப்ரவரி-02

தமிழகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பாபநாசம் பகுதியில் தினக்கூலியாக வேளை பார்க்கும் 24 வயதுடைய ராகுல் என்ற தலித் சமூகத்தை சேர்ந்த இளைஞரை ஆதிக்க சாதி மக்கள் நான்கு பேர் சேர்ந்து திருட்டு குற்றச் சாட்டை சுமத்தி கொடுமையாக தாக்கினார்கள். அதை வீடியோவாக எடுத்தும் சமூக வலைத் தளத்தில் போட்டார்கள்.

காவலர்கள் நான்கு பேரை கைது செய்து வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்தனர்.

## பிப்ரவரி-02

தமிழகத்தில் சேலம் மாவட்டத்தை சேர்ந்த வன்னிய சமூகத்தை சேர்ந்த ரேனுகா தேவி தலித் சமூகத்தை சேர்ந்த பெருமாளை திருமணம் செய்து கொண்டார்.

ரேனுகா நான்கு மாத கர்ப்பிணியாக பெருமாளின் வீட்டில் இருந்த நிலையில் தனக்கு உடல்நிலை மிக மோசமாக உள்ளது என பெற்றோர் கூறியதில் நம்பி பெற்றோர்களை பார்க்க வந்திருக்கிறார். அப்போது அவரை அடைத்து வைத்து கட்டாயப்படுத்தி நான்கு மாத கருவை தாயின் விருப்பமின்றி கலைத் திருக்கிறார்கள்.

ரேனுகாவின் கணவன் பெருமாள் நீதி மன்றத்தை அணுகிய பிறகு ரேனுகா பத்திரமாக மீட்கப்பட்டிருக்கிறார்.

## பிப்ரவரி-12

ஹரியானா மாநிலத்தின் கர்ணல் மாவட்டத் தில் தலித்கள் வாழும் பதியொன்றை உயர் சாதி மக்கள் தாக்கியிருக்கிறார்கள். தலித்களின் வீடுகள், பொருட்கள் இதில் தீக்கிரையாக்கப்பட் டிருக்கிறது.

## பிப்ரவரி-17

குஜரத்தின் பாலான்பூர் பகுதியில் ஒரு திருமண விழாவில் தலித் சமூகத்தை சேர்ந்தவர் தலையில் உயர் சாதியினர் அணிவது போலான டர்பன் அணிந்ததற்காக மிரட்டப்பட்டிருக்கிறார். இது ராஜபுத்திரர்கள் அணிவது நீ அணியக்கூடாது என்று மிரட்டப்பட்டிருக்கிறார்.

## பிப்ரவரி-28

திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த 21 வயதான ஜெயஶ்ரீ படிக்கும் போதே தன் படிப்பு செலவுக்காக ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். அங்கு ஆதிக்க சாதியை சேர்ந்த பெரிய மனிதருடைய மகனுக்கும் இவருக்கும் உறவு நீடித்து வந்திருக்கிறது.

ஜெயஶ்ரீ திருமணம் செய்துகொள்ள வலியுறுத்தியபோது தன் வீட்டில் தலித் பெண்ணை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை உணர்ந்து தன் சகாக்களுடன் அவரை படுகொலை செய்து விட்டார் என்று காவல் துறை குறிப்பிடுகிறார்கள். இதனை கவுரவ படுகொலையாக விசாரிக்க வேண்டும் என்று அப்பகுதியின் விசிக கட்சியின் வலியுறுத்தியிருக் கிறார்கள்.

## பிப்ரவரி-28

உத்திரபிரதேச மாநிலத்தின் ஆக்ரா பகுதியில் 22 வயதான தலித் இளைஞர் பவன் குமார் உயர் சாதி பெண்ணை காதலித்த காரணத்தால் பெண் வீட்டாரல் கொடூரமாக தாக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

## மார்ச்-03

24 வயதான தலித் பெண் சமூக செயற் பாட்டாளராக இருக்கும் நௌதீப் கௌர் காவல் துறையால் ஊதிய உயர்வுக்கான போராட்டத்தில் ஈடுபடும் போது கைது செய்யப்பட்டார். 46 நாட்களுக்கு பிறகு பிணையில் வெளிவந்த நபர் காவலர்களின் சித்ரவதைகளை பற்றி ஊடகங் களுக்கு தெரிவித்தார்.

“என்னை காவலர்கள் கைது செய்து வேனில் ஏற்றி நான்கு ஆண் காவலர்கள் தங்கள் கால்மிதி களாலேயே கொடூரமாக தாக்கினார்கள். தாக்கும் போது நீ தலித் அதைப்போல் நடந்து கொள், உன்னுடைய வேலை மலத்தை அள்ளுவது, உனக்கு யார் பெரிய மனிதர்களுக்கு எதிராக போராட்டங்களை நடத்த அனுமதி கொடுத்தது” என்று கூறி தாக்கியதாக கூறினார்.

## மார்ச்-06

குஜராத் மாநிலத்தில் பாலான்பூர் மாவட்டத் தினுள் இருக்கும் கிராமத்தில் தலித் சமூகத்தை சேர்ந்த கல்லூரி பேராசிரியர் மொத்தம் 67 காவல்துறையினரின் பாதுகாப்போடு தனது கல்யாண நிகழ்ச்சியை நடத்தினார்.

தலித்கள் தங்கள் திருமணத்தின் போது குதிரை ஏறி வருவதை உயர் சாதியினர் விரும்பு வதில்லை. தனது திருமணத்தில் சாதி ரீதியாக பிரச்சனை வந்து விடக்கூடாது என்பதற்காக பாதுகாப்போடு திருமணம் செய்வதாக பேராசிரியர் தெரிவித்திருக்கிறார்.

## மார்ச்-13

கர்நாடகாவின் ஹரோகேரி என்ற கிராமத்தில் தலித்களுக்கு சலூன் கடைகளிலும், டீ கடை

களிலும் அனுமதி மறுக்கப்பட்டு இருந்தது. சமூக நோக்கம் கொண்ட ஒரு தாசில்தாரின் அறிவுறுத் தலுக்கு பிறகே இந்த நடைமுறைகளில் சிறு தளர்வு ஏற்பட்டிருக்கிறது.

### மார்ச்-15

உத்திரபிரதேசத்தின் லஹிம்பூர் மாவட்டத் தில் தலித் சமூகத்தை சேர்ந்த ஷாலு என்ற 30 வயதுடைய கர்ப்பிணி பெண் பொது குடிநீர் குழாயை பயன்படுத்தினார் என்பதற்காக மூன்று பிராமண சமூகத்தை சேர்ந்தவர்கள் சேர்ந்து கொடூரமாக தாக்கி கொன்றனர்.

தென்னிந்தியாவில் சாதிய கோட்பாட்டின் மூலக்காரணமாக இருக்கும் பிராமணர்கள் நேரடியாக வன்முறை செயலில் பெரும்பாலும் ஈடுபடுவதில்லை. ஆனால் வட இந்தியாவில் நிலை அப்படி இல்லை. பிராமணர்களில் ரவுடி களில், வன்முறைகளில் நேரடியாக ஈடுபடுபவர் களும் இருக்கிறார்கள்.

ஷாலுவின் கணவர் கஷ்யாப் இதைப் பற்றி கூறும் போது,

“உயர்சாதிக்காரர்களுக்கு நாங்கள் பேசினால், நடந்தால், சிரித்தால், நாங்கள் புது கார் வாங்கி னால், நாங்கள் எது செய்தாலும் அவர்களுக்கு பிடிக்காது. விலங்குகள் தண்ணீர் குடிக்கும் பொதுக்குழாய்களில் கூட நாங்கள் தண்ணீர் குடிக்க கூடாது. அவர்கள் நான் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழக்கூடாது அதனை செய்து விட்டார்கள்.” என்றார்.

### மார்ச்-15

பஞ்சாப் மாநிலத்தில் சங்ரூர் என்ற மாவட்டத் தில் தலித் சமூகத்தை சேர்ந்த 9 முதல் 13 வயது கொண்ட நான்கு சிறுவர்கள் 300 ரூபாய் பணம் திருடிவிட்டதாக கூறி அவர்களை அடித்து கை களை கட்டி நான்கு கி.மீ நடக்க வைத்திருக் கிறார்கள்.

### மார்ச்-28

மத்திய பிரதேசத்தில் உள்ள போபாலின் குணா மாவட்டத்தில் தலித் சமூகத்தை சேர்ந்தவரின் மனைவியின் சடலத்தை உயர் சாதியினர் தங்கள் பகுதியின் வழியாக எடுத்து செல்லக்கூடாது என மறுத்து விட்டனர்.

24 மணி நேர போராட்டங்களுக்கு பிறகு காவல்துறை பாதுகாப்புடன் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

### ஏப்ரல்-02

உயர்சாதி வகுப்பை சேர்ந்த பெண்ணை 22 வயதான தலித் சமூகத்தை சேர்ந்த ஹரேந்திர குமார் காதலித்தார் என்பதற்காக பெண்ணின் உறவினர்கள் 4 பேர் ஒன்று சேர்ந்து ஹரேந்திர குமாரை கடத்தி அவருடைய மர்ம உறுப்பில் இரும்பு ராடை திணித்து மிக கொடூரமான முறையில் தாக்கியுள்ளனர். தற்போது உயிருக்கு போராடி வருகிறார்.

ஹிரேந்திர குமார் அரசுப்பணிக்காக தீவிரமாக படித்து வருகிறார்.

### ஏப்ரல்-07

ஆந்திர பிரதேசத்தில் கல்லுமுடி பஞ்சாயத் துக்கு பகுதியின் பஞ்சாயத்து தலைவராக தேர்தலில் வெற்றி பெற்றவர் தலித் சமூகத்தை சேர்ந்த பக்கீரம்மா.

இவர் மாவட்ட அலுவலகத்திற்கு வரும் போது தலித் சமூகத்தை சேர்ந்த இவர் உள்ளே நுழையக்கூடாது என கதவை மூடி பூட்டு போட்டனர். தன்னை உள்ளே விடக்கோரியும், உயர் சாதியினரின் இச்செயலை கண்டித்தும் முற்றுகை போராட்டம் நடத்தினார் ஃபக்கிரம்மா.

### ஏப்ரல்-09

தமிழகத்தின் அரக்கோணம் பகுதியில் தேர்தல் நேரத்தில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக 20 வன்னியர் சமூகத்தை சேர்ந்த இளைஞர்கள் சேர்ந்து 5 தலித் சமூகத்தை சேர்ந்த இளைஞர் களை தாக்கியிருக்கிறார்கள். இதில் இருவர் உயிரிழந்தனர். மூன்று பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இது தனிப்பட்ட முறையில் நான் சேகரித்த தகவல்கள் மட்டுமே. இன்னும் கண்களில் படாத தலித்களுக்கு எதிராக நிகழும் கொடுமைகள் எத்தனையோ இருக்கின்றன.

இப்போது எங்கே தலித்களுக்கு இந்த நிலை என்று கேட்பவர்கள் இனி கேட்க மாட்டார்கள் என நம்புவோம்.

இந்து சமூகத்தில் இருக்கும் தலித் சமூகத்தை சேர்ந்த பிற சமூகங்களுக்கு இந்த கொடுமைகள் நிகழ்த்தப்படுவதில்லை. தலித்களுக்கு மட்டுமே நிகழ்த்தப்படுவதால் அவர்களுக்கான குரலை நாம் ஒலிக்கிறோம். அதற்கான தேவை நமக்கிருக் கிறது.

**– அபூ சித்திக்**



# ரமழான் முபாரக்

## அனைவருக்கும் ரமழான் வாழ்த்துகள்...

அன்பார்ந்த சகோதரர்களே! சென்ற ரமழானைப் போல் அல்லாமல், இந்த ரமழானில் நாம் நமது சிறப்பான தொழுகைகளை மஸ்ஜித்களில் நிறைவேற்றிடும் வாய்ப்பினை பெற்றிருக்கின்றோம். இதில் முயற்சிகளை மேற்கொண்ட அனைவருக்கும் அல்லாஹ் அருளை வழங்கிடுவானாக,

அந்தச்சிறப்பான தொழுகையில், பாலஸ்தீன், மியான்மர், கஷ்மீர், குஜராத், அசாம், இன்னும் இதுபோல் கொடுமைகளையும், குரூரங்களையும் எதிர்கொள்ளும் முஸ்லிம்களின் அவலங்களை அகற்றிட, துஆச் செய்வோம்.

அதேபோல் இந்தியாவைக் கவ்விப் பிடித்திருக்கும், பாசிசத்தின் பிடி உடையவும், இந்தியா இப்போது வீழ்ந்திருக்கும் வீழ்ச்சியிலிருந்து மீளவும், அதில் நாம் முக்கிய பங்காற்றிடவும், அந்த முயற்சிகளுக்கு அல்லாஹ் வெற்றியைத் தரவும் துஆச் செய்வோம்.

ஆங்கிலேயர்களின் கிடுக்கிப்பிடியிலிருந்து இந்தியாவை மீட்டதுபோல், இப்போது பாசிசத்தின் கைகளிலிருந்து இந்தியாவை மீட்க முயற்சிகளை மேற்கொள்வோம்.

பாசிசத்தின் கோரப்பிடியில் சிக்கிக்கொண்டவர்களில் அதிகமான கஷ்டங்களையும், உயிர் இழப்புகளையும் ஏற்றுக்கொண்டவர்கள் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள்தாம்.

அவர்களிடம் நாம் இஸ்லாத்தை எடுத்துச் சென்றபோது, அவர்கள் குறிப்பாக இளைஞர்கள், இளம் பெண்கள் – கல்லூரி மாணவர்கள் இவர்கள் காட்டிய ஆர்வம், அலாதியானது.

இந்திய இந்துத்துவ பாசிஸ்ட்டுகளின் பிடி இறுக, இறுக, ஜாதியம் வலுப்பெறுகின்றது. அதில் இருந்து நிரந்தர விடுதலையைப் பெற, இஸ்லாத்தை நோக்கி மக்கள் வருகின்றார்கள்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இஸ்லாத்தை இகமெங்கும் எடுத்துச் செல்லும் செயல்களுக்கும், களப்பணிகளுக்கும் முன்னுரிமை தருவோம்.

இன்ஷாஅல்லாஹ்இதில்முழுகவனத்தையும் செலுத்துவோம். இதில்41 ஆண்டுகளாககளத்தில் நிற்கும்எங்களோடு பயணியுங்கள். எல்லாமுயற்சிகளும் வெற்றி பெற, இந்த புனித ரமழானில் அல்லாஹ்விடம் அல்லும், பகலும் துஆ செய்வோம். அல்ஹம்துலில்லாஹ்.

இவண்

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம், வைகறை வாசகர் வட்டம்**


**அன்பகத்தின் அன்பான வேண்டுகோள்!**

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு மாறுபட்ட சூழ்நிலையில் வாழும் சகோதர, சகோதரிகள் நோன்பு நோற்பதில் சிரமமிருந்தால், அன்பகம் வாருங்கள். அங்கு தங்கி எல்லா நோன்புகளையும் நோருங்கள். பெருநாளையும் கொண்டாடிவிட்டு வீடு திரும்பலாம். இன்ஷா அல்லாஹ்.

இவண், அன்பகம் நிர்வாகிகள்

தொடர்புக்கு : 97862 14186, 79043 19294, கும்பகோணம். 81481 29887, சென்னை.




## ஏகப்பட்ட குளறுபடியால் மக்களின் நம்பகத்தன்மையை இழந்து விட்டது?

# தேர்தல் நடத்தியதில் தோல்வியை சந்தித்த தேர்தல் ஆணையம்

☼ ஓட்டு மிஷினை தூக்கி சென்ற அவலம்
☼ 75 சதவீதம் பூத் சிலிப் வழங்கவில்லை

## விடியவிடிய நடந்த பணப்பட்டுவாடா

சட்டப்பேரவை தேர்தலில் அதிகாரிகளின் அலட்சியப் போக்காமல் நடந்த குளறுபடிகளால் தேர்தல் ஆணையம் ஒட்டுமொத்த தோல்வியை சந்தித்து விட்டதாக அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் மக்களின் நம்பகத்தன்மையை தேர்தல் ஆணையம் இழந்து விட்டதா என்ற கேள்வியும் தற்போது எழுந்துள்ளது.

தமிழகம் முழுவதும் 234 தொகுதிகளுக்கான சட்டப் பேரவை தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதற்காக கடந்த ஒரு மாதமாக அரசியல் கட்சியினர் அனைவரும் சூறாவளி பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் தமிழக வரலாற்றில் நடைபெறாத சம்பவமாக பீகார் போன்ற வடமாநிலங்களில் நடைபெற்றதை போன்று வேளச்சேரி தொகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பைக்கில் கடத்தி சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மாற்று இயந்திரத்தை தான் தேர்தல் பணியாளர்கள் கொண்டு சென்றனர் என்றும், பைக்கில் கொண்டு சென்றது தான் தவறு என்றும் தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்தது. ஆனால் அந்த வாக்குப்பதிவு இயந்திரத்தில் 17 ஓட்டுகள் பதிவாகி இருந்ததாக தகவல் கசிந்து வருவது பொதுமக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது. என்ன தான் மாற்று வாக்குப்பதிவு இயந்திரம் என்றாலும், அதுவும் ஒரு மோட்டார் பைக்கில் எந்த ஒரு பாதுகாப்பும் இல்லாமல் சாதாரணமாக கொண்டு சென்றது ஏன்?. அந்த வாக்குச் சாவடியில் பதிவான வாக்குகளை கொண்டு அந்த இயந்திரத்தில் ஒரு தரப்புக்கு ஆதரவாக வாக்குகளை பதிவு செய்து வைத்தால் நிலமை என்னவாக இருக்கும்? பைக்கில் வைத்து கொண்டு செல்லும் அளவுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் இருந்திருப்பதால் இதுபோன்ற தில்லு முல்லு பணிகளை சம்பந்தப்பட்ட ஊழியர்களால் செய்ய முடியாதா என்ன என்பது போன்ற கேள்விகள் தேர்தல் ஆணையத்தை நோக்கி எழுந்துள்ளது.

கண்டுபிடித்ததால் தான் அவர்கள் சிக்கினர். இதுபோன்று தமிழகம் முழுவதும் எத்தனை வாக்குசாவடிகளில் இப்படி நடந்திருக்குமோ என்ற சந்தேகமும் வாக்காளர்கள் மத்தியில் எழுந்துள்ளது. துறைமுகம் தொகுதியிலும் இதுபோன்ற முயற்சிகள் நடந்த போது அதை அங்கிருந்த திமுகவினர் தடுத்ததால் தடுக்கப்பட்டது என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

இந்த விவகாரம் பெரிய அளவில் தேர்தல் ஆணையத்துக்கு மக்கள் மத்தியில் கெட்ட பெயரை ஏற்படுத்தி கொடுத்துள்ளது. அடுத்த தாக பார்த்தால், தேர்தல் நடவடிக்கை குறித்த அனைத்து தகவல்களை இணையதளத்தில் தேர்தல் ஆணையம் கொடுத்துள்ளது. வழக்க மாக தேர்தல் நேரத்தில் வாக்காளர்கள் எந்த வாக்குச்சாவடி மையத்தில், அதற்கான சீரியல் நம்பருடன், எந்த பாகத்துக்கு அமைக்கப்பட்ட பகுதியில் வாக்களிக்க வேண்டும் என்ற தகவல் கள் கொண்ட பூத் சிலிப்பை வீடு வீடாக தேர்தல் ஆணையம் வழங்கும். கடந்த சட்டப்பேரவை தேர்தலில், ராஜேஷ் லகானி தேர்தல் அதிகாரியாக பணியாற்றியபோது, பூத் சிலிப் முழுமையாக வழங்கப்பட்டது.

இந்த தேர்தலில் 70 சதவீத அளவுக்கு பூத் சிலிப் வழங்கும் பணியை தேர்தல் ஆணையம் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை பொது மக்கள் முன் வைத்துள்ளனர். கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக வாக்குச்சாவடி மையங்களை தேர்தல் ஆணையம் அதிகப்படுத்தியது. இதனால் கடந்த தேர்தலில் ஓட்டு போட்ட வாக்குச் சாவடி மையங்கள் அல்லாமல் புது புது வாக்குச் சாவடிகளுக்கு செல்ல வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டது.

பெற்றோர்களுக்கு ஒரு வாக்குச்சாவடி யிலும், பிள்ளைகளுக்கு வேறு வாக்குச்சாவடி யிலும் வாக்களிக்க வேண்டிய நிலை ஏற்பட் டது. அப்படி என்றால் பூத் சிலிப் முறைப்படி வழங்கியிருந்தால் அவர்கள் வாக்களிக்க ஏதுவாக இருந்திருக்கும். அதை தேர்தல் ஆணையம் முறைப்படி செய்யாததால் பலர் எந்த வாக்குச் சாவடி மையத்துக்கு செல்ல வேண்டும் என்ற குழப்பத்துக்கு ஆளாகினர்.

பலர் பூத் சிலிப் இல்லாமல் வாக்குச்சாவடி களுக்கு சென்று பெரும் அலைக்கழிப்புக்கு ஆளாகினர். ஒரு கட்டத்தில் ஓட்டு போடவே வேண்டாம் என்று வீடுகளுக்கு திரும்பியவர் களின் எண்ணிக்கையோ ஏராளம் என்கிறார்கள். அதற்கு மாறாக தேர்தல் ஆணைய இணைய தளத்தில் வாக்காளர் அடையாள அட்டை எண்ணை தட்டினால் பூத் சிலிப் பெற்றுக் கொள்ளலாம். அதை பிரிண்ட் அவுட் எடுக்க லாம். அல்லது செல்போனில் டவுன் லோடு



செய்யலாம். இதுபற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் தேர்தல் ஆணையம் செய்யவில்லை. அதற்கான நடவடிக்கைளை தேர்தல் ஆணையம் எடுக்கவில்லை. இதனால், பலருக்கு பூத் சிலிப் இல்லாமல் கடும் அவதிக்குள்ளாகினர். அவர்களின் வாக்குகள் எல்லாம் வீணாகிவிட்டது என்று தான் சொல்ல வேண்டும். இவை எல்லாம் தேர்தல் ஆணையத்தின் அலட்சிய போக்கால் தான் நடந்தது என்ற குற்றச்சாட்டு பொதுமக்கள் மத்தியில் கொழுந்து விட்டு எரிந்ததை பார்க்க முடிந்தது.

அடுத்ததாக, நகர்புறங்கள் தவிர்த்து மற்ற வாக்குச்சாவடி மையங்களில் வெளியில் கையுறை வழங்கப்படவில்லை. சானிடைசர் பெயரளவுக்கு வழங்கிவிட்டு அதற்கு பின் அப்படி ஒன்று வழங்கப்பட்டதா என்ற அளவுக்கு யாருக்கும் கிடைக்கவில்லை. உடல் வெப்ப பரிசோதனை செய்யக்கூடிய தெர்மல் ஸ்கேனர் கருவிகள் பல வாக்குச்சாவடி மையங்களில் சரியாக வேலை செய்யவில்லை என்றும் மக்கள் புகார் தெரிவித் தனர். இவற்றை தேர்தல் ஆணையம் முறையாக கண்காணிக்கவில்லை. அதற்கு காரணம் தேர்தல் அதிகாரிகளின் அலட்சியப் போக்கு தான் காரணம் என்கிறார்கள். இவற்றை எல்லாம் விட தேர்தல் ஆணையத்தின் மீது தீராத களங்கம் ஏற்படும் வகையில் ஆளுங்கட்சியினர் அராஜக நடவடிக்கைளை தேர்தல் அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் அவர்களுக்கு துணை போனது சட்ட ஒழுங்கு பிரச்னைக்கு பாதை ஏற்படுத்தி கொடுப்பதாக இருந்ததாக மற்ற அரசியல் கட்சிகள் புகார் செய்துள்ளது.


அதிமுகவினருக்கு தேர்தல் அதிகாரிகள்

துணை போனதும், அவர்களின் விதிமீறல்களை கண்டு கொள்ளாமல் விட்டது போன்ற தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் பொது மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை உருவாக்கியுள்ளது.



கடந்த ஒரு வாரமாக ஆளுங்கட்சியான அதிமுகவினர் விடியவிடிய வாக்காளர்களுக்கு பணப்பட்டுவாடா செய்தனர். எங்கு பார்த்தாலும் அதிமுக தரப்பில் இருந்து கட்டு கட்டாக பணத்துடன் வீடு வீடாக சென்று வாக்காளர்களுக்கு பணம் வழங்கினர். அதை திமுகவினர் தடுத்த போது அவர்கள் மீது கொலை வெறி தாக்குதலும் நடத்தப்பட்டது. அதை கண்டித்து பல இடங்களில் சாலைமறியல் உள்ளிட்ட துள்ளது. ஆனால் அதன் மீது ஆணையம் எந்த வித நடவடிக்கை எடுக்காமல் அப்படியே காற்றில் பறக்கவிட்ட சம்பவங்கள் தேர்தல் ஆணையத்தின் மீது மக்களுக்கு இருந்த நம்பகத் தன்மை இழந்து விட்டது என்ற கேள்வியை மக்கள் எழுப்பி வருகின்றனர்.

இப்படிப்பட்ட தேர்தல் ஆணையத்தை




போராட்டங்களிலும் ஈடுபட்டனர். தமிழகம் முழுவதும் அதிமுகவினர் நடத்திய பணப்பட்டுவாடா வேட்டையை தடுக்காமல் தேர்தல் ஆணையம் வேடிக்கை பார்த்தது பொதுமக்கள் மத்தியில் தேர்தல் ஆணையம் என்ற ஒன்று இருக்கிறதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது.

இதுஒருபுறம் இருக்க பல இடங்களில் பணப்பட்டுவாடா செய்த அதிமுகவினரை திமுக கூட்டணி கட்சியினர் கையும் களவுமாக பிடித்து கொடுத்தும் உள்ளூர் போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற புகார்களும் தேர்தல் ஆணையத்தில் புகார்கள் குவிந்

நம்பி இன்னும் 23 நாட்கள் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் எப்படி பாதுகாப்பாக இருக்குமோ என்ற அச்சத்தில் அரசியல் கட்சிகள் உள்ளது. தேர்தலை ஒழுங்காக நடத்த முடியாத தேர்தல் ஆணையம் எப்படி வாக்குப் பதிவு இயந்திரங்களை பாதுகாக்கும் என்ற பதற்றத்தில் அரசியல் கட்சியினர் உள்ளனர். இப்படி எல்லா நடவடிக்கையிலும் தேர்தல் ஆணையம் ஒட்டுமொத்த தோல்வியை சந்தித்துள்ளது என்ற கருத்து நடுநிலையாளர்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்படும் ஹாட் டாப்பிக்காக உள்ளது.

– நன்றி தினகரன்



# மேற்கு வங்கத்தில் தேர்தல் ஆணையத்தில் பாசிச போக்கு!

தேர்தல் கமிஷன் என்ற தேர்தல் ஆணையத்தின் அநியாயங்களுக்கு அளவே இல்லை. குறிப்பாக மேற்கு வங்கத்தில் அது பாசிச பாரதீய ஜனதா கட்சியின் ஓர் அலுவலகமாகவே செயல்படுகின்றது.

தேர்தல் ஆணையம் 8 எட்டு கட்டங்களாகத்தான் மேற்கு வங்க சட்டமன்ற தேர்தல் நடக்கும் என அறிவித்தது. இதனை பாசிஸ்ட்டுகள் (மோடியும் அமித்ஷாவும்) கணக்குப் பார்த்து தங்கள் வசதிக்காகப் போட்டுக்கொண்ட கட்டங்கள் அவை.

ஒரு மாவட்டத்தில் 6 தொகுதிகள் இருந்தால் அந்த மாவட்டத்தில், 6 கட்டங்களாக தேர்தல் இது ஏன்? என்ற கேள்வியை எல்லா கட்சித் தலைவர்களும் கேட்டார்கள். எல்லா சமூக ஆர்வலர்களும் கேட்டார்கள். அத்தோடு இது மோடியும் அமித்ஷாவும் மேற்கு வங்கத்தை கபளீகரப்படுத்த தேர்தல் ஆணையம் செய்து தரும் ஏற்பாடு என்றார்கள். ஆனால் தேர்தல் ஆணையம் எதையும் கண்டுகொள்ளவில்லை. மோடி – அமித்ஷா இருவருக்கும் உற்றத் துணையாக இருந்தது.

ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும், அந்தந்த வாக்குச் சாவடியைச் சார்ந்த ஒருவர்தான் முகுவராக இருக்க வேண்டும் என்பது பொதுவிதி.

ஆனால், இந்தப் பொதுவான தேர்தல் விதியை மாற்றிட வேண்டும் என பாரதீய ஜனதா கட்சியினர் விரும்பினர். காரணம் பல வாக்குச் சாவடிகளில் அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் யாருமில்லை. அந்த சட்ட மன்ற தொகுதியிலிருந்து யாராவது ஒருவர் முகவராக அமரலாம் என விதியை மாற்றிடச் சொன்னார்கள்.

உடனேயே தேர்தல் ஆணையம், அப்படி ஒரு திருத்தத்தை கொண்டு வந்தது. அதை உத்திரவாகவும் பிறப்பித்தது.

இதுபோன்று ஒரேயடிகாக பாசிஸ்ட்டுகளின் கைப்பாவையாக செயல்பட்ட தேர்தல் ஆணையத்தின் Model Code of Conduct-ஐ மேற்கு வங்க திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவர் வீரமங்கை மம்தா பேனர்ஜி. இது Model Code of Conduct அல்ல. இது Modi Code of Conduct என கூறினார். இப்போது இந்த சொல்லாட்சி மிகவும் பிரபல்யமாக ஆகிவிட்டது. பல பத்திரிகைகள் இந்தச் சொல்லாட்சியைச் சிலாகித்து தலையங்களை எழுதிட்டன.

ஆனாலும் தேர்தல் ஆணையம் இம்மியும் திருந்திடவில்லை.

RIOTS FOR VOTES - கலவரங்கள் ஓட்டுக்காக

RIOTS OUR ROUTES - கலவரங்கள் எங்கள் பாதை

என்ற முழக்கங்களை முன் வைத்து வருபவர்கள் சங்கப்பரிவார கும்பல்கள்.



நாடெங்கும் நாளைக்கு மூன்று கலவரங்கள் என நடத்திட வகுப்புவாதத்தை வளர்த்து வாக்கு வங்கிகளை உருவாக்கியவர்கள் சங்கிகள். அதன் அரசியல் பிரிவான பாரதீய ஜனதா கட்சி!

அப்போதெல்லாம் கனைத்துக் கூட காட்டிடவில்லை நமது தேர்தல் ஆணையம்.

இப்போது மேற்கு வங்கம், அசாம் ஆகிய மாநிலங்களிலும் பச்சையாக இதையே செய்து வருகின்றார்கள்.

முடிந்த மட்டும் கலவரங்களை உருவாக்கப் பார்க்கிறார்கள். பல கலவரங்களை உருவாக்கி விட்டார்கள். பல உயிர்களை குடித்துவிட்டார்கள்.

அப்போதெல்லாம் தேர்தல் ஆணையம் வேறு பக்கம் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டது.

இப்போது மோடியையும் அமித்ஷாவையும் ஒற்றைக்காலால் எதிர்த்து நிற்கும் வீரமங்கை மம்தா பேனர்ஜி, சிறுபான்மையினர் தங்கள் வாக்குகளைச் சிதற விட வேண்டாம் எனப் பேசியதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது தேர்தல் கமிஷன். இதையும் கண்டித்து அனைத்துப் பத்திரிகையிலும் கண்டனங்கள், தலையங்கம். – டெக்கன் கிரானிக்கல் என்ற ஆங்கில பத்திரிகை மட்டும் இரண்டு தலையங்கங்களை தேர்தல் ஆணையத்திற்கு எதிராக எழுதிவிட்டது. எனினும் தேர்தல் ஆணையம், மோடி–அமித்ஷாவின் கைப்பாவையாக மாறுவதிலிருந்து பின்வாங்கிட வில்லை.

2019 நாடாளுமன்ற தேர்தலின்போது சங்கப் பரிவாரங்கள் இராமரையும், கிருஷ்ணரையும் போட்டு ஓட்டுக் கேட்டன. தேர்தல் ஆணையம் ஆண்மை இழந்து அல்லாடியது.

நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையிலிருக்கும்போது, பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் இராமருக்குக் கோயில் கட்டுவோம் என தேர்தல் அறிக்கையில் சமர்ப்பித்தபோது தேர்தல் ஆணையம் தனது பரிவார பக்தியையே வெளிக்காட்டிற்று.

பின்னர் 370 தொகுதிகளில் வாக்கு இயந்திரத்தை மோசடி செய்து அதன்வழி மோடியையும், அமித்ஷாவையும் பதவியில் அமர்த்தியது. இன்னும் பல தகவல்களை வைகறை வெளிச்சம் மார்ச் இதழில் தந்துள்ளோம்.

## மேற்கு வங்கத்தில் தொடக்கத்திலிருந்தே அராஜகம்

2021 சட்ட மன்ற தேர்தலின் தொடக்கத்திலேயே மேற்கு வங்கத்தை கலவர பூமியாக ஆக்கிக் காட்டினார்கள். தங்கள் கலாச்சாரங்களை பாதுகாக்கவும், சங்கப்பரிவார கலவரக் காரர்களோடு இணைந்து கலவரங்களைச் செய்யவும் மத்திய பாதுகாப்புப்படையை மேற்கு வங்கத்தில் குவித்தார்கள்.

இந்தப் படை பல லடம்சம் முஸ்லிம்களின் உயிரைத் தன் வாழ்நாளில் குடித்த சாத், சாத் அத்வானியால் உருவாக்கப்பட்ட பாதுகாப்புப் படை. இதையும் இன்னும் பல தகவல்களையும் வைகறை வெளிச்சம், மார்ச்சு–2021 இதழில் தந்துள்ளோம்.

இந்தப் படை இப்போது திரிணாமுல் காங்கிரஸ்–இன் தொண்டர்களையும் ஆதரவாளர்களையும் சுட்டுக் கொன்றுக் கொண்டிருக்கின்றது. கூட்ஸ் பிகாரி என்ற இடத்தில் மட்டும் 5 பேரைக் கொலை செய்திருக்கின்றது. இதையும் மோடியின் தேர்தல் ஆணையம் கண்டுகொள்ள வில்லை.

இப்படி தேர்தல் ஆணையம் மானம், மரியாதை அனைத்தையும் இழந்து நிற்கின்றது நமது அரசியல் நிர்ணயச் சட்டம், அது உருவாக்கிய நிரந்தர நிறுவனங்களான தேர்தல் ஆணையம், உச்ச நீதிமன்றம, எல்லாமே தோல்வியில் முடிந்திருக்கின்றன என்றாலும் ஜனநாயகத்தைத் தூக்கிப் பிடிப்போம் என சிலர் பிதற்றிக் கொண்டே இருக்கின்றனர்.

- MGM



# உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் - 6

## தொடர்

இப்போதைய உச்ச நீதிமன்றதலைமை நீதிபதி S.A. பாப்டே, ஏப்ரல்–23 2021–இல் ஓய்வு பெறுகின்றார். பல அநீதிகளுக்குத் தலைமை தாங்கியவர்.

இப்போது, அதாவது தனக்குப் பின்னால் ஒரு நீதிபதியை குடியரசுத் தலைவர் நியமித்தபின், இன்னொரு அநீதியைச் செய்து விட்டுத்தான் செல்வேன் என அடம்பிடிக்கின்றார். அது,

குடியரசு தலைவர் இன்னொரு நீதிபதியை நியமித்த, அதாவது (நீதிபதி ரமணா–வை) அடுத்த உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமித்துவிட்டார்) நிச்சயமாக S.A.பாப்டே எந்த பிரதான முடிவை யும் எடுக்கக்கூடாது. அருவடைய பதவி காலம் முடிவதற்கு இன்னும் இரண்டு வாரங்கள் இருந் தாலும் அவர் எந்தப் பிரதான முடிவையும், எடுக்கக்கூடாது. இது நமது உச்ச நீதிமன்றம், சுதந்திர இந்தியாவில் செயல்படத் தொடங்கிய நாளிலிருந்தே செயலிலிக்கும் விதிமுறை. ஆனால் பாப்டே அதையெல்லாம் பற்றிக் கவலைப்படு வதில்லை. அவர் நினைத்ததைத்தான் செய்வார்.

தனது திமிரான நடவடிக்கையின் அடிப் படையில் தான் பதவி இழந்தபின், உச்ச நீதிமன்ற த்திற்கு சில நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் (.....) கோலியும் என்ற நீதிபதிகள் குழுமத்தை 8–4–2021 அன்று கூட்டி இருக்கின்றார். 2019 நவம்பர் திங்கள் முதல் 2021 மார்ச் திங்கள் வரை ஒரு வருடம், ஐந்து மாதங்கள் வரை பதவியிலிருந்த மக்கள் கொரோனாவில் சாவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டடிருந்தவர். புலம் பெயர்ந்த தொழிலாளர்களைரோடெல்லாம்காடெல்லாம் நடந்தே கடந்து செல்வதையும், வழியிலே பிணங் களாக மடிவதையும் கண்டும் காணாததைப் போல் இருந்தவர், அதுபற்றிய மனுக்கள் உச்ச நீதிமன்றத்தின் முன் வந்தபோதெல்லாம் அதனைத் தட்டிக்கழித்தவர். பாசிச மோடிக்கு ஜால்ரா போட்டவர். 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான பைக்கிலிருந்து கொண்டுபோய் கொடுத்தார். பின்னர் பல வழக்கறிஞர்கள் ஓய்வு பெற்ற நீதிபதிகள் எல்லாம் தங்கள் ஆதங் கங்களையும், உச்சநீதிமன்றத்தின்தாழ்ச்சியையும் வீழ்ச்சியையும் சுட்டிக்காட்டி கடிதங்களை கணைகளாக ஆக்கி, உச்ச நீதிமன்றத்தை நோக்கி வீசும்போதுதான், கொரோனா மரணங்கள், இவருடைய பார்வையில் பட்டன.

இவருடைய இந்த இரக்கமற்ற நடவடிக்கை களை, உச்ச நீதின்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் என்ற தலைப்பில் கடந்த வைகறை வெளிச்சத்தில் தந்தோம். இன்ஷா அல்லாஹ் அவை இனியும் தொடரும்.

- MGM

செய்தி ஆதாரம் : TOI - 8/4/2021

**குறிப்பு :** பத்திரிகைக்கும், மூத்த வழக்கறி ஞர்களும்தந்த செய்திகளைப் பயன்படுத்தாமல், நீதிபதி பாப்டே நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் குழுமத்தை (COLLEGIAM) –ஐ கட்டினார். 9–8–2021இல் ஆனாலும் எந்த முடிவையும் எட்டிட முடியவில்லை. அதாவது அவரால், எந்த ஒரு புது நீதிபதியையும் நியமித்திட இயலவில்லை.

அப்படியே அவர் நியமித்தாலும், நாம் அதை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என உச்ச நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



# ரமழான் மாதத்தின் முக்கியத்துவம்

## பெருமானார் (ஸல்) அவர்கள் ரமழான் மாதத்திற்கு முந்தைய ஷாபான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையில், ரமழானை வரவேற்று ஆற்றிய உரை...

மக்களே! உங்களுக்கு எதிரே அருளை அள்ளி வழங்கிடும் ஒரு மாதம் வருகின்றது. அது அருளின் மாதம், கருணையின் மாதம், பாவமன்னிப்பை வழங்கிடும் மாதம். எல்லா மாதங்களின்றும் ( அல்லாஹ்விடம் ) சிறந்த மாதம். அதன் நாட்கள் ஏனைய எல்லா நாட்களையும் விட சிறந்த நாட்கள். அதன் இரவுகள் இரவுகளிலெல் லாம் சிறந்த இரவுகள். அதன் மணித்துளிகள், மணித் துளிகளிளெல் லாம் சிறந்த மணித்துளிகள்.

அது அல்லாஹ்வின் விருந்தினராக ஆகிட உங்களை அழைக்கும் மாதம். அது அல்லாஹ்வுடன் நெருங்கி இருப்ப வர்களோடு நீங்களும் இருக்க உங்களை அழைக்கும் மாதம். நீங்கள் விடும் ஒவ்வொரு மூச்சும் அல்லாஹ்வின் புகழைப் பாடுகின்றது. உங்களுடைய தூக்கம் ஒரு வணக்கம். உங்களுடைய செயல்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படு கின்றன.

உங்களுடைய வேண்டுதல்களுக்கு துஆக்களுக்குப் பதில் அளிக்கப்படுகின்றது. ஆகவே உங்கள் அல்லாஹ்விடம் ஆரோக்கியமான உடலைத் தந்திடும்படி கேளுங்கள். உங்கள் இதயத்தை விசாலாமாக்கித் தரும்படி கேளுங்கள், இதன் வழி நீங்கள் நோன்பு நோற்கும் தினத்தில் ஆரோக் கியத்தையும் அவனுடைய அருள்மறையை ஓதும் ஆரோக்கி யத்தையும் கேளுங்கள், பெறுங்கள். இந்த மாண்புமிகு மாதத்தில் பாவ மன்னிப்பைப் பெற முடியாதவர்களே, சோகத்திற்குக் சொந்தக்காரர்கள். அந்த நியாயத் தீர்ப்பு நாளின் பசியையும், தாகத்தையும், நோன்பு காலத்தின் பசியோடும், தாகத்தோடும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஏழைகளுக்கு வாரி வழங்குங்கள், முதியவர்களை கண்ணியப்படுத்துங்கள், இளையவர்களிடம் இரக்கம் காட்டுங்கள். உங்களுடைய இரத்தப் பந்தங்களிடம் நல்ல உறவை வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் நாவைப் பேணுங்கள், பார்த்திட அனுமதிக்காதவற்றிலிருந்து உங்கள் பார்வையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

கேட்கக்கூடாது என விலக்கப்பட்டவற்றிலிருந்து காதுகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அநாதைகள் மீது அன்பு காட்டுங்கள், அதனால் உங்களின் மீது அல்லாஹ்வின் அன்பு காட்டப்படும்.

அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேளுங்கள். துஆவிற்காக அல்லாஹ்விடம் உங்கள் கைகளை இந்த நேரங்களில் உயர்த்துங்கள். ஏனெனில் இவை தாம் நேரங்களிலெல்லாம் சிறந்தது. அல்லாஹ் தன் படைப்பினங்களை இந்த மாதத்தில் கருணையோடு பார்க்கின்றான். அவர்கள் கேட்பவற்றிற்குப் பதில் சொல்லுகின்றான். அவர்கள் அவனிடம் கேட்பவற்றையெல்லாம் கொடுக்கின்றான்.

மக்களே! உங்கள் ஆத்மாக்கள் உங்கள் செயல்களைச் சார்ந்தே இருக்கின்றன. ஆத்மாக்களை பாவமன்னிப்புக் கொண்டு விடுதலை செய்யுங்கள். அவற்றின் அழுத்தங்களை, பாரங்களை நீண்ட நேரம் "சஜ்தா" செய்வதன் மூலம் எளிதாக்குங்கள். இதை உங்கள் நினைவில் நிறுத்துங்கள். அல்லாஹ் தன் ஆளுமையைக் கொண்டு உறுதியளிக்கின்றான்.

"தொழுபவர், நீண்டநேரம் சஜ்தா செய்பவர் இவர்களுக்கு இந்த பிரபஞ்சத்தின் அதிபதியின் முன் அவர்கள் நின்றிடும்போது எந்தத் தண்டனையுமில்லை, எந்த பயமுமில்லை.

மக்களே! இந்த மாதத்தில் நோன்பு நோற்கும் ஒரு மனிதனுக்கு, நோன்பு துறக்க விருந்து தரும் ஒருவர், ஒருவரை விடுதலை செய்தவராவார். அவருடைய கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சிலர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சொன்னார்கள்.

எங்களில் எல்லோருக்கும் நோன்பாளிகளை அழைத்து விருந்து வைக்கும் அளவுக்கு வசதி இல்லையே?

இதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள்

"நீங்கள் நோன்பு துறக்க வைக்கும் விருந்து ஒரு மிடறு தண்ணீராக இருந்தாலும் அல்லாஹ் இந்தப் பெருங்கூலியைத் தருகின்றான்."

இந்த மாதத்தில் சிறந்த ஒழுக்கங்களைப் பேணும் ஒருவர் 'சிராத்' பாலத்தை எளிதாகக் கடந்து விடுவார். அடுத்தவர்களின் குறைகளுக்கு ஈடு செய்பவர் பலன் பல அடைவார்.

அல்லாஹ் நியாயத் தீர்ப்பு நாளில் அவர் மீது கொள்ளும் கோபத்தையும் குறைத்துக் கொள்வான்.

ஓர் அநாதையைக் கண்ணியப்படுத்துபவரை அல்லாஹ் நியாயத் தீர்ப்பு நாளில், கண்ணியப் படுத்துவான். தனது இரக்கத்தை விசாலப்படுத்துபவர் மீது நியாயத் தீர்ப்பு நாளில் அல்லாஹ் தன் இரக்கத்தை விசாலப்படுத்துவான்.

"தன் உறவினர்களின் உறவைத் துண்டிப்பவரிடமிருந்து அல்லாஹ் தன் இரக்கத்தை துண்டித்து விடுவான். இந்த மாதத்தில் (ரமழான் மாதத்தில்) சிறப்பான தொழுகையை தொழுபவருக்கு அல்லாஹ் நரகத்தை தூரமாக்குவான். இந்த மாதத்தில் கூடுதலான நஃபிலான, பரிந்துரைக்கப்பட்ட ஒரு தொழுகையை நிறைவேற்றுபவருக்கு அல்லாஹ் 70 நஃபீலான பரிந்துரைக்கப்பட்ட தொழுகைகளின் நன்மையைக் கொடுப்பான்.

இந்த மாதத்தில் கடமையாக்கப்பட்ட தொழுகையை நிறைவேற்றுபவனுக்கு அல்லாஹ் 70 தொழுகைகளின் நன்மையைக் கொடுப்பான். இந்த மாதத்தில், அதிகமான தொழுகைகளை தொழுபவரின் சுமை நியாயத் தீர்ப்பு நாளில் எளிதாக்கப்படும்.

இந்த மாதத்தில் திருக்குர்ஆனின் ஒரு வசனத்தை ஓதுபவருக்கு இதர மாதங்களில் மொத்த திருக்குர்ஆனையும் ஓதிய நன்மை கிடைக்கும்.

மக்களே! இந்த மாதத்தில் சொர்க்கத்தின் வாசல்கள் திறந்திருக்கும். ஆகவே அல்லாஹ்விடம் உங்களுக்கு அதை ஒருபோதும் உங்களுக்கு மூடிவிட வேண்டாம் என துஆச் செய்யுங்கள்.

இந்த மாதத்தில் நரகத்தின் வாசல்கள் மூடியே இருக்கும். உங்கள் விஷயத்தில் அது எப்போதும் மூடியே இருக்கட்டும் என துஆச் செய்யுங்கள்.

இந்த மாதத்தில் ஷைத்தானை கட்டிப் போட்டிருப்பான் அல்லாஹ். அந்த ஷைத்தான் ஒருபோதும் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்திட அனுமதிக்க வேண்டாம் எனதுஆச் செய்யுங்கள்.

ஆதாரம் – "பைஹக்கி"

# தலித்கள் மீதான தாக்குதல் அதிகரிப்பு

வடமாநிலத்தில் நடப்பதைப் போல தமிழகத்திலும் கும்பல் வன்முறை தலை தூக்கிடுமா என்ற அச்சத்தை தமிழக மக்களின் மனதில் உருவாக்கியது சமீபத்தில் தலித் இளைஞர் ஒருவர் மீது நடந்த தாக்குதல்.

இளைஞர் ஒருவரின் கண்ணை துணியால் மூடி அவரை மரத்தில் கட்டிவைத்து அடித்தது ஒரு கும்பல். பின்னர் அவரை படுக்க வைத்து பின்புறமாக தாக்கினார்கள். வலியைப் பொறுக்க முடியாமல் சில நிமிடங்களிலேயே தாக்கப் பட்ட இளைஞர் மயக்கமுற்றார். இந்த சம்ப வங்கள் அனைத்தும் வீடியோ பதிவாக சமூக வலைத்தளங்களில் பரவியது. பிப்ரவரி 1ஆம் தேதி அன்று தஞ்சாவூரில் இச்சம்பவம் நடந் துள்ளது.

தாக்கப்பட்ட இளைஞரின் பெயர் ராகுல் (வயது 22), தினக்கூலி. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ராகுலை மதுரையில் இயங்கும் அரசு சாரா அமைப்பான எவிடன்ஸ் (உஸ்ண்க்ங்ய்ஸ்ரீங்) உறுப்பினர்கள் சந்தித்தனர். என்ன நடந்தது என்பதை ராகுல் பின்வருமாறு கூறியுள்ளார்.

ராகுலின் கூற்றுப்படி, கோனூர் கிராமத்தில் விக்கிஎன்பவருக்குசொந்தமானஇடத்தில்மணல் அள்ளும் வேலைக்கு பணியமர்த்தப்பட்டுள்ர் ராகுல். இதில் எட்டாயிரம் சம்பள பாக்கி கிடந்துள்ளது. இதனை கேட்பதற்காக விக்கியின் வீட்டிற்கு சென்றுள்ளார்கள் ராகுலும் அவருடன் பணிபுரிபவர்களும். இதனால் எரிச்சல் அடைந் துள்ளார் விக்கி. அதன் பின்பே ராகுலை ஒரு தனிமையான இடத்திற்கு அழைத்துச் சென்று அவரை தாக்கியுள்ளனர்.


முதல் தகவல் அறிக்கையின் படி, விக்கி உடைய பண்ணைக்கு அழைத்துச் சென்று ராகுலை நிர்வாணப்படுத்தி வீடியோவும் எடுத்து உள்ளனர். எந்த பிரச்சினையும் இல்லாமல் விட்டுவிட வேண்டும் என்றால் 50 ஆயிரம் ரூபாய் திருடிவிட்டதாக ஒப்புக் கொள் என்று அவரை கட்டாயப்படுத்தி அடித்து உள்ளனர் விக்கியும் மற்ற ஜாதி இந்துக்களும். தாக்குதலி லிருந்து தப்பித்துக்கொள்ள அவர் அதை ஒப்புக் கொண்டுள்ளார். அதன் பின்பே அவர் விடப் பட்டுள்ளார். இந்த தகவலை தெரிந்துகொண்ட ராகுலின் பெற்றோர்கள் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் புகாரை கொடுத்துள்ளனர். தான் தாக்கப்பட்ட சம்பவம் வீடியோ பதிவாக வலை தளங்களில் பரவி வருவதை அறிந்த ராகுல், அவமானத்தால் எலி மருந்தை சாப்பிட்டுள்ளார். அவரை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர் அவருடைய பெற்றோர்கள்.

திருட்டு புகார் எதுவும் காவல் நிலையத்தில் பதியப்படவில்லை. திருடியது உண்மை என்றால் பிப்ரவரி 1ஆம் தேதி அன்றே புகார் கொடுத்து இருக்க வேண்டியதுதானே என்கிறார் எவிடன்ஸ் அமைப்பின் நிர்வாக இயக்குனர் கதிர். கடந்த 2020 டிசம்பர் 26 ஆம் தேதி அன்று, சிவக்குமார் என்பவரை விளக்கு கம்பத்தில் கட்டி வைத்து அடித்துள்ளனர். தங்களை பண்ணையார்கள் என்றும் ஜமீன்தார்கள் என்றும் கூறிக்கொள்ளும் ஜாதி இந்துக்களால் டெல்டா மாவட்டங்களில் தலித் இளைஞர்கள் தாக்கப்படுவது அதிகரித் துள்ளது.

உரிமைகளுக்காக கேள்வி கேட்பவர்களின் மீது குற்றம் சுமத்தப்பட்டு அவர்கள் தாக்கப்படு கின்றனர் என்கிறார் கதிர். காவிரி டெல்டா மாவட்டங்களில் தலித்துகள் தாக்கப்படுவது அதிகரித்துள்ளதால் தமிழ்நாடு அரசு இரும்புக் கரம் கொண்டு இதனை தடுக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் எவிடன்ஸ் சார்பாக கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

- எஸ்.எம். முஷ்ரிப்






# பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

2020 டிசம்பர் மாத இதழின் தொடர்ச்சி

**(அதாவது குண்டு வைக்கும் சதிகள்) அனைத்தும் வெளிவந்துவிடும்.**

ஆனால் சுவாமி அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலத்திற்குப் பின், பொதுமக்கள் தொடர்ந்து எல்லா குண்டு வெடிப்பு வழக்கு களையும் மறு ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். தொடர்ந்து அழுத்தங்களைத் தந்துகொண்டே இருந்தார்கள். இந்தப் பின்னணியில் இதனால் இந்த குண்டு வெடிப்பு வழக்கின் மறு ஆய்வுக்காக வழக்கு 2011 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் NIA என்ற மத்திய புலனாய்வு முகமையிடம் ஒப்படைக் கப்பட்டது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 9 பேரும்– ஒன்பது அப்பாவி முஸ்லிம்களும் சுவாமி அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்கு மூலத்தின் பின்னணியில் தங்களை விடுவிக்க வேண்டும் என நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்தார்கள். இதில் NIA என்ற தேசிய புலனாய்வு முகமை, இந்தப் பிணையை மறுக்கப் போவ தில்லை எனக்கூறிவிட்டது. இந்த விவகாரத்தில் நீதிமன்றத்திற்கு தந்த பதில் அறிக்கையில், அது இதுவரை சேகரிக்கப்பட்ட சாட்சியங் களையும் ஆவணங்களையும் மறு பரிசீலனைச் செய்து கொண்டிருப்பதாகவும், (அதாவது ATS என்ற தீவிரவாத தடுப்புப் படையும், மத்தியப் புலனாய்வுத் துறையும் சேகரித்த ஆவணங்கள்) புதிய சாட்சியங்களைத் திரட்டிக் கொண்டிருப்பதாகவும் தனது பதில் அறிக்கை யில் குறிப்பிட்டது.

... (NIA) என்ற தேசிய புலனாய்வு முகமை யின் புலனாய்வு பல புதிய உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது. தடயவியல் அறிக்கைகள், சாட்சியங்கள் தந்த வாக்குமூலங் கள், இவையெல்லாம் பல புதிய உண்மைகளை உணர்த்துகின்றன.

இவையெல்லாம் தேசிய புலனாய்வு முகமை தாக்கல் செய்த பதிலில் இடம் பெற்றன.

இவ்வாறெல்லாம், திரட்டிய புதிய ஆவணங் களும் அறிக்கைகளும், சாட்சியங்களும், தேசிய புலனாய்வு முகமையின், உயர் அதிகாரிகள் முன் சமர்ப்பிக்கப்பட்டன. இதைக் கொண்டு அந்த (9) ஒன்பது அப்பாவி முஸ்லிம் களின் பிணையை எதிர்க்கலாமா? கூடாதா? என்பதை முடிவு செய்ய வேண்டும் எனவும் உயர் அதிகாரிகளைக் கேட்டது.

மிகப்பெரியதொரு ஆலோசனைக்கு அனைத் தும் உட்படுத் தப்பட்டன. முடிவில் அந்த 9 (ஒன்பது) அப்பாவி முஸ்லிம்களின் பிணையை மறுப்பதில்லை என முடிவு செய்யப்பட்டது.

தேசிய புலனாய்வு முகமை சமர்ப்பித்த, ஆவணங்களின் அடிப்படையில், மும்பையின் சிறப்பு மோக்கா (Mcoca)

நீதிமன்றம் நவம்பர்–5,2011 இல் பிணை வழங்கியது.

NIA-வுடைய புதிய புலனாய்வு பல உண்மை களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தன. அவை...

1) முதலில் கொடுத்த வாக்குமூலத்தை குற்றம் சுமத்தப்பட்ட அப்பாவிகள் பின் வாங்கிக் கொண்டார்கள்.

2) ஷபீர் மசியுல்லாஹ்வின் தொழிற்சாலை யில் வெடி பொருட்கள். அதாவது, ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருட்கள், எடுக்கப்பட்டதற்கு, சாட்சியமாகக் காட்டப்பட்டிருந்தவர்கள், தாங்கள் அந்த இடத்திற்கு வந்ததே இல்லை என்றும், எங்களுக்கு எதுவும் தெரியாது, என்றும் கூறிவிட்டார்கள்.

3) குண்டுகளைத் தயாரித்தபோது, நான் கண்ணால் கண்டேன் என சாட்சியம் சொன்ன ஒருவர், இந்திய தண்டணைச் சட்ட முறைமை Cr.PC. பிரிவு 164–ன் கீழ் வாக்குமூலம் கொடுத் திருந்தார். அவர் தன்னைக் கட்டாயப்படுத்தித் தான் அந்த வாக்குமூலத்தை வாங்கினார்கள் எனக் கூறிவிட்டார். இதனை அவர் அலஹாபாத் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த ஒரு அபிடவிட் அறிக்கை மூலம் கூறினார்.

4) குண்டுகளை (வெடிக்க) வைத்ததாகக் குற்றம் சாட்டப்பெற்ற முஹம்மத் ஷாஹித் என்பவர் அங்கிருந்து மாலேகோனிலிருந்து 400 கிலோ மீட்டர்களுக்கு அப்பால், உள்ள ஃபூல் சங்வி என்ற இடத்தில் (இது யவாத்மால் மாவட் டத்தில் இருக்கின்றது) தொழுகை நடத்திக் கொண்டிருந்ததாக நிரூபித்தார். (NIA) தேசிய புலனாய்வு முகமை, ஃபூல் சங்வி எனும் இடத்தில் 12 பேரை விசாரித்தார்கள். இந்த விசாரணையில் முஹம்மத் ஷாஹித் சொல்வது உண்மை என்பதை கண்டறிந்தார்கள்.

5) (மாலேகான்) குண்டு வெடிப்பின் மூளை எனக் குற்றம் சாட்டப் பெற்றவர் ஷாபிர் மசியுல் லாஹ். (பேட்டரிவாலர்) இவர் மும்பையில் தான் வெடி பொருட்களை வாங்கினார் என்றும் குற்றம் சாட்டப் பெற்றவர். அத்தோடு இரண்டு பாகிஸ்தான் தேசத்தைச் சார்ந்தவர்களுக்கு அடைக்கலம் தந்து, குண்டு தயாரிப்பில் கலந்து கொண்டவர் என்றும் குற்றம் சாட்டப் பெற்றவர். ஆனால்அவர்இந்தக்காலக்கட்டத்தில் மும்பைக் காவல்துறையின் (கஸ்டடியில்) கட்டுப்பாட்டில் இருந்தார். மாலேகான் குண்டு வெடிப்புக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே காவல்துறை அவரைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

பிரிதொரு புலன் விசாரணையில் பின்வரும் குற்றவாளிகள் தீட்டிய சதிகள் தெரிய வந்தது.

## தேடப்படும் குற்றவாளிகள்...

1) சுனில் ஜோஷி – (குற்றவாளி எண். 18)

2) ராமச்சந்திர கல்சங்கரா– (குற்றவாளி எண், –19)

3) ரமேஷ் வெங்கட் மகால்கர் என்ற அமித் கக்லா – ( குற்றவாளி எண். – 20)

4) சந்தீப் டாங்கி – (குற்றவாளி எண். – 21)

## கைது செய்யப்பட்ட குற்றவாளிகள்

5) லோகேஷ் ஷர்மா – (குற்றவாளி எண்.–17)

6) டான்சிங் சிவ் சிங் – (குற்றவாளி எண். – 16)

7) இராஜேந்திர சவ்திரி (குற்றவாளி எண். – 15)

8) மனோகர் நாத் நார்வாரிய – (குற்றவாளி எண்.–14)

மேலே சொன்ன தேடப்பட்டுவரும் குற்ற வாளிகளும், கைது செய்யப்பட்ட குற்றவாளி களும் இணைந்து, ஒரு பெரும் சதித் திட்டத்தைத் தீட்டினார்கள். அதில், நாட்டு மக்களை மொத்தமாகப் பீதி வயப்படுத்தும் வகையில் சில குண்டு வெடிப்புகளை நிகழ்த்துவது என்பதே முக்கியமாக இடம் பெற்றது. (இதை NIA என்ற தேசிய முகவாண்மை, தான் மேற்கொண்ட (புதிய) மறு ஆய்வில் கண்டுபிடித்தது)

இதற்காக அதாவது குண்டு வெடிப்புகளை நடத்துவதற்காக, ஒரு சிறப்புப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. அதில் குண்டுகள் தயாரிக்கவும், அவறை குறிப்பிட்ட இடத்தில் வெடிக்க வைப்ப தற்குமான பயிற்சி வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சி, 2006 ஆம் ஆண்டு மத்திய பிரதேசத்திலுள்ள பாலி (Balgi Dewas) என்ற இடத்தில் வைத்து வழங்கப்பட்டது.

பயிற்சியை சுனில் ஜோஷி, இராமச்சந்திரா

*கல் சங்கரா, லோகேஷ் ஷர்மா, சந்தீப் டாங்கே ஆகியோர் வழங்கினார்கள். குண்டு வெடிப்பு இவர்களால்தான் (மேலே நாம் குறிப்பிட்டவர்களால்) நடத்தப்பட்டது. இவர்கள் இன்னும் பல குண்டு வெடிப்புகளை நடத்தி இருக்கின்றார்கள்.*

*இந்தக் குற்றவாளிகள், மத்தியப் பிரதேசம், இந்தூரில் உள்ள சர்வசம்பாவன் நகர் என்ற நகரிலுள்ள ஒரு வீட்டில் கூடி அடிக்கடி திட்டங்களைத் தீட்டுவார்கள். இந்தக் கூட்டங் களில் 2006 ஆம் ஆண்டு ஜூன் / ஜூலை மாதங்களில் நடந்தக் கூட்டங்களில் பல முக்கியமான திட்டங்கள் தீட்டப்பட்டன. I.E.D. (ஐ.ஈ.டி.) வகை குண்டுகளைத் தயாரிக்க தேவையான பொருட்கள் எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. இந்தப் பொருட்களை இந்த வீட்டில் கொண்டு வந்து வைத்தவர்கள், தேடப்படும் குற்வாளிகளான, இராமச்சந்திரா கல்சங்கராவும், ரமேஷ் மகால்கரும்தான். குண்டுகளை இராமச்சந்திரா கல்சங்கரா, ரமேஷ் மகால்கர், லோகேஷ் ஷர்மா ஆகியோர்தான் தயாரித்தார்கள். சந்தீப் டாங்கே குண்டுகள் தயாரிப்பதற்கு வழிகாட்டினார்.*

*தொடர்ந்து இந்தக் கூட்டத்தினர் நடத்திய சதித் திட்டங்களில் மாலேகான் பற்றிய முழு விபரம், அதன் போக்குவரத்துக்கள், அதன் தெருக்கள் சாலைகள் இவற்றைப் பற்றிய முழு தகவல்களையும் திரட்டுவது என முடிவு செய்யப்பட்டது. இவர்கள் மூன்றுமுறை மாலே கானுக்குப் பயணம் செய்தார்கள். அதன் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று வந்தார்கள். மாலேகானுக்கு இவர்கள், கடைசியாக மேற்கொண்ட பயணம், குண்டு வெடிப்பிற்கு (7) ஏழு நாட்களுக்கு முன்னர்தான் நிகழ்ந்தது. இதில், இராமச்சந்திரா கல்சங்கரா, இராஜேந்திர சவ்திரி, மனோகர் நாரிவாரியா, டான்சிப் சிங் ஆகியோர் நான்கு இடங்களைத் தேர்வு செய்தார்கள். இந்த நான்கு இடங்களிலும் செப்டம்பர் 8, 2006–இல் குண்டுகளை வைத்து வெடிக்கச்செய்வது எனமுடிவெடுத்தனர். அன்று தான் சபேபாரத் (அதாவது முஸ்லிம்கள் அதிக மாக பலர் மஸ்ஜித் வளாகங்களில் கூடும்நாள்)*

*இவர்கள் தீட்டியத் திட்டத்தின் அடிப்படையில், இராஜேந்திர சப்திரி என்பவர், ஒரு சைக்கிள் கடைக்குச் சென்று, அங்கு ஒரு அட்லஸ் சைக்கிளை வாங்கினார். சைக்கிளை பாதல் யாதவ் என்ற பெயரில் தான் வாங்கினார். அதேபோல், மனோகர் வாரிய என்பவர் இன்னொரு கடைக்குச் சென்று அங்கொரு ஹீரோ சைக்கிளை சுமர் தாக்கூர் என்ற பெயரில் வாங்கினார். இவர்கள் இருவரும், வாங்கிய சைக்கிள்களுடன் பஸ் நிலையம் – பேருந்து நிலையம் வந்தார்கள். அங்கே இராமச்சந்திர கல்சங்கராவும், டான்சிப் சிவ் சிங் இருவரும் காத்திருந்தார்கள். அவர்கள் கையில் வைத்திருந்த பையில் நிறைய குண்டுகள் இருந்தன. இந்தப் பைகளுள் ஒன்றில் இரண்டு குண்டுகள் இருந்தன. அந்தப் பையை இராஜேந்திர சவ்திரியின் சைக்கிளில் தொங்க விட்டார்.*

*பின்னர், அவர் இராஜேந்திர சவ்திரியுடன், முஷாவரத் சவ்க் நோக்கி நகர்ந்தார். இது ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டது தான். இன்னொரு பையை இராமச்சந்திர கல்சங்கரா, மனோகர் நார்வாரியின் சைக்கிளில் தொங்க விட்டார். இவர்கள் இருவரும், ஹமீதா மஸ்ஜித் – படா கப்ருஸ்தான் வளாகம் நோக்கி நடந்தார்கள்.*

*தாங்கள் திட்டமிட்டபடி அந்தந்த இடங்களில் குண்டுகளை வைத்தார்கள்.*

*இந்தக்குண்டுகளைவைத்தபின், நாலுபேரும், ஒரு பஸ்ஸில் ஏறி ஜால்கான் என்ற இடத்தை நோக்கி பயணமானார்கள். மாலையில் ஜால் கோனை சென்றடைந்தார்கள். அங்கிருந்து ஒரு தனியார் பஸ் மூலம் செப்டம்பர்–9, காலையில் (2006) இந்தூர் (மத்திய பிரதேசம்) வந்தடைந்தார்கள்.*

*முன்னரே திட்டமிட்டப்படி லோகேஷ் ஷர்மா அன்று மாலையே புதுடெல்லி வந்தடைந்தார்கள். அங்கிருந்த (STD / PCO) தொலைபேசி பூத்திலிருந்து மாலேகான் குண்டு வெடிப்புக்கு 'தர்மசேன' பொறுப்பேற்கின்றது எனத் தெரிவித்தார். இதை எல்லா ஊடகங்களுக்கும் தெரிவித்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தப்படி ஊடகங்கள் அந்த செய்தியை வெளியிடவுமில்லை. அவருக்கு எந்த முக்கியத்துவத்தையும் தந்திடவுமில்லை. (NIA) என்ற தேசிய புலனாய்வு முகமை தனது புலனாய்வை முடிவுக்குக் கொண்டுவந்தது.*

*ஆர்.எஸ்.எஸ்., ஜெய் வந்தே மாதரம் என்ற அமைப்புகளைச் சார்ந்த 8 பேர் மீது, குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தது.*

*–(இன்ஷா அல்லாஹ் தொடரும்)*

# இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்)



## ஓர் அறிமுகம்

வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர் களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095-இல் போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப் படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்க வில்லை. அவர்களையும் கொலை செய்தனர். சிலுவைப்படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர். சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளை யடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திற மையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப் படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர் களுக்குஇருந்தது. முதலாம்உலகப்போரின்போதுபிரெஞ்சுதளபதிஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து 'எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். இன்றைய தினம் பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது' என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே..

## ஹிஜ்ரி 564 கி.பி. 1169 – சிலுவைப்படையினரின் பேராசை

ஏற்கனவே, இரண்டு முறை அசதுதீனுக்கு எதிரான போரில் ஷவாருக்கு ஃபிரான்குகள் உதவி செய்து இருந்தனர். இதன் மூலம் அவர்கள் தங்களின் இருப்பை எகிப்தில் உறுதி செய்து கொண்டனர். இது கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்குள்ளே ஆசையை உருவாக்கியது. ஆசை பின்னர் பேராசையானது. அந்த பேராசை அவர்களை எகிப்தை கைப்பற்ற தூண்டியது.

அவர்கள் தங்களுடைய படைவீரர்களை ஒன்று திரட்டி, 'எகிப்தில் நம்மை தடுப்பார் யாருமில்லை, நாம் ஒருவேளை எகிப்தை கைப்பற்ற விரும்பினால் நம்மைதடுக்கக்கூடிய சக்தி எதுவும் இல்லை. நூருத்தீன் அவர்களோ யூப்ரடீஸ் நதிக் கரையில் வடக்கு பகுதியில் உள்ளார். நூருத்தீன் படையை சேர்ந்த லெவான்தின் வீரர்களோ இங்குமங்குமாக சிதறிக்கிடக்கின்றனர். எனவே, நாம் சற்றும் தாமதிக்காமல் எகிப்தை நோக்கி விரைந்து சென்று அதனை முற்றுகையிட வேண்டும். எகிப்திற்கு கோட்டைகள் எதுவும் இல்லை. அதன் மக்களுக்கு உதவி செய்யவும் யாரும் கிடையாது. லெவான்தின் வீரர்கள் வந்து சேர்வதற்கு முன் நாம் நம் இலட்சியத்தை அடைந்து விடலாம்' என்று கூறினர்.

எனவே, அவர்கள் எகிப்தை நோக்கி படையெடுக்க திட்டமிட்டனர். ஷவாரை எதிர்த்து கொண்டிருந்த சில எகிப்தியர்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

ஏற்கனவே, அவர்கள் ஷவாருடன் போட்டுக் கொண்டிருந்த ஒப்பந்தத்தின்படி அவர்களுடைய பிரதிநிதி எகிப்தில் தங்கியிருந்தார். அத்துடன் கிறித்தவ படைகள் எகிப்தின் முக்கிய நுழை வாயில்களை தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இதன் காரணமாகவும் எகிப்தை கைப்பற்றும் அவர்களுடைய பேராசை அதிகரித்திருந்தது. ஒட்டுமொத்த எகிப்தும் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருந்தால் அவர்களுக்கு ஆசை வராதா என்ன?

அவர்கள் ஃபிரான்குகளின் மன்னர்களில் முக்கியமான ஒருவருக்கு எகிப்தை முற்றுகையிட்டு கைப்பற்றுமாறு செய்தி அனுப்பினர். எகிப்தை பாதுகாக்க ஒருவரும் கிடையாது என்ற செய்தியையும் அவர்கள் சொல்லி அனுப்பினர். அவர் சற்று விவேகமான எச்சரிக்கையான ஒருவர். அவர் அவர்கள் கூறியதை ஏற்றுக் கொள்ளவில்லை. சில முக்கியமான தலைவர்கள் மன்னரை எகிப்தை முற்றுகையிட சம்மதிக்க வைக்க பெரும் முயற்சி மேற்கொண்டனர்.

## மன்னரின் தயக்கம்

ஆனாலும் அந்த மன்னர், 'என் கருத்துப்படி எகிப்தை நோக்கி படையெடுப்பது நல்லதல்ல. எகிப்தை கைப்பற்ற நாம் படையெடுத்தால் அதன் ஆட்சியாளர், அவருடைய படைகள், எகிப்தின் பொதுமக்கள், விவசாயிகள் என அனைவரும் நமக்கு எதிராக போர் செய்வர். அதற்கும் மேலாக நம்மை பற்றிய பயம் அவர்களை எகிப்தை நூருத்தீன் வசம் ஒப்படைக்க வைத்து விடும். இதன் பின்னர் நிச்சயமாக நாம் லெவான்தையே விட்டு வெளியேறும் நிர்ப்பந்தம் கூட வந்துவிடலாம்' என்று கூறினார்.

ஃபிரான்குகளின் தலைவர்கள் அவர் கூறியவற்றில் இருந்த சரியான நியாயங்களை கவனிக்கும் மனோநிலையில் இல்லை. அவர்களின் உள்ளங்களில் பேராசையே நிரம்பி இருந்தது. அவர்கள் மன்னரை நோக்கி, 'எகிப்தில் இப்போது பாதுகாவலர்கள் யாரும் இல்லை. எனவே, நூருத்தீன் என்ன நடக்கிறது என்று அறிந்துகொண்டு நமக்கு எதிராக படையெடுத்து வருவதற்கு முன்னர் நாம் நம் இலட்சியத்தை அடைந்து விடலாம். இதன் மூலம் நாம் பலமடைந்து விடுவோம். இதன் காரணமாக நூருத்தீன் வேறு வழியின்றி நம்மிடம் பாதுகாப்பை கோரி சமரசம் செய்ய முன் வருவார். நாம் அதனை ஏற்க வேண்டாம்' என்று கூறினர்.

## பில்பிஸ் எதிரிகளால் கைப்பற்றப்பட்டது

இறுதியாக ஃபிரான்குகளின் மன்னர் இதனை வேறுவழியின்றியும் மனமின்றியும் ஏற்றுக் கொண்டார். அவர்கள் இப்போது எகிப்தை நோக்கி படையெடுத்தனர். ஃபிரான்குகள் அஷ்கலானிலிருந்து கிளம்பி 'பில்பிஸ்' வந்தடைந்தனர். அவர்கள் அந்த நகரை முற்றுகையிட்டனர். அந்த நகரத்தை தாக்கி அதனை கைப்பற்றவும் செய்தனர். அந்த நகரத்தை முழுமையாக கொள்ளையடித்தனர். அந்த நகரவாசிகளை கைதிகளாக்கினர். அவர்களை சித்ரவதை செய்தனர். அங்கே அவர்கள் ஐந்து நாட்கள் தங்கியிருந்தனர்.



## பழைய கெய்ரோ தீக்கிறை

இதன்பின்னர் அவர்கள் கெய்ரோவை நோக்கி படையெடுத்தனர். அதனை முற்றுகையிட்டனர். ஏற்கனவே, இவர்கள் பில்பிஸ் நகரத்தை தாக்கி கொள்ளையடித்து சூறையாடிய செய்தியையும் அங்குள்ள மக்களை கைதிகளாக்கிய செய்தியை யும் அவர்களை சித்ரவதை செய்ததையும் அறிந்து கொண்ட கெய்ரோவின் மக்கள் எதிரிகளை எதிர்ப்பதில் தீரம் காட்டி முழுவேகத்துடன் எதிரிகளை எதிர்த்தனர். ஒருவேளை ஃபிரான் குகள் பில்பிஸ் நகரை கைப்பற்றிய போது அந்நகர மக்களை ஒழுங்கான முறையில் நடத்தியிருந்தால் கெய்ரோவில் அவர்கள் இத்தகைய எதிர்ப்பை சந்திக்க வேண்டி வந்திருக்காது. கெய்ரோவும் அவர்கள் வசம் மிக எளிதாக வந்திருக்கும்.

ஆனால் சிலுவைப்படையினரிடம் இயல் பாக குடிகொண்டிருந்த வெறித்தனமும் பேரா சையும் அவர்களை பில்பிஸ் நகரை சூறையாடி அந்நகர மக்களை சிறைப்படுத்தி துன்புறுத்த வைத்திருந்தது. இதன் காரணமாக அவர்கள் கெய்ரோவில் மிகப்பெரிய எதிர்ப்பை சந்திக்க வேண்டியிருந்தது.

இதற்கிடையே சிலுவைப்படையினரின் இந்த துரோகத்தை எதிர்பார்க்காத ஷவார் தன் படையினரை பழைய கெய்ரோவை தீவைத்து கொளுத்த ஆணையிட்டார். ஸஃபர் மாதம் 9ம் நாள் அதாவது சிலுவைப்படையினர் வருகைக்கு ஒரு நாளைக்கு முன்னதாக பழைய கெய்ரோ நகரம் தீவைத்து கொளுத்தப்பட்டது. அந்நகரம் கிட்டத்தட்ட 54 நாட்கள் எரிந்து கொண்டிருந்தது.

## சிலுவைப்படையினருடன் சமரசம்

இதேப்போல் எல்லா நகரங்களையும் தீவைத்து கொளுத்த இயலாது என்பதையும் தன்னால் எகிப்தை காப்பாற்ற இயலாது என்ப தையும் உணர்ந்து கொண்ட ஷவார் இப்போது ஃபிரான்குகளின் மன்னனுக்கு தன்னுடைய பழைய நட்பையும் தன்னுடைய விசுவாசத் தையும் சுட்டிக்காட்டி செய்தி அனுப்பினார். எகிப்தியர்கள் சரணடைய விரும்பவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி ஒரு சமரசத்திற்கு வருமாறு கோரினார். எகிப்தை நூருத்தீனிட மிருந்து பாதுகாக்க ஒரு பெரிய தொகையை தருவதாகவும் கூறினார். பத்து இலட்சம் எகிப்திய தினார்களுக்கு சமரசம் பேசப்பட்டது. அதில் ஒரு பங்கு முன்பணமாக எகிப்தால் கிறித்தவ படையினருக்கு தரப்படும் எனவும் கூறப் பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட சிலுவைப்படை யினர், ‘இந்த பணத்தை நாங்கள் எங்களை பலப் படுத்திக் கொள்ளவும் எங்களின் போர் வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் எடுத்துக் கொள் கிறோம். இதற்கு பதிலாக நாங்கள் யாருக்கும் பயப்படாத ஏன் நூருத்தீனுக்கும் பயப்படாத படையை எகிப்திற்கு அளிப்போம்‘ என்று

கூறினர்.


ஷவார் அவர்களுக்கு ஒரு இலட்சம் தினார்களை தந்து எகிப்தை விட்டு செல்லும்படி கேட்டுக் கொண்டார். அவர்கள் எகிப்தை விட்டு சென்ற பின்னர் மீதமுள்ள பணம் அளிக்கப்படும் என்று கூறினார். இதன் காரணமாக ஃபிரான்குகள் ஒரே நேரத்தில் எகிப்தில் இருந்து திரும்பினர்.

## நூருத்தீன் தயார்

எகிப்தின் பழைய கெய்ரோவை ஷவார் தீவைத்து எரித்த நேரத்தில் ஷவாரால் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்த எகிப்தின் ஆட்சியாளர் அல்–அதீத் அவர்கள் நூருத்தீன் அவர்களிடம் உதவி கேட்டுக் செய்தி அனுப்பினார். அவர் பெண்களின் தலைமுடியின் ஒரு பகுதியை கத்தரித்து அவருடைய கடிதத்துடன் அனுப்பி, ‘இந்த தலைமுடிகள் என் பெண்களின் தலைமுடிகள். அவர்கள் ஃபிரான்குகளிடமிருந்து தங்களை காப்பாற்றும்படி உங்களிடம் முறையீடு செய்கிறார்கள்‘ என்று செய்தி அனுப்பி இருந்தார். இப்படிப்பட்ட செய்தி எந்த ஒருவரையும் கலங்கடித்துவிடும். இந்த செய்தி வந்தவுடன் நூருத்தீன் அவர்கள் கிளர்ந்தெழுந்து தன்னுடைய படையை எகிப்தை நோக்கி படையெடுக்க ஆயத்தம் செய்தார்.

இதற்கிடையே ஷவார் ஃபிரான்குகளின் மன்னனிடம் பணத்தை தர முடிவு செய்தவுடன் அல்–அதீத் மீண்டும் ஒரு செய்தியை நூருத்தீன் அவர்களுக்கு அனுப்பி வைத்தார். ஃபிரான்குகளின் கைகளில் சிக்கி முஸ்லிம்கள் அடைந்திருந்த வேதனைகளையும் சோதனைகளையும் அதில் குறிப்பிட்டு அசதுதீன் அவர்களை எகிப்திலேயே எகிப்தின் படையுடன் இருக்க செய்தால் அதற்கு பகரமாக பெரும் செல்வத்தை தருவதாகவும் அதனை இறைவழியில் போர் செய்ய பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் தெரிவித்திருந்தார். இப்போது நூருத்தீன் அவர்கள் அசதுதீன் அவர்களை தன்னை உடனடியாக வந்து சந்திக்கும்படி ஒரு செய்தி அனுப்பினார். அந்த செய்தியை செய்தியாளர் எடுத்துக்கொண்டு அசதுதீனை நோக்கி வேகமாக பயணித்தார். யாரும் எதிர்பாராத வண்ணம் அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்
தொடரும்



# கவிஞர் வாலியின் இஸ்லாமிய உறவு..!

ஹாஜி. பி.எம். அப்துல் கரீம், குளச்சல்


ஆனந்த விகடன் பத்திரிகை 18−5−2011 இதழில் வந்த கவிஞரின் பிறையும் வில்லும் என்ற தலைப்பில் வந்த கட்டுரையை ஒட்டி எழுதியதே இக்கட்டுரை.

கவிஞர் வாலி 1931−ஆம் ஆண்டு அக்டோபர் 29−ம் தேதி வியாழன். இரவு 8.00 மணிக்கு திருச்சி மாவட்டம், திருப்பராய்த்துறையில் பிறந்தார். தந்தை பெயர் வாங்கல் திரு. ஸ்ரீனிவாச அய்யங்கார், தாயார் திருமதி. பொன்னம்மாள்.

தந்தையார் வெள்ளைக்காரன் காலத்தில் Customs and Excise இலாகா இன்ஸ்பெக்டர். (Salt Inspector) தந்தை முப்பிரி நூல் தரித்த குடுமி உடையவர். காக்கி உடை அணிந்து கேஸ்பிடிக்கப் போவார். அவருக்கு இஷ்டப்பட்டவராக Camp Peon ஒருவர் இருந்தார். அவர் பெயர் திரு. இப்ராஹீம்.

கவிஞர் வாலியின் ஈன்றெடுத்த தாய் ஒருவார காலத்தில் ஜன்னி கண்டு உறுப்பு விறைந்து நினைவிழந்து அல்லலுற்றார். அக்காலத்தில் இதற்கு தகுந்த வைத்தியம் இல்லை. நான் குழந்தையாக இருந்த போது பாலூட்டியது Campen இப்றாஹீமின் இல்லத்தரசி. அந்தமாது தான் எனக்கு ஓரிருமாதங்கள் தாய்ப்பாலூட்டியது. இதில் இந்து என்றும் இஸ்லாமென்றும் முலைப் பாலை வைத்து மூதலிருப்பாருண்டோ? இன்று நான் முத்தமிழ்பா அருந்த காரணம் முஸ்லிம் பால்தான்.

'இளமையில் நான் திருச்சி வானொலியில் தற்காலிகமாக வேலையில் அமர்ந்தேன். உனக்கு கதை எழுத வருகிறது. எழுதய்யா?' என்று ஊக்கமும் உள்வலியும் தந்து என்னை உற்சாகப் படுத்தியது திரு. A.A. ஹக்கிம் அவர்கள். உடன் பிறந்த இளவலாய் என்னை வளர்த்தெடுத்தவர், பின்னாளில் சென்னை வானொலியில் அதிகாரியாக பணிபுரிந்தார். திரு. ஜெயகாந்தனின் நெருங்கிய நண்பர். வாயில் பைப் வைத்து புகைப்பார்.



'A.A. ஹக்கீம் வெற்றிலை அதிகம்போடுபவர். வெற்றிலை போடுவதால் பல் காவி பிடித்திருக்கும். இன்னொருவர் சீதக்காதி போன்று சிந்தை விசாலமானவர். அதே திருச்சி வானொலியில் இன்னொருஇஸ்லாமியபெருமகன்வீற்றிருந்தார். ஓய்! நீர்பெரிய கவிஞனாக வருவீரய்யா!' என்று என் ஆரம்பகால கவிதைகளைப் பார்த்து என்னை ஆசிர்வதித்தவர். அவரும் பெரும் கவிஞர். அவர்

தான் செந்தாமரை என்னும் புனைப் பெயரில் யாப்பொடியாபனுவல்யாத்த திரு. ஹமீது அவர்கள். சதாவதானி திரு. செய்கு தம்பி பாவலரின் திருமகனார் இந்த ஹமீதாகும்.

'இசைஞானி இளையராஜா ஒருநூலை கொடுத்து படிக்கச் சொன்னார். அது கவிஞர் பெருந்தகை என் இனிய இளவல் திரு. மு.மேத்தா அவர்கள் வசன கவியாக புனைந்திருந்த நபிகள் நாயகம் வரலாறு. அதை ஒரே இரவில் வாசித்து முடித்தேன். அற்புதமோ அற்புதம். அதை படித்த பாதிப்பிலே தான் நான் அவதார புருஷனை எழுதப்புகுந்தேன். திரு. மேத்தா ஓர் இஸ்லாமிய பெருமகன். இஸ்லாமிய விளக்கு இன்னோர் இந்து விளக்கை ஏற்றி வைத்தது எனலாம்.'

'என் மனைவி இறந்தபோது மின்மயானம் வரை வந்து எனக்கு ஆறுதலை சொன்னவர்கள் இரு இஸ்லாமிய பெருமக்கள். ஒருவர் புகழ்சால் எலும்பு அறுவை நிபுணர் Dr. ஜாஹிர் ஹூசைன். மற்றொருவர் தி.மு.க. பிரமுகர் ஆயிரம் விளக்கு திரு. ஹூஸைன். இன்னொருவர் திரைப்பட இளைய இயக்குநர் இப்றாஹீம். இவர்களெல் லாம் இரவு முழுக்க என் வாசலில் விழித்தபடி அமர்ந்து துக்கம் காத்தவர்கள். பத்மஸ்ரீ விருதை என் சட்டையில் மாட்டும் போது மேதகு திரு. அப்துல் கலாம் அவர்கள் சொன்னார்கள். இது உங்கிட்ட இருப்பதுதான் பொருத்தம். நான் கூன்பிறைகளால் உருவாக்கப்பட்ட கோதாண் டம்' என்றார். இது விபரங்கள் ஆனந்த விகடனில் கவிஞர் வாலி இஸ்லாமிய நண்பர்கள் பற்றி உளர்ப்பூர்வமாக தன் உயர்விலும் துயரிலும் பங்குகொண்டது பற்றி வெளிப்படுத்திய கட்டுரை தொகுப்பின் ஒரு பகுதியாகும்.

'நாம் உலகில் எங்கு வாழ்ந்தாலும் மனிதன் என்று வரும்போது மனிதநேயமிக்கவர்களாக வாழ இஸ்லாம் நமக்கு போதிக்கிறது. மனிதர் களே! உங்களை நாம் ஒரே ஒரு ஆன்மாவிலி ருந்து படைத்தோம். பின்னர் கிளைகளாகும் கோத்திரமாகவும் நாம் ஆக்கினோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறியும் பொருட்டு உங்களில் யார் நற்செயல் புரிகின்றார்களோ அவர்கள் தான் உயர்ந்தோர்' என்ற இறைவசனம் மனிதனின் மூலம் ஒன்றென்றும், மனிதனின் உயர்வு தன் நற்செயலை, ஒழுக்கத்தை வைத்து தான் என்பதை உறுதிபட சொல்கிறது.

'கவிஞர்வாலி தான் பிராமணராக இருந்தாலும் ஒரு முஸ்லிம் மாதுவிடம் பால் குடித்து வளர்ந் ததையும் தான் திருச்சி வானொலியில் தற்காலி கமாக வேலைக்கமர்ந்ததையும் திரு. A.D. ஹக்கீம், செய்கு தம்பி பாவலரின் மைந்தர் செந்தாமரை' என்ற புனைப்பெயருடைய திரு. ஹமீது போன் றோர் கவிஞர் வாலியின் ஆரம்பால கவிதையைப் பார்த்து ஊக்குவித்ததை நன்றி பெருக்கோடு நினைவு கூர்ந்துள்ளார்.

'சென்னை வந்தபோது பட்ட அல்லலையும் அந்நேரம் வெற்றிலைப் பாக்கு கடை வைத்திருந்த வெற்றிலைக் கடை திரு. சுந்தால் தூர நோக்கோடு நீ பெரிய ஆளான பின் உன்னிடம் பணம் வாங்கு கிறேன்' என்று சொல்லி வெற்றிலை, சாமினார் சிகரெட்டும் கடனாக தந்து உதவிய திரு. சுல்தானை நன்றி பெருக்கோடு நினைவுப்படுத்தி யுள்ளார்.

'படத்திற்கு பாட்டெழுத எங்கே வாய்ப்பு கிடைக்க போகிறதென இதயம் ஒடிந்திருந்த போது வாய்ப்பு தந்தவர் திரு. சுலைமான் அவர்கள். திரு. சுலைமான் மாடர்ன்தியேட்டரில் பாசவலைப் படத்திற்கு பட்டுக்கோட்டை அழகிரிக்கு வாய்ப்பு ஏற்படுத்தியவரும் ஆகும். மேலும் டி.எம்.இப்றாஹீம் என்னும் இசை அமைப்பாளர் எனக்கு ஓரிருபடங்களில் பாட்டு வாங்கிக் கொடுத்து கவலைப்படாதே! உன் ரூம் வாசலிலேயும் ஏகப்பட்ட கார் வந்து நிற்குமென பரிந்துமனதிட்பத்தை உண்டாக்கியவர் இப் றாஹீமெனும் பெருமகன் என்பதை நன்றி பெருக் கோடு கவிஞர் வாலி நினைவுப்படுத்துகிறார்.'

'கவிஞர் வாலி பனிரண்டு வருடம் மனைவி மக்களோடு வாடகை வீட்டில் இருந்ததையும் வாடகைக்குரிய ரூ.வை முன் பின்னாலும் அதை விருப்பு வெறுப்பின்றி வாங்கியவர் அவ்வீட்டின் உரியையாளர் திரு. மதிஜூனைதா பேகம் என்பதை மனம் திறந்து பாராட்டும் பாங்கு பாராட்ட தகுந்ததாகும்.'

'இலக்கியத்தில் எனக்கோர் இடத்தை தந்து உதவியவர் நீதியரசர் திரு. இஸ்மாயீல் என்பதை கவிஞர் வாலி சொல்வதோடு கவிஞர். மு. மேத்தா எழுதிய நபிகள் நாயகம் வரலாறு கவித்தொகுப்பு பார்த்து நான் அவதார புருஷனை எழுத ஆரம்பித்தேன். என்னை எழுதத் தூண்டியது

இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்த கவிஞர். மு.மேத்தாவாகும். கவிஞர் வாலி மனைவி இறந்தபோது ஆறுதலை சொன்னவர்கள் இரு இஸ்லாமியர்கள் இப்படி வாழ்வின் சுக, துக்கங்களில் பங்குபெற்று வாழ்வின் முன்னேற்ற த்திற்கு ஊக்கமும், உற்சாகமும் ஊட்டியவர்கள் இஸ்லாமிய நண்பர்களென்பதை ஆனந்த விகடன் பத்திரிகையில் தெரிவித்துள்ளார்.'

'கவிஞர் வாலியின் வாழ்வு இஸ்லாமிய பால் குடியிலிருந்து பல்வேறு தொடர்பை வெளிப் படுத்துகிறது. சாதாரணமாக மனிதன் உயர் வடைந்தால் தான் வறுமையில் வாடியதையும் உதவியவர் பட்டியலை மறைக்கும் இக்காலத்தில் கவிஞர் நன்றி பெருக்கோடு நினைவுபடுத்தியது.'

எந்நன்றி கொன்றார்க்கு உய்உண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கென்ற

வள்ளுவர் வாக்கை சிரமேற்கொண்டு ஒழுகும் சீரிய ஒழுக்க சீலர் என்பதை தெளிவுப் படுத்துகிறது. அவர் இந்து சமுதாயத்தைச் சார்ந்த வராக இருந்தாலும், இஸ்லாமிய மக்களோடு மனமாச்சாரியங்களை மறந்து பழகும் பாங்கு பாராட்ட வேண்டியது. அதேபோன்று இஸ்லாமிய சமுதாயத்தவர்களும் அவர் ஓர் ஐதீக குடும்பத்தைச் சார்ந்தவரென்பதை மறந்து பழகி பாங்கு இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கோர் எடுத்துக்காட்டு. கவிஞர் வாலியின் இக்கட்டுரை காலத்திற்கேற்றதாகும்.

'சென்னைக்கு வந்தேன் சினிமா வாய்ப்புகள் தேடி. அவ்வப்போது கடனுக்கு சாமினார் சிகரெட்டும், வெற்றிப் பாக்கு, புகையிலையும் தந்து வாலி! நீ பெரிய ஆளானதகப்புறம் இதுக் கான காசை உங்கிட்ட வசூலிக்கிறேன் என்று சளைக்காமல் கடன் தந்தவர் வெற்றிப் பாக்கு கடை திரு. சுல்தான் அவர்கள். பின்னாளில் நான் பெரிய ஆளாக வருவேன்' என்று கணித்து கடன் தந்தவர். நானும் நாகேசும் இவ்வாறு சென்னை வந்தோம்.

'படத்திற்கு பாட்டெழுத வாய்ப்பு இந்தப் பிறவியில் கிட்டாதென்று இதயம் ஒடிந்திருந்த வேளையில் வாடா! கண்ணா! உனக்கொரு வாய்ப்பு தருகிதறேன். கே.வி.மகாதேவன் மியூசிக்கல என் படத்துல எழுத என்று பரிவோடு அழைத்து நைந்து நசிக்க இருந்த நம்பிக்கை வேரில் நூறு சொட்டு நீர்வார்த்து அதற்கு உயிர் ஊட்டியவர் திரு. சுலைமான் அவர்கள்.'

'திரு. சுலைமான் மாடர்ன் தியேட்டரில் பாசவலை படத்திற்கு பட்டுக்கோட்டைக்கு பாட்டெழுத வாய்ப்பு வாங்கித் தந்தவர். அவர் தான் சென்னை வந்து இரு பாகஸ்தர்களுடன் பத்மா பிலிம்ஸ் என்று ஆரம்பித்து சிவாஜி, எம்.ஜி.ஆர். எஸ்.எஸ்.ஆர். போன்றவர்களை வைத்து படம் எடுத்தவர்.'

எஸ்.எஸ்.ஆர். விஜயகுமாரி நடித்து திரு. தாதாமிராசி இயக்கத்தில் தான் தயாரித்த ''நீங்காத நினைவுகள்'' என்னும் படத்தில் எழுத்தாளர் ம.ராவின் சிபாரிசை ஏற்று உடனே எனக்கு பாட்டெழுத வாய்ப்பளித்தவர். திரு. சுலைமான் பிறகு டி.எம்.இப்றாஹீம் என்னும் இசை அமைப்பாளர் எனக்கு ஓரிரு படங்களில் பாட்டு வாங்கி கொடுத்து கவலைப்படாதே! உன் ரூம் வாசலிலேயும் ஏகப்பட்ட கார் நிற்கும் காலம் வரும்! என்று தாயினும் சாலப் பரிந்து பேசினார் அந்த இப்றாஹீம் பெருமகன்.

பன்னிரண்டாண்டு காலம் நான் நுங்கம் பாக்கம் மகாலிங்கபுரத்தில் குடியிருந்தேன். மனைவி மக்களோடு சினிமா வருமானம் தானே! முன்பின் வரும் இருப்பினும் வாடகையை நான் கொடுக்கும் போது வாங்கிக் கொண்டு உதவிய அந்த வீட்டின் உரிமையாளர் திருமதி. ஜூனைதா பேகம் அவர்கள் இப்படி என் வாழ்வு உளியாக இருந்து செதுக்கிய உள்ளங்களெல்லாம் முகமதிய குலத்தில் உதித்தவர்கள்.

'இலக்கியத்தில் எனக்கோர் இடத்தை தந்து அங்கீகரித்த பெருமகனார் அமரராகி விட்ட நீதியரசர் திரு. இஸ்மாயீல் அவர்கள் தலைமை ஏற்றிரந்த கம்பன் களகத்தின் பலமுறை என்னைப் பாட்டரங்கில் தலைவராக்கி அழகு பார்த்தவர். என்னுடைய அவதார புருவினை ஆய்வு செய்து ஐநூறு பக்கத்தில் ஒரு நூலை வெளியிட்டார். அமரர் திரு. டாக்டர் சுப்பு ரெட்டியார் அவர்கள் அதற்கு நீண்ட அணிந்துரை எழுதி என்னைப் பெருமைப்படுத்தியவர் M.M. இஸ்மாயீல் அவர்கள் என்றும்' கவிஞர் நன்றி பெருக்கோடு நினைவுபடுத்தியது.

## தொடரும் தாஃவா - வளரும் இஸ்லாம்

# 41-ஆம் ஆண்டில் தாஃவா

## தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்

### கொள்ளிடம் சுற்றியுள்ள கிராமங்களில் ஒருநாள் தாஃவா சுற்றுப் பயணம்



கடந்த 07.03.2021 அன்று மதியம் 2:30 மணியளவில் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி, கொள்ளிடம் சுற்றியுள்ள புலியந்துறை, சின்ன தெரு வீதி, நல்லூர், ஆரப்பள்ளம், மலைமான் கோட்டம் போன்ற கிராமங்களில் இஸ்லாமிய அழைப்பு பணி செய்யப்பட்டது. இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் சகோதரர் மன்சூர் அலி அவர்கள் தாஃவா நிகழ்ச்சி-யினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராக இஸ்லாமிய அழைப்பாளர் முஹம்மது ஜக்கரிய்யா அவர்களும், ராஜா முஹம்மது அவர்களும், அன்பகம் மதரஸாவின் பொறுப் பாளர்கள் மாஹின், யாசர் அவர்களும் கலந்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்வில் அல்குர்ஆன் தமிழாக்கம், வாழ்வின் நோக்கம் பிரசுரங்கள், எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர், ஜாதி ஒழிந்தது, ஒரு தலித் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும், சிந்திப்பீர் செயல்படு வீர், பா.ரஜ்சித் அவர்களின் உரையும் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும், தீண்டாமை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம் இன்னும் சில பொது தலைப்புகளின் கீழுள்ள புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

இதில் புலியந்துறை என்கிற கிராமத்தின் ஊர் எல்லையில் ஸ்ரீ மகா காளியம்மன் கோயில் வாசலில் நின்றுக் கொண்டிருந்தவர்களிடத்தில் இஸ்லாம் பற்றி அறிமுகம் கொடுக்கப்பட்டது. அப்போது ஒருவர் இஸ்லாம் மதத்திற்கு மாறச்சொல்லி யாரும் வரவில்லையே என்ற நிலை இருந்தது அது இப்போது நிவர்த்தியானது என்றார். ஏன் இப்படி சொல்கிறீர்கள் என்றதற்கு

ஆமாம் கிறிஸ்தவத்திற்கு மாறச் சொல்லி சிலர் வந்தார்கள் சிலரை கிறிஸ்தவத்திற்கு மாற்றிவிட்டு சென்றார்கள் இப்போது நீங்கள் வந்துள்ளீர்கள் என்றார்.

அதற்கு: நாங்கள் வந்ததன் நோக்கம் உங்களை இஸ்லாத்திற்கு மாறுங்கள் என்பதற் காக சொல்ல வரவில்லை, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்றும் சொல்ல வில்லை, மாறினால் உங்களுக்கு அது









தருகிறோம் இது தருகிறோம் என்கிற ஆசை வார்த்தைகளை சொல்ல வரவில்லை எங்களின் நோக்கமும், முஸ்லிம்களின் கடமையாகிய இந்த உலகை படைத்த ஒரே இறைவன் அல்லாஹ் பற்றிய அறிமுகத்தை உங்களிடத்தில் சொல்ல வந்துள்ளோம் என்றோம். அதன்பின் இறைவனின் மகத்துவத்தையும், அவனுடைய படைப்பின் அற்புதங்களையும், மனிதனையும், இந்த உலகினை படைத்த நோக்கங்களை பற்றியும், இம்மை, மறுமை வாழ்வு பற்றிய விளக்கத்தையும் எடுத்துச் சொன்னோம் அவர்களும் ஆர்வத்தோடு கேட்டார்கள். இதனுடன் இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்ற முஹம்மது ஜக்கரிய்யா பாய், ராஜா முஹம்மது அவர்களும் தான் இஸ்லாத்தை ஏற்றபின் தனது வாழ்க்கையில் நடந்த மாற்றத்தை பற்றி விரிவாக கூறினார்கள். சமூக விடுதலைக்காக நடத்தப்பட்ட போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்ற பல சம்பவங்களை விரிவாக எடுத்துக் கூறினார் முஹம்மது ஜக்கரிய்யா பாய் அவர்கள்.

இம்மை, மறுமை வாழ்க்கை பற்றியும், இந்த உலகம், மனிதன் மற்றும் அனைத்தையும் படைக்கப்பட்ட காரணத்தையும் விரிவாக எடுத்துச் சொன்னார் தாஃவா நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் மன்சூர் அலி அவர்கள். அதன்பின் ஒருசிலரின் கேள்விகளுக்கு பதில்களும் கொடுக்கப்பட்டது. இந்த தாஃவா சுற்றுப் பயணமானது மாலை 6:30 மணிக்கு நிறைவு பெற்றது அல்ஹம்துலில்லாஹ்...

## தைக்கால் அருகிலுள்ள மடப்புரம், சோதியக்குடி பகுதியில்

# தாஃவா சுற்றுப்பயணம்



21-3-2021 அன்று தைக்கால் அருகிலுள்ள மடப்புரம், சோதியக்குடி பகுதியில் தாஃவா சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். ஊர் எல்லையில் சில இளைஞர்கள் வந்து கொண்டிருந்தார்கள், அவர்களிடம் சென்றபோது எங்களைப் பார்த்ததும் கோவிலுக்கு செல்லுங்கள் நாங்கள் வருகிறோம் என்றார்கள். அங்கிருந்து கோவிலுக்குச் சென்றோம் அங்கே பெண்களும், ஆண்களும் இருந்தார்கள் எங்களைப் பார்த்ததும், என்ன விஷயம் என்று விசாரித்தார்கள், உடனே நாங்கள் அம்பேத்கரைப் பற்றியும், பெரியாரைப் பற்றியும், இன இழிவு நீங்க இஸ்லாம்தான் தீர்வு,அந்த இறைவனைப்பற்றி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும், அதற்காக வந்தோம் என்று கூறினோம்.

அம்பேத்கர் - பெரியாரின் கொள்கைகளை எடுத்துக்கூறி இஸ்லாத்திற்கு வாருங்கள் என அழைப்பு விடுத்தோம். அப்போது நம் பேச்சைக் கேட்ட வாலிபப் பெண்கள் சிலர் வந்தனர்.



பிறகு இறைவன் யார்? நாம் எதற்காகப் படைக்கப்பட்டோம் மரணத்திற்குப் பின்னால் நம் நிலை என்ன? என்று கூறிக் கொண்டிருந்த பொழுது, ஒரு பெண் குறுக்கிட்டு, பெண்கள் ஃபுர்கா எதற்காக அணிகிறார்கள்? இறைவனுக்கு உருவம் உண்டா என்று கேள்விகள் கேட்டனர். (காரணம் அவர்கள் படிக்கும் போது முஸ்லிம் நண்பர்கள்




அதிகம்.).

அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு நாம் தெளிவாக பதில் கூறினோம். பிறகு நாம் இஸ்லாத்தில் தான் உங்களுக்கு விடுதலை கிடைக்கும். பெரியாரும் ,அம்பேத்காரும் இதனை தான் போதித்தார்கள்.


எனவே நீங்கள் இஸ்லாத்தின் பக்கம் வாருங்கள் என்று அழைப்பு விடுத்தோம். அர்களும் கண்டிப்பாக வருகிறோம் என்று கூறினார்கள்.

அதில் ஒரு பெண்மணியின் கணவர் ஹோட்டல் தொழில் செய்கிறார். அவர் கீழ் சாதி என்ற காரணத்தால் அவர் ஹோட்டலில் யாரும் சாப்பிட வரவில்லை. அதனால் அவர் தன் மனைவியிடம் நாம் இஸ்லாத்திற்கு சென்றுவிடலாம் என்று கூறியுள்ளார். அதற்கு அவர் மனைவி முதலில் மறுத்துள்ளார்.

காரணம் நாம் இஸ்லாத்தை யாரிடம் கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும், யாரை அணுக வேண்டும் என தெரியவில்லை என்று கூறினார். அவர்களுக்கு நாம் கடவுளை மாற்றுவோம், சிந்திப்பீர் செயல்படுவீர், எங்கே சமத்துவம் இங்கே வாரீர், அம்பேத்கர் மதமாற்ற பிண்ணணி, சிக்கல் நாயக்கன் பேட்டையிலிருந்து மக்கா மாநகரம் வரை, தமிழ் குர்ஆன் போன்றவை வழங்கப்பட்டது.

பிறகு அங்கிருந்து புறப்பட்டு ஆனந்தக் கூத்தல் ஊருக்கு சென்றோம். செல்லும் வழியில் கால்வாய் மதில்மேல் சில இளைஞர்கள் இருந்தார்கள், அவர்கள் லுங்கியை முழங்காலுக்கு மேலேகட்டி இருந்தனர். தாடியும் வைத்திருந்தனர், அவர்களிடம், இஸ்லாமிய அழைப்பு விடுக்கப்பட்டது, கடவுளை மாற்றுவோம், சிந்திப்பீர் செயல்படுவீர்,














எங்கே சமத்துவம் இங்கே வாரீர், அம்பேத்கர் புத்தகம் குர்ஆன் வழங்கபப்பட்டது.

இந்நிகழ்வினை சகோதரர் மன்சூர்அலி அவர்கள் தொடங்கி வைத்தார். சிறப்பு அழைப்பாளராக முகம்மது ஜக்ககரியா அவர்களும், அன்பகம் மதரஸாநிர்வாகி மாஹின் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

# ஆயங்குடி, பள்ளம் பகுதிகளில் தாஃவா சுற்றுப் பயணம்



14.3.2021 அன்று தைக்காலை சுற்றியுள்ள பகுதிகளான ஆயங்குடி, பள்ளம் பகுதிகளில் தாஃவா சுற்றுப் பயணம் மேற்கொண்டோம் அல்ஹம்துலில்லாஹ்.

ஆயங்குடி பள்ளம் என்கிற கிராமத்தில் பட்டதாரி இளைஞர் ஒருவரை சந்தித்தோம். அவர் பெரியார் கொள்கையில் தீவிர ஆர்வ முடையவர். நல்லது/கெட்டது எதுவானாலும் முன்னிலையில் வருபவர். அவரிடம் சமூக விடுதலையில் உங்கள் போராட்டம் ஏன் வெற்றி பெறவில்லை? போன்ற சில கேள்விகள் கேட்கப்பட்டது அப்போது அவர் கூறும்போது,

நாங்கள் சுமார் 50 இளைஞர்கள் பெரியாரிய கொள்கையில் தீவிரமாக இருந்து வருகின்றோம். இஸ்லாம் பற்றியும் கொஞ்சம் தெரியும் இருந்தாலும் இஸ்லாம் பற்றி நாங்கள் இன்னும் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்றார். இறைவன் என்றால் யார்? இம்மை, மறுமை வாழ்க்கை பற்றி கூறப்பட்டது. சமூக விடுதலைக்கான தீர்வு அனைத்திற்குமான தீர்வு இஸ்லாத்தில் மட்டுமே பெற முடியும் என்று கூறி புத்தகங்கள், அல்குர்ஆன் தமிழாக்கம் வழங்கப்பட்டது.

பெண்களிடம் தாஃவா செய்யப்பட்டது. அதிகமான பெண்கள் ஆர்வமாக நம் பேச்சை கேட்டார்கள்.

அதில் ஒரு பெண்மணி எனக்கு கடவுள் பக்தி அதிகம், அளவு கடந்த கடவுள் மீது நம்பிக்கை என்றார். அதற்கு நாம் கடவுள் பக்தி அதிகமாக இருந்தாலும், நாளை நம் மரணத் திற்கு பின்னால் ஒரு வாழ்க்கை, நன்மை, தீமை, இழிவுநிலை நீங்க என்ன வழி, நம்மை படைத்தவன் யார் என்று விளக்கமாக கூறவே, உண்மையிலேயே இது எவ்வளவு பெரிய விசயம் என்று வியப்புடன் நின்றார்கள்.

பிறகு அவர்களுக்கு அல்குர்ஆன் தமிழாக்கம், ஜாதி ஒழிந்தது, எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர், தீண்டாமை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம் புத்தகங்கள்



வழங்கப்பட்டது.

அதன்பின் சூரக்காடு பகுதியில் இஸ்லாமிய பிரச்சாரம் மேற்கொண்டோம் அங்கேயும் பெண்கள்தான் அதிகமாக இருந்தார்கள். அதில் ஒரு பெண்மணி முஸ்லிம் வீட்டில் வேலை செய்திருக்கிறார். அவர்கள் என்னிடம் இஸ்லாத்தைப் பற்றி கூறவில்லையே. பிறகு நான் வேலைக்கு செல்லவில்லை, அதன்பிறகு நான் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிவிட்டேன் என்றார்.

நாம் அவர்களிடம் கிறிஸ்தவம் பற்றியும், அல் குர்ஆனில் கூறப்பட்டுள்ள மர்யம் (அலை), ஈஸா (அலை), மூஸா (அலை) அவர்களைப் பற்றியும் எடுத்துக் கூறினோம். பிறகு அப்பெண் மணிக்கு ஜாதி ஒழிந்தது, குர்ஆன், வாழ்வின் நோக்கம் நோட்டீஸ் ஆகியவைகள் கொடுக்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைப்பாளர் சகோதரர் மன்சூர் அலி துவங்கிவைத்தார். மேலும் மக்கள் கேட்ட கேள்விகளுக்கும் மிகவும் அழகாக பதிலுரைத்தார்.

இந்நிகழ்வின் சிறப்பு அழைப்பாளராக முஹம்மது ஜக்கரிய்யா அவர்களும், ராஜா முஹம்மது அவர்களும், அன்பகம் மதரஸா நிர்வாகி மாஹின் அவர்களும் கலந்துக் கொண்டார்கள்.

# 14, மார்ச் 2021 அன்று கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் இலுப்படி காலனி தாஃவா






# வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் தாஃவா நிகழ்ச்சி





வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் கடந்த 21.03.2021 அன்று மாலை மக்ரிப் தொழுகைக்கு பிறகு சுமார் 8 மணி யளவில் தாஃவா நிகழ்ச்சியினை ஒருங்கி ணைப்பாளர் குடியாத்தம் பாஷா அவர்கள் தொடங்கி வைத்தார். தொடக்கமாக உரையாற்ற தொடங்கிய பாஷா அவர்கள் "வாழ்வின் நோக்கம்" நோட்டீஸை முழுமை யாக வாசித்தார். அதன் பிறகு இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்ற "அன்பகம் மதரஸா" வின் முன்னாள் மாணவர் தளபதி சமி யூசுஃப் அவர்கள் தனக்கு நடந்த அனுபவங்களை நண்பர்களோடு பகிர்ந்து கொண்டார். அதாவது இஸ்லாத்தின் மூலமாக எனக்கு என்ன கிடைத்தது? எதன் காரணமாக நான் இஸ்லாத்தை ஏற்றேன்? என்கிற விசயத்தை பற்றி விளக்க வேண்டும் என்கிற நோக்கத் திலும், இறையச்சத்தை வந்தவர்கள் அனை வரும் பெற வேண்டும் என்கிற நோக்கத் தினை முன் வைத்து இந்த பயணம் தொடங் கப்பட்டுள்ளது என்றார்.

அதன்பிறகு தளபதி சமி யூசுஃப் அவர்கள் கடவுள் என்றால் யார்? கடவுளுக்கான தகுதிகள் என்ன? கடவுள் இருக்கிறார் என்று புரிந்துக் கொண்டு ஏற்றுக்கொண்ட பிறகு இந்த உலகத்தில் நடக்ககூடிய பிரச்சனைகள், அநியாயங்களை பார்த்துக் கொண்டிருக் கிறார் ஏன் தடுக்கவில்லை? கடவுளிடம் நமது பிரச்சனைகளை சொல்லி உதவி கேட்கி றோம் ஏன் நமக்கு உடனே உதவி செய்ய வில்லை? என்பது போன்ற பல நடைமுறை விசயங்களை தன் நண்பர்களோடு பகிர்ந்துக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டவர்களிடம் கருத்துக்கள் கேட்கப் பட்டது அப்போது ஒருவர், நீங்கள் சொல்லக் கூடிய விசயங்கள் அனைத்துமே ஏற்றுக் கொள்ள கூடியதாக இருக்கின்றது என்றனர்.


நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டவர் களுக்கு முஹம்மது நபி (ஸல்) அவர்களின்


வாழ்க்கை வரலாறு புத்தகமும், அல்குர்ஆன் தமிழாக்கமும் கொடுக்கப்பட்டது. இதில் சுமார் 10 நபர்கள் கலந்துக் கொண்டார்கள். இந்நிகழ்ச்சியானது சுமார் இரவு 9:30 மணிக்கு நிறைவு பெற்றது அல்ஹம்துலில்லாஹ்.

அதன்பிறகு தளபதி சமி யூசுஃப் அவர்கள் நிகழ்ச்சிக்கு வரமுடியாத சூழ்நிலையில் இருந்த தன் தந்தைக்கும், நண்பர்களுக்கும் அல் குர்ஆன் தமிழாக்கமும், முஹம்மது நபி (ஸல்) அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வாழ்க்கை வரலாறு புத்தகமும் அன்பளிப்பாக வழங்கினார்.


22.03.2021 அன்று காலை வேலூர், குடியாத்ததிலிருந்து அன்பகம் மரதஸாவின் முன்னாள் மாணவர் தளபதி சமி யூசுஃப் அவர்களும் அன்பகம் மதரஸா நிர்வாகி யாசர் அரஃபாத் அவர்களும் வேலூர் கோட்டையினுள் அழைப்பு பணி மேற்கொள்ள வேண்டும் என்கிற நோக்கத்தில் வேலூர் கோட்டைக்குள் சென்றார்கள். மற்ற சில வேலைகள் வந்ததின் காரணமாக அடுத்தமுறை நமது தாஃவாவை இஸ்லாமிய அழைப்பு பணியை மேற்கொள்வோம் என்று முடிவு செய்யப்பட்டது மீண்டும் வேலூரிலிருந்து குடியாத்தம் நோக்கி புறப்பட்டார்கள். இன்னும் பல தாஃவா நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என்கிற நோக்கத்தில்

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை புத்தகங்கள் மற்றும் அல் குர்ஆன் தமிழாக்கங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கது.



# 25, மார்ச் 2021 அன்று நாகை மாவட்டம், திருப்பூண்டி சாலையில் புக் ஸ்டால் போடப்பட்டு சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு இஸ்லாமிய தாவா நடைபெற்றது



















HOLY QUR'AN
HOLY QUR'AN

**அன்பார்ந்த சமுதாயப் பெருமக்களே!**

**அல்லாஹ்வின் அன்பும், அருளும், பரக்கத்களும் நம் அனைவர் மீதும் உண்டாகட்டும்.
நாங்கள் செய்யும் இத்தனை பணிகளும் உங்கள் சார்பில்தான் நடைபெறுகின்றன.
அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் நற்கூலிகளை நல்கிடுவானாக!**

**இந்த இலட்சியப் பயணத்தில் நாம் எதிர்கொண்ட சோதனைகள் பலவகை. அவற்றையெல்லாம் எதிர்கொண்டு அல்லாஹ்வின் உதவியுடன் வென்று வருகின்றோம். அடுத்த இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம்.**

**அல்ஹம்துலில்லாஹ்.**

**இன்னும் பல பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன. அவற்றிற்கும் சேர்த்து உங்களுடைய நிதி உதவிகளைத் தாராளமாக வழங்குங்கள்.
அல்லாஹ் அள்ளித்தரும் நற்கூலிகளைப் பெற்றிடுங்கள்**

செக், டிடி. அனுப்புவோர் **DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்

## தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்

52/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

Please draw your cheques / DD in Favour of **DARUL ISLAM FOUNDATION TRUST**
**and send to : 52/1, Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.**

**கனரா வங்கி கிளைகளில் எங்கிருந்து வேண்டுமானாலும் நமது டிரஸ்ட் அக்கவுண்டில் நேரடியாக தங்களது நிதி உதவிகளை செலுத்தலாம்**

**CANARA BANK, ST.MARY'S ROAD, BRANCH, CHENNAI.**
**SB. A/C. 1287101017301 IFSC CODE : CNRB0001287**

G Pay **81481 29887**

**கைபேசி : 81481 29887, 7904319294, 94434 02721**

# நூல் வெளியீடு



கடந்த 17.03.2021 அன்று மாலை சென்னை மயிலாப்பூர், Archdiocesan Pastoral Centre-ல் முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி, எழுத்தாளர், சமூக செயற்பாட்டாளர் ஹர்ஷ் மந்தர் அவர்கள் எழுதிய “Locking down poor: The pandemic and India’s moral centre” என்ற நூல் வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

Constitution Protection Forum நடத்திய இந்நிகழ்வில் கண்ணியமிகு காயிதேமில்லத் அவர்களின் பேரன் சமூகப் போராளி, தாவூது மியாகான் வரவேற்புரையாற்றினார்.

புகழ்மிக்க பத்திரிக்கையாளர் இந்து என். ராம் நூலை வெளியிட்டார்.

முன்னாள் நீதிபதிகள், கல்வியாளர்கள், முன்னாள் அதிகாரிகள், சமூக செயற்பாட்டா ளர்கள், மார்க்க அறிஞர்கள் பார்வையாளர் களாக பங்கேற்றனர்.

நூலாசிரியர் ஹர்ஷ் மந்தர் அடித்தட்டு மக்களின் நல்வாழ்வுக்காக பாடுபட்டு வரு பவர். காங்கிரஸ் ஆட்சியில் மத்திய அரசின் தேசிய ஆலோசனைக் குழுவில் அங்கம் வகித்தவர்.

2002 ஆம் ஆண்டு குஜராத்தில் முஸ்லிம் களுக்கு எதிராக நடந்த இனப்படுகொலைக்குப் பிறகு குடிமைப்பணி (ஐ.ஏ.எஸ்)யை ராஜினாமா செய்துவிட்டு சமூகப்பணிகளில் ஈடுபட்டு வருபவர்.

2020 பிப்ரவரியில் டில்லியில் முஸ்லிம் களுக்கு எதிராக ஓர் இனப்படுகொலையை ஃபாசிஸ்டுகள் அரங்கேற்றிக் கொண்டிருந்த நள்ளிரவு வேளையில், உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 21 நபர்களை தன்னுடைய சேவை அமைப்பின் ஆம்புலன்ஸ் மூலம் எடுத்துச் சென்று காப்பாற்ற முயற்சித்தார்.

மருத்துவமனைக்கு செல்லும் வழியில் சோதனை என்ற பெயரில் மத்திய அரசின் காவல்துறை வழிமறிக்க, கால தாமதம் காரணமாக ஒருவர் ஆம்பூலன்சிலேயே உயிரிழக்க, நள்ளிரவு வேளையிலும் டில்லி உயர் நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டி நீதிபதி முரளிதரன் வழியாக ஓர் ஆணையைப் பெற்று 20 பேரின் உயிரைக் காப்பாற்றினார்.

டில்லி காவல்துறைதான் மத்திய அரசிடம் இருக்கிறது. சுகாதாரத்துறை மாநில முதல்வர் கெஜ்ரிவாலிடம் தானே இருக்கிறது.? மாநில அரசின் மருத்துவமனை அம்புலன்சுகள் ஏன் இயங்கவில்லை?என்று கேட்டு கெஜ்ரிவாலின் முகத்திரையை கிழித்தவர்.


பின்னர் இவர் பெயரையும் குற்றப் பத்தி ரிக்கையில் இணைத்து குரூரமாய் சிரித்துக் கொண்டிருக்கிறது ஃபாசிஸம். இருப்பினும் நெஞ்சுரத்தோடு போராடி வருபவர். அதனா லேயே ஃபாசிஸ அரசின் கண்காணிப்பில் இருப்பவர்.

பேயாட்டம் போடும் ஃபாசிஸம் கண்டு சோர் வுற்றிருக்கும் நெஞ்சங்களுக்கு இன்றைய நூல் வெளியீட்டு விழாவில் பார்வையாளர்களாகப் பங்கேற்ற பிரமுகர்களை பார்த்த பிறகு புதுத் தெம்பும் உத்வேகமும் பிறந்திருக்கும்.

விழா முடிவுற்றபின் ஹர்ஷ் மந்தர் அவர் களை சந்தித்தோம். கைகுலுக்கி உற்சாகமாக உரையாடினார்.

ஏப்ரல்-20

# தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிரான நாள்...



கூரியூர் முஹம்மத் அலீ ஜின்னா ஷஹீத் (1930-1995) அவர்கள் ஷஹீதாகி 25 ஆண்டுகள் கடந்துவிட்டன.

கூரியூர் ஜின்னா ஷஹீத் அவர்கள் இராம நாதபுரம் கூரியூரில் பிறந்தவர். சிளையான் என்ற செல்லைய்யா அவருடைய பெயர். காவல் துறையில் பணியில் சேர்ந்தபின் அவருடைய பெயர் கான்ஸ்டபுள் செல்லைய்யா.

கான்ஸ்டபுள் செல்லைய்யா என்றால் ரவுடிகள் உலகம் நடுநடுங்கும். ஆனால், அதேவேகத்தில் அலுவலகத்தில் நடக்கும் தீண்டாமைக் கொடுமைகளுக்கும் அவமானங்களுக்கும் எதிராக எழுந்ததால், தண்டனைகள், இடமாற்றம், 100 முறை இடமாற்றம் செய்யப்பட்டவர் கான்ஸ்டபுள் செல்லைய்யா.

அலுவலகத்தில் அவரது வீரத்தையும் நேர்மையையும், பாராட்டுபவர்கள் கூட அவர் தண்ணீர் குடித்த பானையில் தண்ணீர் குடிக்க மாட்டார்கள். பானையையே உடைத்து விடுவார்கள். காரணம் அவர் தீண்டக்கூடாத சமுதாயத்தில் பிறந்தவர்.

இப்படி சொல்லொண்ணா அவலங்களுக்கும் அவமானங்களுக்கும் நாளும் ஆளாகி நின்ற நிலையில்தான் அந்த இராம நாதபுரத்தையே கதிகலங்கிட செய்த ஜாதி கலவரம் நடந்தது (1981). தாழ்த்தப்பட்ட மக்களின் தலைகள் துண்டாடப்பட்டன. வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

தாக்கிய ஆதிக்க ஜாதியினரை திருப்பித் தாக்கியவர்களுக்கு தலைமை தாங்கினார். மக்களை அணி திரட்டினார் என்றெல்லாம் அவர் மீது பொய் வழக்குகள், சித்திரவதைகள், சிறைவாசம்.

இப்படி அவர் வாழ்க்கை மட்டுமல்ல, எண்ணிலடங்கா தலித் மக்களின் - அமுக்கப்பட்ட மக்களின் - வாழ்க்கையும் இப்படித்தான். பொய் வழக்குகள், சிறைவாசம், சித்திரவதைகள் என்றெல்லாம் வாழ்நாள் முழுவதும் அலைக் கழிக்கப்படுகின்றன.

தன்னை மட்டுமல்ல, தான் சார்ந்த மக்களையும் காலாகாலமாக - நிரந்தரமாக - அடிமைப்படுத்தி வரும் ஜாதிய அடுக்கு முறையிலிருந்து நிரந்தரமாக விடுதலை அடையச் செய்ய வழியைத் தேடினார்.

இந்த உலகில் உலவிக் கொண்டிருந்த கொள்கைகளையெல்லாம், ஆராய்ந்தார். இஸ்லாத்தையும் படித்தார். இன இழிவுகளை இல்லாமலாக்கிட இஸ்லாமே ஒன்றே வழி எனக் கண்டறிந்தார். இஸ்லாத்தை ஏற்றார். முஹம்மத் அலீ ஜின்னா என்றானார்.

பள்ளத்தை நோக்கிச் சீறிப்பாயுமாம் வெள்ளம் அதுபோல், பாய்ந்தன பலநூறு வழக்குகள், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால்.

## அவர் செய்த குற்றங்களாக புனையப் பட்டவை

1) தேசத் துரோகச் செயல்களில் ஈடுபட்டார்.

2) மத நல்லிணக்கத்திற்கு ஊறு செய்தார்.

3) பொது சொத்துக்களை சேதப்படுத்தினார்.

4) வன்முறையைத் தூண்டினார் என்பன.

அத்தோடு தேசியப் பாதுகாப்புச் சட்டம், குண்டர்கள் சட்டம்,

இவையும் அவர்மீது பாய்ந்தன...

போதாக்குறைக்கு கேடிகள் பட்டியலிலும் சேர்த்தார்கள்.

ஒரு வழக்கில் பிணை கிடைத்துவிடும் என்றால் உடனேயே இன்னொரு வழக்கு. நடந்துகொண்டிருக்கும் வழக்கில் இன்னொரு புதுப்பிரிவு என வழக்குகள் அவர்மீது பாய்ந்து கொண்டே இருந்தன.

தினமும் ஒரு வாய்தா, பிடி வாரண்ட் என அவரது வாழ்க்கை கலவரமானது. அனைத்தையும் சமாளித்துக்கொண்டே இஸ்லாத்தையும் பிரச்சாரம் செய்தார். ஆயிரக்கணக்கான மக்களை - பல கிராமங்களை - அதாவது ஆண்டாண்டுகாலமாக அடிமைப் பட்டுக் கிடந்த மக்களை, இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார், இணைத்தார். அல்லாஹ்வின் பாதையில்..!

பொறுத்துக்கொள்ள முடியவில்லை பாசிச பரிவாரத்தினால். மாநாடு போட்டு தீர்மானம் போட்டு 1995 ஆம் ஆண்டு, ஏப்ரல் 20-ஆம் நாள் முஹம்மத் அலீ ஜின்னா அவர்களைக் கொலை செய்தார்கள். இல்லை வீர மரணத்தை பரிசாகத் தந்தார்கள். முஹம்மத் அலீ ஜின்னா ஷஹீத் என்றானார்.

**இன்னாலில்லாஹி இறைவனிடமிருந்தே வந்தோம், அவனிடமே மீண்டும் செல்வோம்.**

அவரைப்போல் ஓய்வறியாமல் உழைப்போம்.

இஸ்லாத்தை ஏற்று அனைத்து அடிமைத் தளையிலிருந்தும் விடுதலை அடைவோம்.

**"மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்தே படைத்தான். அவரிலிருந்தே அவர் மனைவி யையும் படைத்தான். பிறகு அவ்விருவரிலிருந்து அனேக ஆண்களையும், பெண்களையும் பரவச் செய்தான்." அல்குர்ஆன் -4:1**

பிறப்பால், படைப்பால் உலக மக்கள் அனைவரும் சமம் என்பதை உணர்வோம். அல்லாஹ்வின் வழிகாட்டுதலாம் இஸ்லாத்தை ஏற்போம்.!

"கடப்பாறையைத் தூக்கியக் காலம் போய்விட்டது. இஸ்லாம் எனும் கருத்தியலைத் தூக்கி இருக்கின்றோம். இன இழிவு ஒழிய இஸ்லாம் எனும் மருந்தை நாம் எடுத்த பிறகு அவர்களில் பலர் எரிச்சலைக் கொட்டுகின்றார்கள். சிலர் இன்றளவுமில்லாத அனுதாபத்தைக் கொட்டுகின்றார்கள். இதிலிருந்து இஸ்லாத்தின் மகிமையைப் புரிந்து கொள்ளுங்கள்."


**- கூரியூர் ஜின்னா ஷஹீத்.**

அவர் உடல் நல்லடக்கம் செய்த பின்பும் 40 இளைஞர்கள் இஸ்லாத்தைத் தழுவினார்கள். அவர்களிடம் கேட்டபோது, நாங்கள் அவரிடம் வாக்குக் கொடுத்திருந்தோம் என்றனர். கூரியூர் ஜின்னா ஷஹீத் அவர்களின் வாழ்க்கையை முழுமையாக அறிந்திட படியுங்கள்

**வேர்கள் வெளியீட்டகத்தின்**

**"கூரியூர் முஹம்மத் அலீ ஜின்னா ஷஹீத்"**

எழுதியவர் **மு.குலாம் முஹம்மத்**



# எது முதலில்
## நூல் வெளியீட்டு விழா



கடந்த 07/02/2021 அன்று சென்னை மந்தைவெளி ஈத்கா பள்ளிவாசல் வளாகத்தில் வேர்கள் வெளியீட்டகத்தின் “எது முதலில்” மொழிபெயர்ப்பு நூலின் வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

இமாம் யூசுப் அல் கர்ளாவீ அவர்கள் அரபியில் எழுதி வெளியிட்ட “பிக்ஹுல் அவ்வலிய்யாத்” எனும் நூலை எளிய தமிழ் நடையில் தமிழ் கூறும் நல்லுலகிற்கு மொழி பெயர்த்து தந்திருக்கின்றார் பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்கள்.

### இந்நூல் பற்றி

1) சர்வதேச மார்க்க அறிஞர்கள் சபையின்தலைவர்இமாம்யூசுப்அல்கர்ளாவீயின் மிக முக்கியமான நூல்களுள் ஒன்று.

2) உலகில் வாழ்க்கை என்பது ஒரு முறைதான். அதில் மறுமையே நமது லட்சியம். எனவே உலக வாழ்வில் எதற்கு எப்போது முதலிடம் தரவேண்டும் என்பதை இஸ்லாமிய அடிப்படையில் அலசுகிறது இந்த நூல்.

3) சொல்லவரும் விஷயங்களை “நறுக்”கென்று சொல்வதும், குர்ஆன் நபிமொழியிலிருந்து அதற்கு சான்றுகளை அடுக்கிக் காட்டுவதும் இந்த நூலின் சிறப்பு.

4) அரபு மொழியின் பல லட்சக் கணக்கான வாசகர்களை கவர்ந்து இந்த நூல் அதன் மூல நூலின் சுவை குன்றாமல் அப்படியே தமிழில் வெளிவந்தது.

5) எதிரிகளால் சூழப்பட்டு நிற்கும் சமுதாயம் எதற்கு முதலிடம் தரவேண்டும்?

6) வீழ்ச்சியிலிருந்து மீள விரும்பும் சமுதாயம் என்ன செய்ய வேண்டும் என்ற அழகிய வழிகாட்டுதல்களை இஸ்லாமிய அடிப்படையில் கூறும் நூல்.

### வரவேற்புரை


நிகழ்ச்சியில் வரவேற்புரை ஆற்றிய வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்கள், சமகால உலகில் இந்த முஸ்லிம் உம்மத் சந்திக்கும் பிரச்சனைகளையும், அதை சீர்திருத்தி சரி செய்வதற்கு இமாம் யூசுப் அல் கர்ளாவீ அவர்கள் செய்த, செய்து கொண்டிருக்கின்ற பணிகள், தியாகங்கள் என அனைத்தையும் எடுத்துரைத்தார்.

இமாம் யூசுப் அல் கர்ளாவீ அவர்களை அறியாதவர்களுக்கு இந்த உரை ஓர் அற்புதமான பாடமாக அமைந்தது. மேலும் அவர் எழுதிய மற்ற புத்தகங்களை வாங்கிப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் பார்வையாளர்கள் மத்தியில் அந்த உரை தூண்டிவிட்டதை காண முடிந்தது.


### நூலாய்வுரை

நூலாய்வுரை நிகழ்த்திய ஜமாத்துல் உலமா சபை பொதுச் செயலாளர் மௌலவி டாக்டர். அன்வர் பாதுஷா உலவி அவர்கள், ஆழமான நூலாய்வுரை ஒன்றை வழங்கினார்.

மிகக் குறுகிய காலத்தில் நூலை வாசித்து







விட்டு, பலரும் கவனிக்காத பல கருத்து களை, நூலில் மேற்கோள்காட்டி பேசினார். “நபி (ஸல்) அவர்களின் ஹீரோயிஸம்” என்று நூலிலிருந்து அவர் மேற்கோள் காட்டி பேசிய நேரங்களில் எல்லாப் பார்வையாளர்கள் மெய்சிலிர்த்து உரையை கவனித்தனர்.

சமகால உலகில் முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கும் பிரச்சனைகளுக்கு அண்ண லாரின் வாழ்வில் எப்படியெல்லாம் தீர்வு கள் உள்ளன? அவைகளை எப்படி பெரு மானாரின் வாழ்விலிருந்து அகழ்ந்தெடுக்க வேண்டும் என்பதையெல்லாம் நூலிலி ருந்து மேற்கோள்காட்டி பேசி, பின்னர் நம்மில், ஆலிம்கள், பொது மன்றங்களில் களம் காணுபவர்கள், இஸ்லாமிய அழைப் பாளர்கள், குறிப்பாக முஸ்லிம் இளைஞர் கள் என அனைவரும் கட்டாயம் வாசிக்க வேண்டிய நூல் இது என்று உரையாற்றி முடித்தார்.

நூலின் முதல் பிரதியை மந்தைவெளி ஈத்கா மஸ்ஜித்-ன் செயலாளர் எல்.கே.எஸ். இம்தியாஸ் அஹ்மது அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

மேலும், மௌலவி கே.ஏ.காதர் மைதீன் மிஸ்பஹி, மௌலவி முஜீபுர் ரஹ்மான் பாகவி, மௌலவி செய்யது மஸ்ஊத்












ஜமாலி போன் றோர்கள் வாழ்த்துரைகள் வழங்கினார்கள்.


**ஏற்புரை**


இறுதியாக ஏற்புரை நிகழ்த்திய நூலின் மொழிபெயர்ப்பு ஆசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்கள், “எது முதலில்” நூலைக் குறித்தும், இந்த தலைப்பில் முதன் முதலில் நூலெழுதி மக்கள் மத்தியில் இந்த சிந்தனையை உருவாக்கிய இமாம் யூசுப் அல் கர்ளாவீ குறித்தும் சுருக்கமாக உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவரும் ஆர்வமுடன் நூலை வாங்கிச் சென்றனர்.

வெளியீட்டு விழா சிறப்பு சலுகையாக 380 ரூபாய் மதிப்புள்ள நூல் 350 ரூபாய்க்கு வழங்கப்பட்டது.






# வெறுப்பை வளர்த்தத் தலைமுறைகள்

## அன்பார்ந்த வாசகர்களே!

முஸ்லிம்கள் எதிர்கொண்டு வீழ்த்திட வேண்டிய மிகப் பெரிய எதிரி, தலைமுறை, தலைமுறையாக இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் தொடர்ந்து செய்யப்படும் பொய்ப் பிரச்சாரங்கள் தாம்.

இந்தப் பொய்ப் பிரச்சாரங்கள் வழி, தலைமுறை, தலை முறையாக முஸ்லிம்கள் மீது வளர்க்கப்படும் வெறுப்புகள். இதைத்தான் இஸ்லாமோஃபோபியா என்கிறோம்.

இந்தப் பொய்ப்பிரச்சாரங்களை முறியடிக்கத் தவறியதால்தான். இன்று உலகெங்கும், முஸ்லிம்கள் கொலைகளுக்கும், குரூரம் நிறைந்த சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள்.

ஏனெனில், இஸ்லாமோஃபோபியா என்ற இஸ்லாத்தின் மீதுள்ள வெறுப்பு இன்றைய கால கட்டத்தில் உச்சத்தில் இருக்கின்றது. இந்தியாவிலும் இதுவே நடந்துகொண்டிருக் கின்றது.

இதில் மிகப்பெரிய வேதனை என்னவெனில் முஸ் லிம்கள், இஸ்லாமோஃபோபியா என்ற குரூரமான வெறுப்பை எதிர்கொண்டு வருகின்றோம் என்பதைக்கூட அறிந்திடாமலிருக்கின்றார்கள். இதில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும் என்பதற்காகவே இந்தத் தொடர்.

இந்தத் தொடரில், நாம் உலகெங்கும், இந்த வெறுப்பை முஸ்லிம்கள் எப்படி வென்று வருகின்றார்கள் என்பதையும் ஆங்காங்கே சுட்டிக்காட்டுகின்றாம். நாம் இந்த முயற்சியில் அதாவது : இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வளர்க்கப்படும் வெறுப்பை எதிர்கொள்வதில் – அதனை வென்று வாகை சூடிடும் வரை தீர்க்கமாகக் களமிறங்கிட வேண்டும். இஃதோர் தொடர் முயற்சி. இந்த முயற்சியில் முன் வைத்த காலை பின் வைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

எதிரிகளின் வெறுப்புப் பிரச்சாரத்தைத் தெரிந்து கொண்டு உண்மைகளை அகழ்ந்தெடுத்து பதில்களைத் தந்திட வேண்டும். இதில் விழிப்புடனிருக்க வேண்டும்.

உண்மைகளே நமது எதிரிகளை வீழ்த்திடும் வலிமை யான ஆயுதம். இந்த ஆயுதத்தைக் கையிடெப்போம் கள மிறங்கிடுவோம். வெற்றி பெறுவோம். இன்ஷா அல்லாஹ்.

*ஜான் ஃபெப்பர் கூறுகின்றார்*

*புதிய சிலுவைப்போர் என்பது, செப்டம்பர் 11 ஆம் நாள் 2001 அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட நாளி லிருந்து சொல்லப்படுகின்றது. (உண்மையில் முஸ்லிம் நாடுகள் மீது ஒரு ஆக்கிரமிப்புப் போரைத் தொடங்குவதற்கு அமெரிக்காவும் அதன் பக்கத்துணையாக நின்ற மேலை நாடுகளும் ஏற்பாடு செய்ததே, இந்த இரட்டைக் கோபுரத் தாக்குதல்.) இதனை பல அத்தாட்சி களுடன் நாம் வைகறை வெளிச்சம் வாசகர்களுக் குத் தந்துள்ளோம். அத்தோடு அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்படுவதற்கு முன் அமெரிக்க தீவிரவாதிகளும், மேலை நாடு களில் இஸ்லாமோ ஃபோபியாவை வளர்த்துக் கொண்டிருக்கும் நிறுவனங்களும் தங்களுக்கு ஒரு கோலோகாஸ்ட் வேண்டும் எனப் பேசிக் கொண்டிந்தன.*

*'கோலோகாஸ்ட்' என்பது 1944–இல் ஜெர்மனி நாட்டில் நடந்ததாகக் கூறப்படும் ஒரு குரூரம் நடந்த கூட்டுக்கொலை. இந்தக் கூட்டுக் கொலை செய்தவர் ஜெர்மன் நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்த ஹிட்லர். கூட்டுக் கொலைக்கு உள்ளானவர்கள் யூதர்கள். இதில் கொலைசெய்யப்பட்டயூதர்களின்எண்ணிக்கை, முதலில் 60 லட்சம் என்றார்கள் சில வரலாற்று ஆய்வாளர்கள். அப்போது உலகம் முழுவதும்*

வாழ்ந்த யூதர்களின் எண்ணிக்கை சுமார் 60 லட்சமில்லை. அப்படியிருக்க ஜெர்மனியில் மட்டும் 60 லட்சம் யூதர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்பது அப்பட்டமான பொய் என்றார்கள். பின்னர் அதனை ஆறு லட்சம் எனச் சுருக்கிக் கொண்டர்கள். இதுவுமில்லை என்பதை ஆய்வாளர்கள் நிரூபிக்கவே 6 ஆயிரம் எனக் கூறினார்கள். இதற்கும் ஆதாரமில்லை என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் கூறி வருகின்றார்கள்.

ஈரானில் நடந்த கருத்தரங்கம் ஒன்றில் யூதர்களை கோலோ காஸ்ட் என்ற கூட்டுக் கொலை நடந்தது என்பதை ஆதாரத்துடன் நிரூபியுங்கள். என அப்போதைய ஈரான் அதிபர் முஹம்மத் அஹ்மத் நஜதி அவர்கள் அழைத்தார். கருத்தரங்கம் நடந்தது. யூதர்களும் வந்தார்கள். ஆனால் கோலோ காஸ்ட்–ஐ நிரூபிக்க இயலவில்லை. (இதையும் நாம் 'வைகறை வெளிச்சம்' மாத இதழில் அவ்வப்போது வெளியிட்டிருக்கின்றோம்.

'கோலோகாஸ்ட்' என்ற கூட்டுப் படுகொலையை நிரூபிக்க இயலாது என்பதால் பல ஐரோப்பிய நாடுகளில் பாசிச சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்தச் சட்டத்தின் படி 'கோலோகாஸ்ட்' என்ற கூட்டுப் படுகொலையை சந்தேகிப்பதும், அதைக் கேள்விக்குறியாக்கிடுவதும் குற்றம்! கைது செய்யப்படுவார்கள். சிறையிலடைக்கப்படுவார்கள். அபராதமும் விதிக்கப்படும்.

இப்படி 'கோலோகாஸ்ட்' கூட்டுப் படுகொலை என்பதை நிலைநிறுத்தி வருகின்றார்கள் யூதர்களும், அவர்களுக்குப் பக்கத்துணையாக நிற்கும் ஐரோப்பியர்களும்.

ஏனெனில் இந்தக் கூட்டுப்படுகொலையைக் காரணம் காட்டி யூதர்கள் கிருஸ்தவ உலகிலும் இதர மக்களிடமும் ஒரு பெரும் அனுதாபத்தைச் சம்பாதித்து வருகின்றார்கள்.

இந்த அனுதாபத்தைக் காட்டியே உலகெங்கும், அநியாயங்களையும், அட்டூழியங்களையும், ஆக்கிரமிப்புக்களையும் நியாயப்படுத்தி வருகின்றார்கள்.

அதேபோல் அமெரிக்கர்கள், முதலில் உலக மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற வேண்டும், அதில் முஸ்லிம் உலகையும், முஸ்லிம்களையும், இஸ்லாத்தையும், குரூரமாகக்காட்டிட வேண்டும். அதன்மூலம் முஸ்லிம் உலகை முஸ்லிம்களைத் தாக்கிட வேண்டும், தகர்த்திட வேண்டும் என திட்டம் தீட்டினார்கள். அமெரிக்காவை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் வெள்ளை நிற வெறியர்கள். அவர்கள் விரும்பிய 'கோலோ காஸ்ட்'தான், 9/11 என்ற இரட்டைக் கோபுரங்களின் தாக்குதல்.

இந்தத் தாக்குதலை காரணம் காட்டி முதலில் ஆப்கானிஸ்தானின் மீது தாக்குதலை நடத்தினார்கள். பின்னர் ஈராக்கைத் தாக்கினார்கள். முதல் இரண்டு வருடங்களிலேயே 25,000 அப்பாவி மக்களைக் கொலை செய்தார்கள்.



2003 ஆம் ஆண்டு ஈராக்–ஐ அமெரிக்காவும், அதன் எடுபிடி நாடுகளும் ஆக்கிரமிக்காமலிருந்தால், ஒரு ஆறு லட்சம் மக்கள் மாண்டிருக்க மாட்டார்கள். (Dawid Brown "Study Claims Iraq's excess death toll has reached 655,000 Washington Post, Oct-11,2003)

ஆப்கானிஸ்தானில் நடத்திய வான்வழி தாக்குதல்களால், 2002–இல் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவி முஸ்லிம்கள் இறந்தார்கள்.


தொடர்ந்து நடந்த அமெரிக்கத் தாக்குதல்களால், இன்னும் *3,000* முஸ்லிம்கள் இறந்தார்கள். (64 - Carl Conetta : Strange Victory)

வெறும் ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகளில்தான் அமெரிக்கா தாக்குதல்களை நடத்தியது என்றில்லை. பாகிஸ்தான், ஏமன் ஆகிய நாடுகளிலும் தனது தாக்குதல்களை நடத்தி அப்பாவி மக்களை குறிப்பாக முஸ்லிம்களைக் கொன்று குவித்தது. இவையெல்லாம் அடுத் தடுத்த ஆண்டுகளில் வீழ்ந்த குவிந்த பிணங்கள்.

*2009* ஆம் ஆண்டு ஸ்டீபன் வால்ட் என்பவர் மிகக்கவனமாகவும் சிக்கனமாகவும் கணக்குப் பார்த்து வெளியிட்ட அறிக்கையில், கடந்த *30* ஆண்டுகளில் அமெரிக்கா, *3* லட்சம் *(3,00,000)* முஸ்லிம்களைக் கொலை செய்துள் ளது. ஆனால் அதே ஆண்டுகளில் முஜாஹிதுகள் திருப்பித் தாக்கியதில் இறந்த அமெரிக்கர்களின் எண்ணிக்கை பத்தாயிரம் *(10,000)*—தான். (Steephen walt, why they hateus foreig Policy Nov. 30,2009)

எங்களது அதாவது கிருஸ்தவர்களின் கணக்கில் முஸ்லிம்களை அதிக அளவில் கொலை செய்தது நியாயம்தான். முஸ்லிம்களைக் கொலை செய்தது சிறந்த நோக்கங்களுக்காகத்தான். தாலிபான்களை அழித்தது, சதாம் ஹூஸைனை ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்தியது. எல்லாம் ஜனநாயகத்தை அறிமுகப்படுத்திடத்தான். இவையெல்லாம் சிறந்த நோக்கங்கள். இந்த நோக்கங்களை நிறைவேற்றிட நாம் செய்த கொலைகள், கொஞ்சம் அதிகம்தான்.

இருந்தாலும் நாம் மேலே சொன்ன நோக்கங்களோடு, நமக்கு எண்ணெய்யும் (பெட்ரோலை) இயற்கைள்ஹ எரிவாயும் கிடைத்தது. நாம் இதையெல்லாம் செய்யவில்லை என்றால், இஸ்லாம் இந்த உலகை மீண்டும் ஆளும் நிலைக்கு வந்துவிடும். இரட்டைக் கோபுரங்கள் நின்ற இடத்தில் P-51 என்றொரு மஸ்ஜித் இருப்பது கூட, இஸ்லாமிய ஆக்கிரமிப்பு, இஸ்லாமிய ஆட்சியின் நீட்சி என்றெல்லாம்தான் பார்த்திட வேண்டும்.



(Justine Elliot Holi The Ground Zero Mosque, Fear Mongering Begam : Salon, Aug -16, 2010)

இப்படி எங்களுடைய அநியாயங்கள் அனைத்தையும் சிலுவைப்போர் *2.0* இல் நியாயப்படுத்தினேன்.

– இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்

தலையங்கம்

# தலைவர்களும் வாக்குறுதிகளும்

தலைவர்கள் வாக்குறுதிகளை அளிப்பதும் அதை செயல்படுத்தாமல் விடுவதும் சர்வ சாதாரணமாகிவிட்டது. அதுவும் தேர்தல் களத்தில் வாக்குறுதிகளை அள்ளி வீசுவதற்கு அளவே இல்லை.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒவ்வொரு குடிமகனின் வங்கிக் கணக்கில் ரூ. 15 லட்சம் தருவதாக கூறினார். இரண்டாவது முறையும் பிரதமர் ஆனார். இதுவரை பணம் வந்தபாடில்லை. விவசாயிகளை நாங்கள் காப்பாற்றவோம். அவர்களின் தற்கொலைகளை தடுப்போம் என்ற கூறினார். ஆனால் இங்கு நூறு நாட்களுக்குமேல் போராடுகிறாரகள். இந்தப் போராட்டத்தில் பல விவசாயிகள் தங்கள் உயிர்களை இழந்தனர்.

ஆனாலும் அவர்களை கண்டுகொள்வதில்லை. வருடக் கணக்கில் ஆட்சி நடத்தினாலும் அப்போது மக்கள் மீது ஏற்படாத அனுதாபம் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் தலைவர்களுக்கு தோன்றிவிடும். ஆட்சிக் காலத்தில் கேஸ் விலை உயர்வால் மக்கள் அவதிப்படும்போது, எந்த சலுகையும் செய்யாமல் ஆட்சிக்கு வந்தால் மாதம் 6 சிலிண்டர் இலவசமாக வழங்குவோம். குடும்பத் தலைவிக்கு மாதம் 1000 ரூபாய் என்று ஒருவர். இன்னொருவர் மாதம் 1500 ரூபாய் என போட்டிப் போட்டுக்கொண்டு தலைவர்கள் வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறார்கள். இவர்களுக்கு நாம் அளிக்கின்ற வாக்குறுதிகளைப் பற்றி யாருக்கும் பதில் சொல்லத் தேவையில்லை என்ற அலட்சியப் போக்கு. வாக்குறுதிகளை மீறுவதும், செயல்படுத்தாமல் இருப்பதை பற்றி எந்த அச்சமும் இவர்களுக்க ஏற்படுவதில்லை.

இஸ்லாம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது என்பது ஈமானின் ஒரு பகுதி என்கிறது. ஒரு முஸ்லிம் வாக்குறுதி அளித்துவிட்டால் உயரத்திலிருக்கும் தண்ணீர் பள்ளத்தை நோக்கி பாயும் வரை அமைதி கொள்ளாதோ அதேபோல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வரை முயற்சி செய்த வண்ணமே இருக்க வேண்டும்.

மக்காவின் ஆரம்பக் காலகட்டத்தில் கஅபா பராமரிக்கும் பொறுப்பு உஸ்மான் பின் தல்ஹா (ரழி) அவர்களுடைய குடும்பத்தினரிடம் இருந்தது. அதன் சாவியும் அவர் வசமே இருந்தது. ஆரம்பத்தில் அவர்கள் இஸ்லாத்தை ஏற்கவில்லை. அந்தச் சமயம் நபி (ஸல்) அவர்கள் தம்மை கஅபாவின் உள்ளே அனுமதிக்குமாறு எவ்வளவோ கூறியும், அவர் அனுமதிக்க வில்லை. உடனே நபி (ஸல்) உஸ்மானே, ஒருநாள் அதன் சாவி எனது கையில் வரும் அதை நான் உமக்குத் தருவேன் என்று வாக்களித்தார்கள்.

ஹிஜ்ரி 8–ஆம் ஆண்டு புனித கஅபா வெற்றி கொள்ளப்பட்டது. உஸ்மான் பின் தல்ஹா (ரழி) வசம் இருந்த சாவியை கொண்டு வரச் சொன்ன நபிகளார் கஅபாவை திறந்து உள்ளே சென்று தொழுது விட்டு வந்தார்கள். உஸ்மான் பின் தல்ஹா (ரழி) எங்கே? என்று வினவிய நபியவர்கள் அவர் வந்த பின் அவரிடமே கஅபாவின் திறவுகோலை ஒப்படைத்து இது என்றைக்கும் உங்கள் குடும்பத்தார் வசமே இருக்கும். அக்கிரமக்காரர்கள் தவிர வேறு எவரும் அதை பறிக்க மாட்டான். இந்த கஅபாவின் இறைவன் உங்களை காப்பாளராக ஆக்கியுள்ளான் என்றார்கள்.

உஸ்மான் பின் தல்ஹா (ரழி) அவர்களுக்கு கொடுத்த வாக்கை நபியவர்கள் காப்பாற்றி

னார்கள். நபியின் வாக்குறுதி அடிப்படையில் இன்று வரை உலகம் அழியும் வரை அவரின் குடும்பத்தார் வசமே கஅபாவின் திறவுகோல் இருக்கும்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

நயவஞ்சகனின் அடையாளம் மூன்றாகும்.

1) பேசினால் பொய்யுரைப்பான்

2) வாக்களித்தால் மாறு செய்வான்.

3) நம்பினால் மோசடி செய்வான்.

(புகாரி)


முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :


"ஒருவர் ஒரு செயலைச் செய்வதாக வாக்குறுதி தந்த பிறகு இன்னொரு செயலில் (அதைவிட) அதிகமான நன்மை இருப்பதாகக் கண்டால் அவன் தன் வாக்குறுதியை வைத்து அதற்குரிய நஷ்ட ஈட்டைத் தந்துவிட்டு, நன்மைகள் அதிகமான செயலையே செய்ய வேண்டும்." (முஸ்லிம்)

''விசுவாசிகளே! நீங்கள் செய்யாத காரியங்களை(ச் செய்வேன் என்று அல்லது செய்ததாக) ஏன் கூறுகிறீர்கள்? நீங்கள் செய்யாத காரியங்களைச் (செய்வேன் என்று அல்லது) செய்ததாகக் கூறுவது அல்லாஹ் விடத்தில் பெரும்பாவமாக இருக்கின்றது."
(ஸீரத்துஸ் ஸஃப்ஃபு:−21)

"விசுவாசிகளே நீங்கள் (உங்கள்) உடன் படிக்கைகளைப் பூரணமாக நிறைவேற் றுங்கள்." (ஸீரத்துல் மாயிதா : 1)

உங்கள் வாக்குறுதியை நீங்கள் பரிபூரண மாக நிறைவேற்றுங்கள். ஏனென்றால் (மறுமையில்) வாக்குறுதியைப் பற்றி (உங்களிடம்) நிச்சயமாகக் கேட்கப்படும்."
(பனீ இஸ்ராயீல் : 34)



# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?

என்னுடைய பெயர் ஸக்கரிய்யா. நான் முஸ்லிமாக மாறுவதற்கு முன்பு என்னுடைய பெயர் மாரிசாமி. நான் இஸ்லாத்தை என் வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டு ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டது.

நான் 1994ம் ஆண்டு என் பெற்றோருக்கு மூன்றாவது குழந்தையாக பிறந்தேன். பார்வை திறன் குறைவுடையவனாக நான் பிறந்தேன். அதற்கு மருத்துவ ரீதியலான பல காரணங்கள் கூறப்பட்டது. என்னுடைய எதிர்காலம், கல்வி போன்றவைகள் எல்லாம் எப்படி இருக்கப் போகிறது என்று என் பெற்றோர்கள் கவலைப் பட்டுக் கொண்டிருந்த காலக்கட்டங்களில் தான் “கிருஸ்தவர்கள் தங்கள் மதத்தைப் பற்றி எடுத்துச் சொல்வதற்கு எங்களிடம் வந்தார்கள்.




மாரிசாமி (எ) ஸக்கரிய்யா

## கிருஸ்தவ மதமும் - எனது வாழ்வும்

எங்கள் குடும்பம் இந்து மதத்தில் பற்றுதலோடு வாழ்ந்து வந்த குடும்பம். ஆனால் இந்துத்துவ சிந்தாந்தத்தில் விருப்பமில்லாத குடும்பம். அதனால் என்னுடைய பெற்றோர்கள் கிருஸ்தவ மதத்தை மறுத்து விட்டார்கள்.

உடனே அவர்களின் கவனம் என் மீது திரும்பியது. என்னுடைய உறவினர்கள் என்னை எப்படியாவது ஒரு கிறுஸ்தவ நிறுவனத்தில் சேர்த்து படிக்க வைத்து விட வேண்டும் என்று குறியாக இருந்தார்கள்.

எங்கள் ஊருக்கு அருகில் “நாகலாபுறம்” என்றொரு ஊர் இருக்கிறது. அங்கிருக்கும் சி.எஸ்.ஐ. திருச்சபையின் பாதிரியார் பரிந்துரையின் பேரில், பாளையங்கோட்டை சி.எஸ்.ஐ. பார்வை திறன் குறைவுடையவர்களுக்கான மேல்நிலைப் பள்ளியில் 2003ம் ஆண்டு நான் சேர்க்கப்பட்டேன்.

அந்தப் பள்ளியின் கிருஸ்தவ ஆசிரிய பெருமக்கள் அனைவரும் உண்மையில் சேவை மனப்பான்மை உடையவர்கள். அந்தப் பள்ளியில் நான் பத்தாம் வகுப்பு வரை படித்தேன். அங்கு படிக்கக்கூடிய மாணவர்கள், இந்துவாக இருந்தாலும் சரி, கிருஸ்தவராக இருந்தாலும் சரி, முஸ்லிங்களாக இருந்தாலும் சரி, திருச்சபைக்கு வர வேண்டும், கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும் என்றொரு சட்டம் இருந்தது.

இதுபோன்ற கட்டாய சட்டங்கள் அங்கே நடைமுறையில் இருந்ததால் எனக்கு அது அதிருப்தியை ஏற்படுத்தியது. இருந்தாலும் அவைகளையெல்லாம் சகித்துக் கொண்டு நான் அங்கு பயின்று வந்தேன்.

இப்படி காலம் செல்ல செல்ல அந்த பள்ளியில் பயின்று கொண்டிருக்கின்ற அனைத்து பார்வையற்ற மாணவர்களும் கட்டாயம் பைபிள் படிக்க வேண்டும் என்றெல்லாம் கட்டாயப்படுத்த தொடங்கினார்கள்.

அதிகமான திறமைகளை வளர்த்து கொள்ள வேண்டும் என்று நிறைய நிகழ்ச்சிகளிலெல்லாம் களந்து கொள்வேன். அப்போது நிறைய திருச் சபை நிகழ்ச்சிகளிலும் என்னை பயன்படுத்திக் கொள்வார்கள். ஆனால் நான் பேருக்காகவும், புகழுக்காகவும் தான் பேசுவேன். அதில் எனக்கு ஈடுபாடு இருக்காது.

நீங்கள் ஞானஸ்தானம் எடுத்து கிருஸ்தவராக ஆகிவிடலாமே என்று கேட்பார்கள். ஆனால் எனக்கு அதில் முழு ஈடுபாடில்லை என்று சொல்லிவிடுவேன். என் மனசாட்சி அதற்கு இடம் கொடுக்காது.

என்னோடு ஒரு சில முஸ்லிம் மாணவர் களும் படித்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களுக்கு இஸ்லாம் என்றால் என்னவென்றே தெரியாது. காரணம் அவர்கள் வீட்டில் இருப்பதைப் போன்று அந்த பள்ளியில் இருக்க முடியாது. அவர்கள் விரும்பாவிட்டாலும் அங்கு அவர்கள் கிருஸ்தவ மதத்தை தான் பின்பற்றியாக வேண்டும்.

ஆனால் இவைகள் எல்லாவற்றிற்கும் அப்பால், அங்குள்ள கிருஸ்தவ ஆசிரிய பெரு மக்கள் அனைவரும் மிகுந்து அன்புள்ளம் கொண் டவர்கள். எங்களை அழைக்கும் போது கூட “என் பிள்ளைகளே” என்று அன்போடு தான் அழைப்பார்கள்.

ஆனால் நான் அவர்களுக்கு மாறு செய்ப வனாகத்தான் அங்கு படித்துக் கொண்டிருந்தேன். எனது நம்பிக்கை என்பது ஒருபுறம் இந்து மதத்தின் மீது ஜோசியங்கள் மீதும், இன்னொரு புறம் அவர்கள் போதித்த கிருஸ்தவத்தின் மீதும் இருந்தது. இதன் விளைவால் 2008ல் நடந்த கிருஸ்தவர்களுக்கு எதிரான கலவரங்களை கூட நியாயப்படுத்தி பேசினேன்.

## இஸ்லாமும் எனது வாழ்வும்

2013ல் நான் பத்தாம் வகுப்பு முடித்தேன். அதன் பின்பு சென்னை அடையாரில் உள்ள புனித லூயிஸ் பள்ளியில் படிப்பதற்காக அங்குள்ள ஓர் ஆசிரியர் எனக்கு பரிந்துரை செய் தார். அங்கு 11 மற்றும் 12ம் வகுப்பு படித்தேன்.

புனித லூயிஸ் பள்ளியில் ஷாகுல் ஹமீது ராஸிக் என்ற நண்பர் என்னுடன் படித்தார். இஸ்லாத்தில் பற்றாக இருப்பார். நல்ல நோன்பாளி. அவர் என்னிடம்;

“நீங்கள் பத்து ஆண்டுகள் கிருஸ்தவ பள்ளி யில் படித்துள்ளீர்கள். இப்போதும் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். இயேசு(அலை) அவர்கள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?” என்று கேட்டார்.

“இயேசு கடவுள் இல்லை.” என்று நான் கூறினேன். உடனே அவர் என்னிடம் இஸ்லாத் தைப் பற்றி கூற ஆரம்பித்தார்.

நான் அவரிடம், “நீங்களெல்லாம் தீவிர வாதிகள் தானே! உங்கள் மதம் தீவிரவாதத்தை தானே போதிக்கின்றது” என்று பேச ஆரம்பித்து விட்டேன். நான் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

“முஸ்லிம்கள் தங்களது மசூதிகளுக்குள் துப்பாக்கிகளையெல்லாம் வைத்திருப்பார்கள். முஸ்லிம்களுக்கு காவல்துறையில் வேலை கொடுக்கக்கூடாது.” என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தேன்.

ஆனால் எனது நணபர் ஷாகுல் ஹமீது ராஸீக் அவர்கள் எனக்கு குர்ஆனைப் பற்றி போதிக்க ஆரம்பித்தார். ஆனாலும் நான் அதிகமாக விதண்டாவாதம் செய்துக் கொண்டிருந்தேன். ஒருக்கட்டத்தில், “நான் உங்களது குர்ஆனையே மாற்றி அமைத்து விடுவேன்.” என்றெல்லாம் கூறினேன்.

## திருக்குர்ஆனும் - நானும்

ஆனால் அவர் எனக்கு பொறுமையாக இஸ்லாத்தை எடுத்து கூறினார். மீண்டும் மீண்டும் என்னிடம், “நீங்கள் இயேசு (அலை) அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்பார்.” நான் அவரிடம், “இயேசு (அலை) அவர்கள் கடவுள் இல்லை. நான் அவரை வணங்க மாட்டேன்” என்று கூறுவேன். அப்படி ஒரு முறை நான் சொன்னபோது, “திருக்குர்ஆனும் இதைத்தான் சொல்கிறது” என்றார்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இயேசு (அலை) அவர்களைப் பற்றி திருக்குர்ஆனில் இருக்கின்றதா? என்று வியப்போடு கேட்டேன். பின் குர்ஆனை படிக்க ஆரம்பித்தேன். படிக்க, படிக்க குர்ஆனின் கருத்துக்கள் எனக்கு ஆச்சரி

யத்தை ஏற்படுத்தியது. நான் அவரிடம் கேட்டேன், இந்த குர்ஆனை யார் எழுதியது? என்று.

அதற்கு அவர், "குர்ஆன் நம்மை படைத்த இறைவனுடைய வார்த்தைகள். இறைவனிட மிருந்து, ஜீப்ரீல் (அலை) அவர்கள் மூலமாக, முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டது" என்றார்.

குர்ஆனைப் பற்றி எனக்கு அதிகமாக கூறிக் கொண்டே இருந்தார். குர்ஆனுடைய கருத்துக் கள் எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. "நான் குர்ஆனை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நான் முஸ்லிமாக மாறவேண்டுமா?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "இஸ்லாம் ஒர் வாழ்வியல் முறை. அது நம்மைப்படைத்த இறைவனால் நமக்கு வழங்கப்பட்டது" என்று கூறினார். அதன் பின் அதே புனித லூயிஸ் பள்ளியில் 2014ம் ஆண்டு ஜனவரி மாதம், "லா இலாஹ இல்லல்லாஹ். முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்ற திருக்கலிமாவை மொழிந்து இஸ்லாத்தை என் வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டேன்.

பத்து ஆண்டுகள் எனக்கு கல்விப் பணி செய்த கிருஸ்தவ பெருமக்கள், எதிர்காலத்தில் இவர் ஒரு மிகச்சிறந்த கிருஸ்தவராக இருப்பார் என்று என்னைப் பற்றி மேடை மேடையாக பேசிய கிருஸ்தவ பெருமக்கள் அதிர்ந்து போனார்கள் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை அறிந்து!

நான் அவர்களிடம் தெளிவாக கூறினேன், "நான் உங்கள் நிறுவனத்தில் கல்வி பயின்றேன். ஆனால் எப்போதும் நான் ஞானஸ்தானம் எடுத்து, கிருஸ்தவ மத சடங்குகளை பின்பற்றிய தில்லை. நான் பிறந்த இந்து மதத்தில் தான் உங்கள் நிறுவனத்தில் பயிலும் போதும் நான் இருந்தேன். அதனால் ஒரு இந்துவாக இருந்த நான், முஸ்லிமாகிவிட்டேன்" என்று.

அதன் பின் புனித லூயிஸ் பள்ளியில் எனது படிப்பை முடித்தேன். கல்லூரிப்படிப்பிற்காக, திருநெல்வேலியில் உள்ள சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில் சேர்ந்தேன். அங்கு எனக்கு இஸ்லாத்தின் போதனைகள், தொழுகை முறை கள் எல்லாம் அழகாக சொல்லிக் கொடுத்தார்கள். நிறைய இஸ்லாமிய அமைப்புகள் என்னைத் தொடர்பு கொண்டு பேசினார்கள்.

நான் பார்வை திறன் குறையுடையவன். ஆனால் எனக்கு குர்ஆனை அதன் அரபு மொழியில் படிக்க வேண்டும் என்று ஆசை யாகவும், ஏக்கமாகவும் இருந்தது. அப்போது தான், ஃபக்ருதீன் என்றொரு ஆசிரியர் எனக்கு நண்பரானார். அவரும் பார்வை திறன் குறையு டையவர் தான். பட்டுக்கோட்டை ஆவணம் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரி கின்றார்.

அவர் என்னை மேல் விஷாரத்தில் உள்ள ஒரு மத்ரஸாவில் அரபி கற்க சேர்த்து விட்டார். அங்கு நான் குர்ஆனை ஓதும் அளவிற்கு அரபி கற்றுக் கொண்டேன். உண்மையில் குர்ஆனை அதன் தாய் மொழியில் ஓத ஆரம்பித்த போது, எனக்கு மிகுந்த மன அமைதி கிடைத்தது.

## திருக்குர்ஆனின் அற்புதங்கள்

திருக்குர்ஆனில் நிறைய அத்தியாயங்கள் இருக்கின்றன. அதில் என்னை மிகவும் கவர்ந்த சிந்திக்க தூண்டிய அத்தியாயம் எதுவென்றால், சூரா இக்லாஸ் எனும் அத்தியாயம் தான். அந்த அத்தியாயத்தின் நான்கு வசனங்கள் அல்லாஹ் அல்லாத எல்லா கடவுள் கொள்கைகளையும் உடைத்து விட்டது. தன்னைத்தானே கடவுளாக கூறிக்கொள்ளும் எந்த மனிதனும் திருக்குர்ஆனின் இந்த அத்தியாயத்திற்கு முன் நிற்க முடியாது.

மேலும் திருக்குர்ஆனில் மனிதன் எப்படி படைக்கப்பட்டான் என்ற கருத்துக்களை தாங் கிய வசனங்களை எல்லாம் படிக்கும் போது, அறிவுப்பூர்வமாகவும், மிகவும் எதார்த்தமாகவும் இருந்தது.

அல்லாஹ் சொல்கிறான்: "அலக்" என்ற நிலை யிலிருந்து மனிதனை அல்லாஹ் படைத்தான்" - திருக்குர்ஆன் - 96:02

திருக்குர்ஆனை அல்லாஹ்தான் அருளினான் என்பதை நான் ஆணித்தரமாக உணர்ந்த அத்தி யாயம், 55வது அத்தியாயமான அர்ரஹ்மான் அத்தியாயம் தான். அதில் இயற்பியல், வேதி யியல், வரலாறு என எல்லா வகையான கல்வியும் இருக்கின்றது.

## இஸ்லாம் கூறும் மனித சமத்துவம்

நான் பிறந்த இந்து மதத்தில் வரணாசிரம கோட்பாடு எனும், உயர்ந்தவர், தாழ்ந்தவன்




மாரிசாமி (எ) ஸக்கரிய்யா தொட்டுணர்தல் மூலம் திருக்குர்ஆனை ஓதும் காட்சி

என்று சாதி எனும் சாக்கடையில் பல கோடி மக்கள் மூழ்கியிருக்கின்றனர்.

உதாரணத்திற்கு ஒரு பார்ப்பனரையும், பஞ்சமரையும் எடுத்துக் கொள்ளுங்கள். பஞ்சமர் பார்வையில் பார்ப்பனர் உயர்ந்தவர். பார்ப்பனர் பார்வையில் பஞ்சமர் தாழ்ந்தவர். ஆனால் இவர்கள் இருவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால், ஒரே தட்டில் உணவை உண்பதும், தோளோடு, தோள் சேர்த்து தொழுவதும் என சமமான நிலை ஏற்படும். இஸ்லாத்தின் மாண்புகளில் இது முக்கியமான ஒன்று.

நான் முஸ்லிமாகிவிட்டேன் என்று தெரிந்தவுடன் என் குடும்பத்தார்கள் என்னிடம், “இஸ்லாம் தீவிரவாத மார்க்கம்.முஸ்லிம்கள் தீவிரவாதிகள். அங்கு ஏன் சென்றாய்?” என்றெல்லாம் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

“எனக்கு இஸ்லாம் பிடித்துவிட்டது. நான் இஸ்லாத்தில் தான் இருப்பேன். என்றும் மேலும் இஸ்லாத்தை குறித்தும் என் குடும்பத்தார்களுக்கு எடுத்து கூறினேன்.”

அல்லாஹ்வுடைய மாபெரும் கிருபையால் என்னுடைய இரண்டு சகோதரர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டனர். அல்ஹம்துலில்லாஹ்.

அதன்பின் 2016ம் ஆண்டு அரசு பதிவேட்டில் என்னுடைய மதம் மற்றும் பெயர் மாற்றத்துடன் அதிகாரப்பூர்வமாக என்னுடைய மதமாற்றத்தை பதிவு செய்தேன். மேலும் என்னுடைய அனைத்து ஆவணங்களிலும், ஸக்கரிய்யா என்கிற இஸ்லாமிய பெயரை மாற்றிவிட்டேன்.

## மாற்று திறனாளிகளான நாங்கள் திருக்குர்ஆனை கற்பதில் இருக்கும் பிரச்சனைகள்

திருக்குர்ஆனை முழுமையாக மனனம் செய்யும் முயற்சியில் நான் இறங்கியுள்ளேன். திருக்குர்ஆனின் 76வது அத்தியாயத்திலிருந்து 114வது அத்தியாயம் வரை நான் மனனம் செய்துவிட்டேன்.

நீங்களெல்லாம் அரபு மொழி திருக்குர்ஆனை 150 ரூபாய்க்கு வாங்கி விடுவீர்கள். ஆனால் எங்களைப்போன்ற பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு அப்படி கிடைப்பதில்லை. இப்போது என்னிடம் உள்ள இந்த குர்ஆனின் சிறு பகுதி மலேசியாவிலிருந்து வரவழைக்கப் பட்டது.

*பார்வையற்றவர்களுக்கான முழு குர்ஆன் இந்தியாவில் எனக்கு கிடைக்கவில்லை. சதக் கத்துல்லாஹ் அப்பா கல்லூரியின் பேராசிரியர் தமீமுன் அன்சாரி அவர்களும், கமாலுத்தீன் அவர்களும் இணைந்து துருக்கியிலிருந்து எனக்கான குர்ஆனை வாங்கித் தந்தார்கள். அதன் விலை இந்திய மதிப்பில் சுமார் ஆறாயிரம் ரூபாய் வரும்.*

*மொத்தம் 30 தொகுதிகளாக முழு குர்ஆனும் என்னிடம் இருக்கின்றது. தொட்டுணர்தல் மூலமாக நான் குர்ஆனை வாசிப்பேன்.(பார்க்க குறிப்பு 01)*

**முஸ்லிம் சமூகமே இதை கவனி!**

*ஒரு முக்கியமான விஷயத்தை நான் இங்கே சொல்லியே ஆகவேண்டும். மாற்று திறனாளி குழந்தைகள் படிப்பதற்கு நம் நாட்டில், கிருஸ்தவ நிறுவனங்கள் நடத்தும் கல்வி சாலைகள் தான் இருக்கின்றது. அப்படி படிக்க வரும் முஸ்லிம் குழந்தைகள் உட்பட அனைத்து மதத்தவர்களும் அங்கே கிருஸ்தவர்களாக மாற்றப்பட்டு விடுகின்றனர்.*

*“நான் ஒரு மாற்றுத்திறனாளி. எனக்கான வாய்ப்புகளை முஸ்லிம்கள் ஏற்படுத்தி தந்தார்களா? கிருஸ்தவர்கள் தான் ஏற்படுத்தி கொடுக்கின்றனர்” என்று கூறி கிருஸ்தவராகவோ, இந்துவாகவோ மாறிவிடுகின்றனர்.*

*அதனால், மாற்றுத்திறனாளிகளுக்கான பாடசாலைகள் நம் சமூகத்து நிறுவனங்களால் நடத்தப்பட்டால் இதுபோன்ற மதமாற்றங்களை தவிர்க்க முடியும். முஸ்லிம் சமூக மாற்று திறனாளிகளுக்கும் தீனுடைய விஷயங்களை கற்றுக் கொடுக்கலாம். உலக கல்வியையும் கற்றுக் கொடுக்கலாம். மேலும் அது எல்லா சமூகத்து மக்களுக்கும் பயன் தரும் வகையிலும் இருக்கும்.*

*(தன்னுடைய உரையை முடித்தவுடன் அங்கிருந்த அனைவர் முன்னிலையிலும், தொட்டுணர்தல்மூலம்திருக்குர்ஆனைஓதிக்காண்பித்தார் ஸக்கரிய்யா! கேட்டோர் உள்ளங்களில் அது நெகிழ்ச்சியையும், கண்களில் கண்ணீரையும் வரவைத்தது.)*

Source: http://youtube.com/user/dawahcesh

**- அஷ்ரஃப் இஸ்லாம்.**

**பின்குறிப்பு - 1 :**
**பார்வை திறனற்ற மாற்று திறனாளிகளுக்கான திருக்குர்ஆன் இந்தியாவில் கிடைப்பதில்லை. மலேசியா, துருக்கி, எகிப்து போன்ற வெளிநாடுகளில் தான் கிடைக்கின்றன. அவைகளை பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் இருப்பதில்லை. எனவே தமிழகத்திலும் அவர்களுக்கான திருக்குர்ஆன் பிரதிகள் கிடைப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.**



# மரபு சார்ந்த உணவுகளின் மகத்துவம் அறிவோம்..!

மருத்துவர் கு.சிவராமன்

நாம் அடிக்கடி தவற விடுகிற ஒரு விஷயம் பற்றித்தான் முதலில் பேசப் போகிறோம். ஆம்... காலை உணவை பலர் கண்டுகொள்வதே இல்லை. உண்மையில் இது மிகவும் முக்கிய மானது. காலை உணவு என்பது ஆவியில் வெந்த உணவாகவோ, பழங்காளகவோ இருப்பது நல்லது என்கிறார்கள் உணவியல் நிபுணர்கள்.

இட்லி, இடியாப்பம். புட்டு போன்ற ஆவியில் வெந்த உணவுகளையும், நம் மண்ணிலேயே விளையக்கூடிய பழங்களையும் எடுத்துக் கொள்ளலாம். உதாரணமாக... வாழை, கொய்யா, மாதுளை, பப்பாளி போன்றவற்றை எடுத்துக்கொள்ளலாம். முடிந்த வரை இயற்கை யாக விளைந்த, ரசாயனக் கலப்பு இல்லாத பழங்களை உட்கொள்ளலாம்.


மதிய உணவில் நிறைய மணமூட்டிகளை சேர்த்துப் பழக வேண்டும். இஞ்சி, சீரகம், புதினா, பூண்டு, கொத்தமல்லி, வெங்காயம், மிளகு... இவை வெறும் வாசனையை மட்டுமே கொடுப்ப தில்லை. நாமோ இவையெல்லாம் நல்ல மசாலா ஃப்ளேவர் என நினைத்து சாப்பிடுவதற்கு மகிழ்வைக் கொடுக்கக்கூடிய ஒன்றாகவே நினைக் கிறோம். ஆனால் இவை அனைத்தும் மிகச்சிறந்த மருத்துவக் கூறுகளைக் கொண்டுள்ளன.

- வெந்தயம் – சர்க்கரை வராமல் தடுக்கும். ரத்தக் கொழுப்பு சேராது.
- பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சனையைத் தவிர்க்க உதவும்.
- பெருங்காயம் நேரடியாக H1N1 என்கிற வைரஸையே தடுக்கும்.
- அன்னாசிப்பூ – அது அலங்கரிக்க மட்டுமே வைப்பதல்ல... மணத்துக்காக மட்டுமே ஆனதல்ல. இது ஸ்வைன் ஃப்ளூ என்கிற பன்றிக் காய்ச்சலைக்கூட எதிர்க்கும் சக்தி படைத்தது.
- சீரகம் – அகத்தை சீராக வைக்கக் கூடியது. வயிற்றை சீர்படுத்தக்கூடியது.
- கறிவேப்பிலை – இது கெட்ட கொழுப்பைக் குறைக்கக்கூடியது. ரத்த சர்க்கரை அதிகரிக்காமல் தடுப்பதற்கும் உதவும்.

இப்படியாக நாம் காலம் காலமாக சிறுசிறு மணமூட்டிகளை தெரிந்தோ தெரியாமலோ நாம் உணவில் சேர்த்து வந்துள்ளோம். இவற்றை திரும்பவும் மீட்டெடுக்க வேண்டும். வாழ்வியல் நோய்கள் வராமலிருக்க தினம் தினம் இயற்கை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

### சிற்றுண்டிகள்

நம் வீட்டில் செய்யக்கூடிய கடலை உருண்டை, எள் உருண்டை, கேழ்வரகு உருண்டை ஆகியவற்றின் மூலமும் நாம் அனைத்துச் சத்துக்களையும் பெற முடியும்.





- கம்பு, கருப்பு எள்ளு – இரும்புச் சத்து நிறைய கிடைக்கிறது.
- கேழ்வரகு – இரும்பு மற்றும் கால்சியத்தை உள்ளடக்கியுள்ளது.
- எள்ளு – பெண்ணின் கருப்பையை வலுப்படுத்தும் சக்தியை அளிக்கிறது.
- இந்த உருண்டைகளை உருட்ட உதவும் கருப்பட்டியில் 230 விதமான சத்துப் பொருட்கள் உள்ளன.

இப்படிப்பட்ட மரபு சார்ந்த உணவுகளை அன்றாடம் எடுத்துக் கொள்ளலாம். அதே நேரத்தில் புதிய உணவுகள் அனைத்தும் தவறானதென்பது கிடையாது. புதுமைகளில் நிறைய நல்ல விஷயங்களும் இருக்கத்தான் செய்கின்றன. புதுமையை கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக் கொள்ளக் கூடாது. மரபு வழி உணவுகளை 'பழைமையானவை' என்றும் ஒதுக்கி விடக் கூடாது. புதுமையான உணவுகளில் உடலுக்கு நல்லவற்றையும், அவற்றை உட்கொண்டால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் தெரிந்து கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எது தேவையற்றது என்பதைத் தெரிந்து கொண்டு, அதை ஒதுக்கிவிட்ட, உடலுக்கு நன்மை தரக்கூடிய உணவுகளை நாமே எடுத்துக் கொள்ளலாம்.

## யாருக்கு எந்த உணவு?

ஊடகங்கள் மூலமாக, இணையங்கள் மூலமாக பூசி பல விஷயங்கள் வருகின்றன. விளம்பரங்களைப் பார்த்துப் பார்த்து பழகி விட்டு, நம் குழந்தைகளுக்கும் நமக்கும் நன்மை என நினைத்து, சட்டென நம் மரபை விலக்கி, புதியவற்றை நாடிச் செல்கிறோம்.

நம் மரபு வழி உணவுகளையோ, நம் உணவு முறைகளையோ பிறருக்கு, அதாவது வேறு நாட்டவருக்கோ வேறு இனத்தவருக்கோ திணிக்கக்கூடாது. அடுத்தவர் உணவு முறையையும் பின்பற்றக்கூடாது. அவரவர் தட்பவெப்பத்துக்கு ஏற்றவாறு உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக சைபீரியாவில் கடும் குளிரில் வாழக்கூடியவருக்கு நிறை இறைச்சி – சுட்டெடுத்த இறைச்சி – அவசியம். அது அவருக்கும் அவரது உடல் நலத்துக்கும் ஏற்றது.

ஆப்ரிக்க பாலைவனத்தில் வசிப்பவருக்கு அதிக அளவு குளிர்ச்சி கொடுக்கக்கூடிய உணவுகள் தேவைப்படும். உணவைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் முக்கியமானது அவர்கள் வாழக்கூடிய மரபு வழி உணவுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

**எந்தெந்த உணவுகளைப் பொதுமைப்படுத்த வேண்டும். எது எது உடலுக்கு குற்றது என்பதை யோசித்து எடுத்துக்கொள்ள வேண்டும். நம் தட்பவெப்பத்துக்கும், நம் மக்களுக்கும் ஏற்ற உணவுகளுக்கே முதலிடம் கொடுக்க வேண்டும். இன்று முதல் இந்த நெறிமுறைகளைப் பின் பற்றுவோம்.**

– நன்றி : முதுமை எனும் பூங்காற்று



# கிரேகத்தில் பெண்களுக்கு இப்படியொரு வரலாறு...

## அத்தனையும் கற்பனை!

"பாண்டோரா" என்றொரு பெண். அவள்தான் கிரேக்கத்தின் முதல் பெண்.

இந்தப் பாண்டோரா என்பது இரண்டு சொற்களின் பிணைப்பு.

PAN "பாண்" – இதன் பொருள் – எல்லாம். ALL

டோரா – இதன் பொருள் – பரிசுகள் GIFT

கிரேக்கதின் தத்துவங்களில் ஆண் கடவுள் களும் ஏராளம் – பெண் கடவுள்களும் ஏராளம்.

இந்தக் கடவுள்கள் ஒவ்வொருவரும் ஒரு பரிசைத் தந்தார்கள். இந்தப் பரிசுகளையெல்லாம் கொண்டு பாண்டோராவை ஒரு முழுமையான உயிரினமான – எல்லாம் பெற்ற உயிரினமாக ஆக்கிட வேண்டும் என்பதே நோக்கம். கிரேக் கர்கள் நம்பும் பல கடவுள்களில் ஒருவர் ஸீயல். இந்தக் கடவுளுக்கு மனித இனத்தின் கோபம் வந்துவிட்டது. அதனால் இந்தக் கடவுள் இந்தப் பெண்மணியைப் பூமிக்கு அனுப்பிவிட்டார். அனுப்பியபோது அவளது கையில் ஓர் பெட்டி யைக் கொடுத்தார்கள். அந்தப் பெட்டியைத் திற ந்துவிடக் கூடாது. ஆனால் ஆதி பெண் பாண் டோராவுக்குள் ஒரு கிளுகிளுப்பு. எப்படியாவது அந்தப் பெட்டியைத் திறந்துவிட வேண்டும். அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கின்றது எனப் பார்த்திட வேண்டும் என்றொரு ஆர்வம். கிரேக் கர்களின் – கற்பனைகளின் படி அவள் இந்த ஆர்வத்தைக் கட்டுப்படுத்தி இருக்க வேண்டும்.

ஆனால் பாண்டோராவால் இயலவில்லை. அந்தப் பெட்டியை BOX-ஐ திறந்துவிட்டாள்.

உலகில் மனிதர்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும் தீமைகள் அனைத்தும் பிரிவாக மெடுத்து கிளர்ந்து வெளியே வந்துவிட்டன.

மில்டன் என்றொரு ஆங்கில புலவர். இவர் இழந்த சொர்க்கம் PARADISE LAST - என்றொரு காவியத்தில் பாண்டோரவைப் பற்றிக் குறிப் பிடும்போது,

பாண்டோரா – கடவுள்கள் தங்களது எல்லா பரிசுகளையும் தரப் பெற்றவள் எனக் குறிப்பிடு கின்றார்.

மொத்தத்தில் கிரேக்க தத்துவங்களின் அடிப் படையில் பெண்தான் தீமைகள், துன்பங்கள் ஆகியவற்றின் பிறப்பிடம்.

பெண்தான் தீமைகள், துன்பங்கள் – குழப்பங் கள் ஆகியவற்றின் பிறப்பிடம் எனக்கருதுகின்றது ஒரு தத்துவம். அதை ஒரு வரலாற்றை உண்மை என நம்புகின்ற ஒரு சமுதாய அமைப்புப் பெண்களை எப்படி நடத்தும் என்பதை நாம் மிகவும் எளிதாகக் கண்டுகொள்ள இயலும்.

இந்தச் சமுதாய அமைப்பில் யாத்தப் பெறும் சட்டங்கள் அவளுக்கு எப்படி உரிமைகளை வழங்கும். அவளுக்கு உரிமைகளையோ சுதந்தி ரத்தையோ தந்தால் உலகில் குழப்பமும் கொந்த ளிப்பும்தான் உருவாகும் என்பதைக் கடவுளின் பெயர்களால் சொல்லப்படும் கதைகளின் அடிப் படையில் நம்பும் சமுதாயம் அவளுக்கு எப்படி

உரிமைகளையோ சுரத்திரத்தையோ தந்திடும்?

கிரேக்கம் பண்பாட்டின் படிக்கட்டுகளில் பாதம் பதிக்கும் முன்னவர்வரை பெண்களைப் பற்றிய இந்தச் சிந்தனையே அவர்களின் சமுதாய அமைப்பில் கோலோச்சியது.

அவர்கள் நாகரிகத்தில் – பண்பாட்டில் சற்று முன்னேறிபோது, பெண்கள் சற்றுக் கண்ணிய மாக நடத்தப் பெற்றார்கள். ஆனாலும் சிந்தனை ஓட்டத்திலும் செயல்பாட்டுக் களத்திலும் அவள் தீமைகளின் பிறப்பிடம் என்றே பார்க்கப்பட் டாள். நாகரிகத்தில் கிரேக்கம் இன்னும் கொஞ்சம் முன்னேறியபோது அவளுடைய நிலை இன்னும் கொஞ்சம் முன்னேறியது. அவள் குடும்ப அமைப் பில் முக்கியமானவளாகக் கருதப்பட்டாள்.

நாட்கள் நகர, நகர அவள் இல்லத்தரசி 'Queen of Homes' என்ற நிலையை அடைந்தாள்.

அவளின் நிலை வீட்டின் நான்கு சுவர்களுக் குள் நன்றாக முன்னேறி இருந்தது. அவள் வீட் டுக்குள் சற்றே அதிகாரம் கைவரப்பெற்றவளாக வாழ்ந்தாள்.

பெண்களின் கற்பு கண்ணியம் பெற்றது. கற்புக்கரசிகள் சமுதாய அமைப்பால் கண்ணியம் பெற்றார்கள்.

கிரேக்கத்தின் சீமான்கள் என்றழைக்கப்பட்ட வாழ்க்கை தரத்தால் உயர்ந்தவர்களின் இல்லத்து அரசிகள் சீமாட்டிகளாய் நடத்தப்பட்டார்கள். இந்தச் சீமாட்டிகள் இல்லத்தரசிகள் பர்தா அணிந்திருந்தார்கள்.

சீமான்களின் இல்லங்களில் ஆண்களுக்கென தனி வதியுமிடங்களும், பெண்களுக்கென தனி வதியுமிடங்களும் இருந்தன.

சீமான்களோடு வாழ்ந்த சீமாட்டிகள், பொது இடங்களில் காட்சிப் பொருளாக எப்போதும் வந்ததில்லை.

அங்கே ஆண்களும் பெண்களும், பொது இடங்களில் கூடியதுமில்லை, குதூகலித்தது மில்லை – என்றொரு நிலை வந்தது.

கற்புடைய பெண்கள் கண்ணியமாக நடத் தப்பட்டார்கள். 'கற்பு' என்பது விலை மதிப்பற்ற பண்பாகக் கருதப்பட்டது.

திருமணத்தின் மூலம் – மண ஒப்பந்தங்களின் வழி வரும் உறவுகள் கண்ணியமானவையாகப் பார்க்கப்பட்டன.

பெண்களின் ஒழுக்கம், கற்பு இவற்றின் அடிப்படையில் அவர்கள் சீமான்களுக்கும், கோமான்களுக்கும் இல்லத்தரசிகளாயினர்.

ஒழுக்கக் கேடுகள் விபச்சாரம் இவை வெறுக் கத்தக்க குணங்களாகப் பார்க்கப்பட்டன.

இங்கொன்றும், அங்கொன்றுமாகத் தவறுகள் நடந்தாலும் அவை மொத்தமாக கண்ணியக் குறைவானவையாகவும், கண்டிக்கத் தக்கவை யாகவுமே பார்க்கப்பட்டன.

இந்த ஒழுக்கம் களைக்கட்டிக் கொண்டி ருந்தபோது

– கிரேக்கம் உலகில் தலை நிமிர்ந்து நின்றது.

– கிரேக்கம் ஆற்றல்களின் பிறப்பிடமாக இருந்தது.

– கிரேக்கம் நாட்டு மக்கள் – இளைஞர்கள் சாதனையாளர்களாக உருவெடுத்தார்கள்.

கிரேக்கம் முன்னேற்றம் என்ற கட்டை நோக்கிப் பயணம் செய்தார்கள்.

புதிய உலகொன்று படைத்துக் கொண்டிருந் தார்கள் கிரேக்கத்து வாலிபர்கள்.

கிரேக்க நாகரிகம் தகத்தகாயமாக ஜொலித் துக் கொண்டிருந்தது.

முன்னேற்றத்தின் முகட்டிலே நின்று கொண் டிருந்தபோது, அவர்களின் ஆண்கள் சற்று சல்லா பித்து வாழத் தொடங்கினார்கள். கூட ஒழுக்கங் களில் வீழ்ந்தார்கள்.

பெண்கள் கற்புக்கரசிகளாகப் பார்க்கப்பட்ட போதும் ஆண்கள் ஒழுக்கத் தவறுகளில் வீழ்வதை தவறெனக் கருதிடவில்லை.

முன்னேற்றம் தந்த மமதையால் அவர்கள் "அனுபவிப்பது" என்ற போர்வையில், அடுத்த பெண்களை நாடினார்கள். விபச்சாரம் தலை யெடுத்துத் தழைக்கத் தொடங்கியது.

ஒழுக்கங்கெட்ட பெண்களோடும் தங்கள் அழகை கடைவிரித்தப் பெண்களோடும் மகிழ்ந் திருப்பது தவறில்லை என்ற தவறான எண்ணம் கிரேக்கத்து மக்களின் மனங்களில் புகுந்தன.

இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்

## சீனாவின் பண்பாடும் பெண்களும்

சீனா அனைத்துத் துறைகளிலும் வேகமாக முன்னேறி வரும் ஒரு நாடு. அதனால் அது பெண்கள் குறித்துக் கொண்டுள்ள கொள்கை ஆழ்ந்து கவனிக்கத்தக்கது.

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் - செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் - பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை - டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 - விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் - அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்-
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 16 ரூ. 10.00

38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? -
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் - பக்கம் :8 ரூ. 10.00

39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? -
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் - பக்கம் : 36 ரூ. 25.00

40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00

41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00

42. கூரியூர் ஜின்னா ஷஹீத் - மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00

43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00

44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00

45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்-
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00

02. மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலித் படுகொலைகள்-
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00

03. குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் -
ராணா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

## BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00

02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00

03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00

04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00

05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00

06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00

07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00

08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00

09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00

10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது - டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00

02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி - கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.